


நடுநிலை இதழ்
# தினப்புயல்
news
THINAPPUYAL
தினப்புயல்
REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06

தினப்புயலில்
சிறப்பு விளம்பரம்
விசேட விலைக் கழிவுடன் உங்கள் விளம்பரங்களை பிரசுரிக்க...
0778195947,
0776473692

மலர்-01 Tel&Fax- 0242227558, Hot line: 0711850885. Email:thinappuyal2014@gmail.com, www.thinappuyalnews.com இதழ் -155

## இலங்கையின் இனப்பிரச்சினையில் சர்வதேச விசாரணையின் அவசியம் என்ன?








## யாழ் நிலத்தடி நீர் மாசடைவு தொடர்பில், அமைச்சர் ஐங்கரநேசனின் மீது குற்றஞ்சாட்டுவது தவறு







## ஹரிஷ்ணவியின் கொலைக் குற்றவாளியை பொலிஸ் மோப்ப நாய் காட்டிக்கொடுக்கவில்லை - நடந்தது என்ன?






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் இனப்பிரச்சினையில் சர்வதேச விசாரணையின் அவசியம் என்ன?



தமிழீழ விடுதலைப்புலிகளுடைய போராட்டம் முற்றுப்பெற்று 06ஆண்டுகளைக் கடந்துள்ள நிலையில் குறிப்பாக 2000இற்குப் பின்னர் இடம்பெற்ற யுத்த நடவடிக்கைகளை கண்டுகொள்ளாத சர்வதேசம் இன்று போர்க்குற்ற விசாரணை என்று ஐ.நா சபையில் அலட்டிக்கொள்வதென்பது காலத்தை வீணடித்து. தமிழ் - சிங்கள இனத்திற்கு ஒரு சுமுகமான நிலைமையினை தோற்றுவிப்பதுடன் தமது தேவைகளைப் பூர்த்தி செய்துகொண்டு அதனை இடை நிறுத்துவதாகும். தமிழ் மக்களுடைய பிரச்சினைகளுக்கான தீர்வுத் திட்டங்கள் அமெரிக்கா, சீனா, ரஷ்யா, இந்தியா, நோர்வே, பிரித்தானியா போன்ற நாடுகளால் பல்வேறு தடவைகள் முன்னெடுக்கப்பட்டன. ஆனால் இவையனைத்தும் தோல்வியிலேயே முடிவடைந்தது எனலாம். முள்ளிவாய்க்காலில் ஒரு இலட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் கொல்லப்பட்டும், ஐந்து இலட்சத்திற்கும் மேற்பட்டோர் இடம்பெயர்ந்து அகதிகளாக தஞ்சமடைந்திருந்த காலத்திலும் இந்த சர்வதேசங்கள் பார்த்துக்கொண்டிருந்தன.

ஈராக், ஈரான், சிரியா, வட கொரியா, மியன்மார், பாகிஸ்தான் போன்ற நாடுகளில் யுத்தத்தை திட்டமிட்டே அமெரிக்கா, சீனா, ரஷ்யா, இந்தியா, நோர்வே, பிரித்தானியா போன்ற நாடுகள் ஏவிவிட்டிருந்தன. இதற்கான உடனடித் தீர்வுகளையும் அவர்கள் பெற்றுக்கொடுத்திருந்தனர். ஆனால் இன்னமும் இந்நாடுகளில் எங்காவது ஒரு பகுதியில் யுத்தம் நடைபெற்றுக்கொண்டுதான் இருக்கின்றது. அதிகூடிய தீவிரவாதிகள் பாகிஸ்தானில் இருந்தே வருகின்றனர். அங்கு கந்தகார் போன்ற பகுதிகளில் லக்சரி தொய்பா, ஹமாஸ், அல்கைதா போன்ற பல்வேறு இஸ்லாமிய தீவிரவாதிகள் செயற்பட்டு வருகின்றனர். ஆனால் இலங்கையில் மாத்திரம் விடுதலைப்புலிகளையும், அவர்களின் போராட்டத்தையும் சர்வதேச நாடுகள் அழித்தொழிப்பதில் தீவிரம் காட்டியது ஏன்? கடல், வான், தரை, தற்கொலை என இந்த நான்கு படைகளையும் விடுதலைப்புலிகள் கொண்டிருந்தமையா? இல்லை. பிராந்திய வல்லரசுகள் தமது பாதுகாப்பினை பலப்படுத்திக்கொள்வதற்காக விடுதலைப்புலிகளை ஒட்டுமொத்தமாக இணைந்து அழிப்பதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். பாகிஸ்தானை எடுத்துக்கொண்டால் இன்னமும் யுத்தம் இடம்பெறுகிறது. சிரியாவில் ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பின் தீவிரவாதச் செயற்பாடுகள் தொடர்ந்தும் இடம்பெறுகிறது. விடுதலைப்புலிகளின் போராட்டம், வளர்ச்சி என்பது உலகமே வியக்கும் அளவிற்கு அதனது செயற்பாடுகள் அமைந்திருந்தது. விடுதலைப்புலிகளது யுத்தப்பொறிமுறை 04 கட்டங்களாக மாற்றம் பெற்றது. விடுதலைப்போராட்டத்தின் வளர்ச்சியால் இலங்கையில் இன்னுமொரு நாடு உருவாகும். நீதி, நிர்வாகம் போன்ற துறைகளை கட்டமைப்பாக விடுதலைப்புலிகள் கொண்டிருந்தமையின் விளைவாக விடுதலைப்புலிகளையும் போராட்டத்தினையும் அழித்தொழிக்க சர்வதேசம் திட சங்கற்பம் பூண்டது. விடுதலைப்புலிகளுடைய வளர்ச்சி எவ்வாறிருந்தது என்பது பற்றி பார்க்கும்போது, ஈழப்போர் வரலாற்றில் இலகுரக விமானங்களை வைத்து, வான் ஆதிக்கத்திலும் பலமான நிலையில் இருந்து உலகில் வேறெங்கும் நிகழாத வரலாற்றுப் பதிவை உருவாக்கிய பிரபாகரன் மூன்றாம் கட்ட ஈழப்போருக்கும், நான்காம் கட்ட ஈழப்போருக்கும் இடையில் நிலவிய போர்நிறுத்த காலத்தில், ஒரு மென்தீவிர யுத்தத்தினை கையாண்டார். அந்தக் காலகட்டத்தில், இருதரப்புமே ஆட்லறிகள், மோட்டார்கள், கொண்டு மோதிக்கொள்ளாவிட்டாலும், தமது புலனாய்வுப் பிரிவுகள் மூலம் மோதிக் கொண்டன. துப்பாக்கிகள் மூலமும் மறைமுகமாக சண்டையிட்டன. ஒருவரையொருவர் சுட்டுக்கொன்றன. ஆழ்கடலில் விடுதலைப்புலிகளின் ஆயுதக்கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்ட சம்பவங்களும் இடம்பெற்றன. கடற்படைக்கப்பல்கள்மீதான கரும்புலித் தாக்குதல்களும்நடந்தன. அதேவேளை, கொழும்பிலும் பிற பகுதிகளிலும் இராணுவப் புலனாய்வுப் பிரிவின் உயர் அதிகாரிகளை வேட்டையாடும் சம்பவங்களும் நடந்தன. இந்த மென்தீவிர யுத்தம் பிற்காலத்தில், குறிப்பாக, 2005 டிசம்பரில், சரத் பொன்சேகா இராணுவத் தளபதியாகப் பொறுப்பேற்ற பின்னர், கிளைமோர் தாக்குதல்களும் இடம்பெற்றன. இது தனியே இராணுவத்தினர் மீது இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் மட்டும் நடக்கவில்லை. புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளிலும் இடம்பெற்றன.

மாவிலாறு அணைக்கட்டைப் புலிகள் மூடிய பின்னர், அதனைக் கைப்பற்றும் இராணுவ நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. அதுநான்காவது கட்ட ஈழப்போரின் தொடக்கம் எனலாம். அத்துடன், ஆட்லறி தாக்குதல்களும், விமானக்குண்டு வீச்சுகளும் ஆரம்பமாகின. ஆனாலும், போர்நிறுத்த உடன்பாடு நூலிழையில் தொங்கிக்கொண்டிருந்தது. கடைசியாக, 2006 ஓகஸ்ட் 11ம் திகதி, முகமாலை முன்னரங்கில் விடுதலைப் புலிகள் தொடுத்த பாரிய தாக்குதலை அடுத்து, நான்காவது கட்ட ஈழப்போர் அதிகாரபூர்வமாக வெடித்தது.

ஈழப்போர் வரலாற்றில், மிகவும் நீண்டதும், போரிடும் தரப்பினருக்குப் பாரிய இழப்புகளை ஏற்படுத்தியதுமான மூன்றாம் கட்ட ஈழப்போர், விடுதலைப் புலிகளை சமபலம் கொண்ட சக்தியாக, இலங்கை அரசை ஏற்க வைத்ததுடன் நிறைவுக்கு வந்தது. 2002 பெப்ரவரியில், போர்நிறுத்த உடன்பாடு முறைப்படி கையெழுத்திடப்பட்ட பின்னர், 2006 ஜூலையில்மாவிலாறில்போர்வெடிக்கும் வரை, ஒரு நீண்ட அமைதியையும் சந்திக்கவேண்டிய நிலை ஏற்பட்டது. கிட்டத்தட்ட, நான்கு ஆண்டுகளுக்கு மேலாக, போரற்ற அந்த அமைதி நிலை நீடித்தது. அதனை முழுமையான அமைதி நிலை என்று கூறமுடியாது. இன்னொரு போருக்கான ஆயத்தநிலை என்று உறுதியாகக் கூறலாம்.

ஆரம்பத்தில், அமைதியான சூழல் நிலவியபோதும், பின்னர் மெல்ல மெல்ல ஒரு நிழல் யுத்தத்தினுள் அந்த அமைதிக்காலம் நுழைந்தது. ஒரு கட்டத்தில் அது ஒரு மென்தீவிர யுத்தமாக மாறியது. கடைசியாக அந்த அமைதியை முறித்துக்கொண்டு நான்காவது கட்ட ஈழப்போர் வெடித்தது. போர்நிறுத்தம் நடைமுறையில் இருந்தபோதிலும், இருதரப்புமே தம்மைப் போருக்குத் தயார்ப்படுத்திக் கொண்ட அமைதிக்காலம் அது. அந்தக் காலகட்டத்தில், இராணுவத் தலைமையக [illegible] மேற்கோள்காட்டும் மற்றொரு ஆய்வு அறிக்கை ஒன்று வெளியானது. அந்த ஆய்வை செய்திருந்தவர் மருத்துவ கலாநிதி ருவான் ஜெயதுங்க. இலங்கையில் போரிடுவோரை அடிப்படையாகக் கொண்டு நடத்தப்பட்ட, போர் அழுத்தங்களின் உளவியல் முகாமைத்துவம் (Psychological Management of Combat Stress – A Study Based on SriLankan Combatants) என்ற ஆய்வே அது. அந்த ஆய்வுக்காக, இராணுவத்தரப்புக் கொடுத்த புள்ளிவிபரங்களின் படி, மூன்று கட்ட ஈழப்போர்களிலும் கொல்லப்பட்ட இலங்கை இராணுவத்தினரின் எண்ணிக்கை 17,066 ஆகும். அந்தக் காலகட்டத்தில், 9220 அதிகாரிகளும், 20,266 படையினருமாக, மொத்தம், 29,486 படையினர் காயமடைந்து, உடல் உறுப்புகளை இழந்ததாக அந்த ஆய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

விடுதலைப்புலிகள் தரப்பில் அந்தக் காலகட்டத்தில் 17,903 பேர் மரணமானதாகவும், அந்த ஆய்வறிக்கையில் கூறப்பட்டுள்ளது. எனினும், இராணுவத் தலைமையகத்தினால், அண்மையில் ஆங்கில ஊடகவியலாளர் ஒருவருக்கு கொடுக்கப்பட்ட புள்ளிவிபரங்களின்படி, காணாமற்போனவர்களையும் சேர்த்து, மூன்றாம்கட்ட ஈழப்போரின் முடிவில் கொல்லப்பட்ட படையினரின் எண்ணிக்கை 18,123 ஆகும். (ஈழப்போர் -1இல்-1031 பேர், ஈழப்போர்-2 இல் 4535 பேர், ஈழப்போர்-3 இல் 12,557பேர்). இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்ட போது, காணாமற்போனவர்களை கொல்லப்பட்டவர்களாக இராணுவத்தரப்பு கணிக்கவில்லை.

இதனால், மூன்று கட்ட ஈழப்போர்களிலும் காணாமற்போனதாக அறிவிக்கப்பட்ட, 3718 படையினரையும் உள்ளடக்காமலேயே, அந்த ஆய்வுக்காக, 17,903 படையினர் கொல்லப்பட்டதான தரவு வழங்கப்பட்டுள்ளது என்று கருதலாம். இந்த ஆய்வுக்காக வழங்கப்பட்ட தரவிலும், அண்மையில் வழங்கப்பட்ட தரவுக்கும் இடையிலே பெரிய வேறுபாடுகள் . இல்லை. ஆனால், காணாமற்போன படையினர் இதில் உள்ளடக்கப்படாது போனால் மிகப்பெரிய வேறுபாடு இருப்பதை காணலாம். அதுபோலவே, மூன்று கட்ட ஈழப்போர்களிலும், படுகாயமடைந்து அங்கவீனமடைந்த படையினரின் மொத்தத்தொகை, 29,486 என்று கூறுகிறது இந்த ஆய்வு. ஆனால், இராணுவத் தலைமையகம் அண்மையில் வழங்கிய, ஈழப்போர்கள் பற்றிய தனித்தனியான புள்ளிவிபரங்களின்படி, மூன்று கட்ட ஈழப்போர்களிலும்படுகாயமடைந்தபடையினரின் மொத்த எண்ணிக்கை, 15,606 ஆகும். (ஈழப்போர்-1இல் - 180 பேர், ஈழப்போர்-2 இல் 2671 பேர், ஈழப்போர் -3 இல் 12,755 பேர்). இதன்படி, ஆய்வு அறிக்கைக்கு வழங்கப்பட்ட தரவுக்கும், இந்தத் தரவுகளுக்கும் இடையில் மிகப்பெரிய வேறுபாடுகள் உள்ளதைக் காணலாம். இதில் சரியான எண்ணிக்கை எது என்று, சுயாதீனமான தரப்புகளால் முடிவுக்கு வருவது முடியாத காரியம். இந்தத் தொடரின் ஆரம்பத்திலேயே குறிப்பிட்டது போன்று, [illegible] கடந்த காலங்களில் வழங்கப்பட்ட புள்ளிவிபரங்களுக்கு இடையில் பெரியளவில் முரண்பாடுகள் இருந்தன என்பதே முக்கியமானது. ஆழ்கடலில் விடுதலைப்புலிகளின் ஆயுதக்கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்ட சம்பவங்களும் இடம்பெற்றன.

கடைசியாக, 2006 ஓகஸ்ட் 11ம் திகதி, முகமாலை முன்னரங்கில் விடுதலைப் புலிகள் தொடுத்த பாரிய தாக்குதலை அடுத்து, நான்காவது கட்ட ஈழப்போர் அதிகாரபூர்வமாக வெடித்தது. அந்தப்போர் 2009 மே 18ம் திகதி முள்ளிவாய்க்காலில் மூச்சடங்கும் வரை, ஓயாமல் நடந்தது. முகமாலையில் புலிகள் தொடுத்த போர், யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றும் பெருந்திட்டத்தின் ஒரு பகுதியாகும். அதற்காக புலிகள் மண்டைதீவு, அல்லைப்பிட்டி பகுதிகளிலும் தரையிறங்கினர். ஆனால், முகமாலை முன்னரங்கை உடைத்து எழுதுமட்டுவாள் வரை முன்னேறிய புலிகளால் கிளாலிப் படைத்தளத்தை வீழ்த்த முடியாதுபோனது. அதுபோலவே மண்டைதீவு, அல்லைப்பிட்டியிலும் தொடர்ந்து தாக்குப்பிடிக்க முடியாது போனது. அதனால், புலிகளின் யாழ்ப்பாணம் மீதான தாக்குதல் திட்டம் பிசுபிசுத்துப் போய் கைவிடப்பட்டது. எனினும், நான்காவது கட்ட ஈழப்போரில் வடமுனையில் நாகர்கோவில், எழுதுமட்டுவாள், கிளாலி இராணுவ வேலியை கடைசிவரை பாதுகாப்பதில் விடுதலைப்புலிகள் உறுதியாக இருந்தனர். ஆனையிறவைப் படையினர் கைப்பற்றும் வரை அதைத் தக்கவைத்துக்கொண்டனர்.

நான்காவது கட்ட ஈழப்போரில், கிழக்கில் மூதூரைக் கைப்பற்றும் ஒரு தாக்குதலையும் புலிகள் நடத்தினர். ஆனால், சில நாட்களிலேயே அந்த முயற்சியும் படையினரால் முறியடிக்கப்பட்டது. இருவாரங்களுக்கு முன்னர், புத்தளம் கருவெலகஸ்வெவ பகுதியில் நடந்த வாகன விபத்தில் மரணமான, கேணல் ரவிந்திர ஹன்துன்பத்திரன இந்த முறியடிப்பில் முக்கிய பங்கு வகித்தவர். அப்போது மேஜராக இருந்த அவரது தலைமையிலான 2வது கொமாண்டோ படைப்பிரிவு தான், காலாற்படையினருடன் இணைந்து மூதூர் பிரதேசத்தில் புலிகளிடம் இழந்த பிரதேசங்களை மீட்டது.

நான்காவது கட்ட ஈழப்போரின் முக்கியமான ஒரு விடயம், விடுதலைப் புலிகளின் ஆட்லறிகள் கிழக்கிற்கும் பரவலாக்கப்பட்டது தான். 122மி.மீ, 130மி.மீ, 152மி.மீ ஆட்லறிகளை விடுதலைப்புலிகள் திருகோணமலையிலும், மட்டக்களப்பிலும் நிறுத்திச் சண்டையிட்டது ஈழப்போர் வரலாற்றில் அதுவே முதன்முறை. புலிகள் திருகோணமலைத் துறைமுகம், கடற்படைத் தளங்கள் மீது ஆட்லறிக் குண்டுகளை பொழிந்தபோது, அரசாங்கம் ஆடிப் போனது உண்மை.

அதுபோலவே இன்னொரு விடயம், விடுதலைப்புலிகளின் விமானப்படை. சில இலகுரக விமானங்களை வைத்து, வான் ஆதிக்கத்திலும் பலமான நிலையில் இருப்பதாக ஏற்படுத்திக்கொண்ட பிம்பம், அரசின் போர்த்திட்டத்தில் கணிசமான தாக்கங்களை ஏற்படுத்தியது. இன்றுவரை உலகில் அரசு இல்லாத அமைப்பு ஒன்று விமானப்படையை வைத்திருந்து, குண்டுகளை வீசியதான வரலாறு பதிவாகவில்லை. நவீன தொழில்நுட்பங்கள் வளர்ந்து வரும் நிலையில், இனிமேல் உலகில் வேறெங்கும் அப்படியொரு வரலாற்றுப் பதிவு உருவாகும் என்று எதிர்பார்ப்பதும் கடினம். நான்காவது கட்ட ஈழப்போர், இரண்டு தரப்பும் நவீன தொழில்நுட்பங்களையும், தந்திரோபாயத் தாக்குதல்களையும் கொண்டதாகவே தொடங்கியது.

இரணியன்

தொடரும்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தினப்புயல்
ஆசிரியர்பீடம்
இல:154, 6வது ஒழுங்கை,
தேக்கவத்தை, வவுனியா.

## தமிழ் மக்களுக்கான தீர்வுகள் ஒற்றுமையிலேயே தங்கியுள்ளது

பிரிவினைவாதம். இனவொற்றுமை என்பது வேறு வேறு. இனவொற்றுமை என்பது தமிழ் மக்களுக்கிடையே வலுவானதொரு சக்தியைக்கொண்டிருக்கவேண்டும். சிங்கள இனமானது தமது ஒற்றுமையினை வலுப்படுத்தியதன் காரணத்தினால் தான் தமிழினத்தின் போராட்டத்தினை முறியடிக்கும் வகையில் அவர்களின் வளர்ச்சி மேலோங்கியிருந்தது. இந்திய இராணுவத்தினரின் இலங்கை வருகைக்குப் பின்னர் சமாதான ரீதியாக மாற்றம் ஏற்படும் என அனைவராலும் எதிர்பார்க்கப்பட்டது. மாறாக அது ராஜீவ்காந்தியின் கொலையுடன் நிறைவடைந்தது. அதிலிருந்து இன்றுவரை இந்தியா தமிழினத்தை எதிரியாகவே பார்த்துவருகின்றது. 1987களின் காலப்பகுதியில் வடமராட்சியில் "ஒபரேஷன் லிபரேஷன்" என்ற இராணுவ நடவடிக்கை மூலம் பிரபாகரனையும், தமிழினத்தையும் மீட்டெடுக்கும் வகையில் அமைந்திருந்தது இந்திய அரசின் வருகை. அதன்பின் முள்ளிவாய்க்கால்வரை கொண்டுசெல்லப்பட்ட இப்போராட்டம் ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் கொல்லப்பட்டபோதும் ஏன் தமிழ் மக்களது பிரச்சினைகளுக்கான தீர்வுகள் எட்டப்படவில்லை.

சர்வதேச அரசுகளும் கூட இதனை வேடிக்கைப் பார்த்தது. போராட்டத்தின் ஆரம்பத்தில் அனைத்து இயக்கங்களும் ஒரே குறிக்கோளுடன் தமிழீழம் என்கின்ற கனவோடு பயணித்தன. இதனை மழுங்கடிக்கச் செய்தது இந்தியரசு. அனைத்து இயக்கங்களும் ஒற்றுமையாகவிருந்தபோது தமிழினத்தை அசைக்கமுடியாத நிலையில், இதனால் தமக்கு பாதகமான நிலைமைகள் ஏற்படும் என்கின்ற காரணத்தினால் இதனை சீர்குலைத்தது இந்தியா. இதனை நுட்பமான முறையில் இலங்கையரசு கையாண்டது. தமிழினத்திற்கும், இந்தியரசிற்கும் இடையில் நிரந்தர பகைமையை உருவாக்க, ராஜீவ்காந்தி கொலைசெய்யப்படுவதன் ஊடாகவே அது சாத்தியமாகும் என திடசங்கற்பம் பூண்ட இலங்கையரசு, விடுதலைப்புலிகளை இதற்குப் பகடைக்காய்களாகப் பயன்படுத்தியது.

இதன் காரணமாக ராஜீவ்காந்தி கொலைசெய்யப்பட, தமிழினம் மற்றும் விடுதலைப்புலிகளின் மீது சிறிதும் நம்பிக்கை கொள்ளத் தவறியது இந்தியா. அதன் பின்னர் இந்தியரசு ஒவ்வொரு இயக்கங்களுக்குள்ளும் பிரச்சினைகளைத் தோற்றுவித்து விடுதலைப்புலிகளைத் தனிமைப்படுத்தியது. அதன்பின் அவர்களது இலக்கு இலங்கைவாழ் தமிழினத்தை, பிரபாகரனை அழிக்கவேண்டும் என்பதாக இருந்தது. இவற்றை சாதகமாகப் பயன்படுத்திக்கொண்ட இலங்கையை ஆட்சிசெய்த 16 ஆட்சியாளர்களும் விடுதலைப்புலிகளையும், அவர்களது போராட்டத்தையும் அழித்தொழிக்கவேண்டும் என்கின்ற ஒரே நோக்கோடு செயற்பட்டனர். இதில் மாற்றுக்கருத்தில்லை.

யுத்தம் உச்சநிலையை அடைந்தபோது விடுதலைப்புலிகளைக் கட்டுப்படுத்த சர்வதேசத்தினரை அழைத்து சமாதானப் பேச்சுக்கள் என்ற போர்வையில் தமது புலனாய்வுக் கட்டமைப்புக்களைப் பலப்படுத்தி, விடுதலைப்புலிகளின் கட்டமைப்புக்களை எவ்வாறு உடைப்பது என நன்கு திட்டமிட்டு, இறுதியில் பிரபாகரனுக்கு நம்பிக்கையாக இருந்த கருணாவையும் பிரித்தெடுத்து, வெற்றியினை இன்று உறுதிப்படுத்திக்கொண்டது இலங்கையரசு. இலங்கை வரலாற்றில் திம்பு-டோக்கியோ வரை என பல்வேறான சமாதான பேச்சுக்கள் முன்னெடுக்கப்பட்டன. அவைகளில் ஒன்றேனும் சாத்தியமானதா? என்றால் இல்லை. மீண்டும் அரசினை நம்புகின்றோம் எனக்கூறிக்கொண்டிருக்கும் த.தே.கூட்டமைப்பு சிந்திக்கவேண்டும். த.தே.கூட்டமைப்பு, வட-கிழக்கு மாகாண சபைகளின் பலம் ஒரு சக்தியாக மாற்றம் பெறாது. முரண்பாடான கருத்துக்களின் மூலம் அரசிற்கு எமது பலவீனங்களை வெளிக்காட்டி தொடர்ந்தும் தவறுகளை செய்துவருகின்றோம். தமிழ் மக்களுக்கான தீர்வுத்திட்டங்கள் கிடைக்கவிருந்த சமயத்தில் பிரிவினைகளை உருவாக்கி நழுவிப்போன சந்தர்ப்பங்கள் அதிகம். த.தே.கூட்டமைப்பு ஒற்றுமையை வளர்ப்பதன் ஊடாகவே தமிழ் மக்களுக்கான தீர்வுகளைப் பெற்றுக்கொள்ள முடியும். இல்லையேல் மீண்டுமொரு ஆயுத கலாசாரம் இந்நாட்டில் உருவாக வழிசமைக்கும் எனலாம்.

79

நாங்கள் போய்ச் சாப்பிடுவம்" என்று சொல்லிக்கொண்டிருக்க, "என்னவாம் கொட்டியா என்று அபிநயாவை இழுத்துப்பிடித்துக்கேட்டார் ஒருவர். இரு படையினரும் எழுந்து பின்னால் போகவும். "கொட்டியா இங்க வராதெண்டு சொல்லுறாங்கள்" என்றார் மிக இரகசியமாக. "அடேய் மடையா. கொட்டியாவின்ர காது உன்ர காலுக்குக் கீழே கிடக்கு. உன்ர நடு வீட்டுக்க நாங்கள் வந்து நிக்கிறம். இப்பதான் நாங்கள் வருவமோ இல்லையோ எண்டு யோசிக்கிறாய்" காற்றலைகள் [illegible] வந்தன.

இத்தாவில் களத்தை வென்றபின் அதற்குள் நின்ற கொம்பனி மேலாளர் ஜமுனா உட்பட ஆனந்தி, கலைக்குயில் ஆகியோரின் அணி. மீண்டும் தொண்டைமானாறுநீரேரி கடந்தது. அதே நேரம் புதிதாக அடிப்படைப் பயிற்சியை முடித்துவந்த போராளிகள் இத்தாவில் களமுனைக்கு அனுப்பப்பட்டனர். அந்தக் கொம்பனி மேலாளராக மாலதி படையணியின் தற்போதைய தளபதி தமிழ்செல்வி சென்றார். இப்போது இத்தாவில்

வந்தார். இங்கும் சிறிவாணியினது போர்ப்பட்டியல் நீண்டது. பூநகரி, முகாவில் பேசாலை, வெற்றிலைக்கேணி...என இன்னும்பல இராணுவத்தளங்கள்மீதான வேவு நடவடிக்கைகளில் ஈடுபட்டார். இந்த நீண்ட போர்க்களங்களில் அவர் சாதித்தவைகளோ ஏராளம். இப்போது அந்தச் சாதனைகளில் பொருத்த வடிவமாகி உயர்ந்து நிற்கிறார் மேஜர் சிறிவாணி.

குடாரப்புக் கடலிலிருந்து தாக்குதலணிகள் தரையிறக்குகின்ற அதே

# உலக வரலாற்றில் விடுதலைப் புலிகளின் மாலதி படையணி

என்று சொல்ல நினைத்தனர். மூவரும் பின்னே வந்தனர். இப்படிஒவ்வொருநாளும் சுவையான தகவல்களுடன் வேவு அணி வந்துசேரும்.

எப்போதும் வெடிபொருட்களை மேலதிகமாக வைத்திருக்கவேண்டும் என்பதற்காக பாவிக்கப்பட்ட உடனேயே அனைத்தும் நிரப்பப்பட்டன. வன்னித் தளத்திலிருந்து இத்தாவில் களத்துக்கு வந்து சேருகின்ற வெடிபொருட்களை உடனுக்குடன் முன்னணிக்கு அனுப்பும் பாரிய பணி பின்னணியில் செயலாற்றிய அனைவருக்குமிருந்தது. மருத்துவப் போராளிகள், அறிக்கையாளர்கள் என அனைவருமே தமது பணியுடன் மேலதிக பணியையும் செய்யவேண்டியிருந்தது. முற்பட்ட காலங்களில் கிடையாது. எல்லாமே நாங்கள்தான் செய்ய வேண்டும்.

"சுடுநிரும் : நானே. உதவியா

களத்திலிருந்து வெளியே வந்த ஜமுனாவின் அணி முழுமையாக்கப்பட்டது. மீண்டும் இயக்கச்சிப் பகுதிமீது தாக்குதல் நடத்தப்பட்டு யாழ் நெடுஞ்சாலை கடந்து புதுக்காட்டுச் சந்திப் பகுதியில் புதிய நாக்கு ஒன்று அமைக்கப்பட்டது. ஆனையிறவு இறுக்கப்பட்டதுடன் அப்பகுதிநோக்கித் தாக்குதல் நடந்துகொண்டிருக்கும்போதே இயக்கச்சிப் பகுதியில் இறங்கி பளைப் பகுதியைநோக்கி இடங்களைக் கைப்பற்றிக்கொண்டு சென்ற அணிகளுடன் ஆனந்தியின் அணியும் பங்குகொண்டது. தறிக்கப்பட்ட தென்னந்தோப்புகள். ஆட்லறித் தளங்களின் மண் அரண்கள் என்பன கடந்து நகர்ந்தன அவ்வணிகள். நகர்ந்தது என்பதைவிட ஓடிஓடிக் கைப்பற்றியது என்றே சொல்லலாம்.

நேரம் பளையில் ஆட்லறித்தளம் ஒன்று பற்றியெறிந்துகொண்டிருந்தது. தரையிறக்கப் பணியை இலகுவாக்க, இராணுவத்தைத் திசைதிருப்பி, பகைவின் மையத்திலேயே அவர்களது பலத்தை உடைத்தெறிந்து கொண்டிருந்தது ஒரு கரும்புலிக்கூட்டம். அந்தக் கூட்டத்தினுள் தானும் ஒருவராய் நின்று ஆட்லறிகளின் தகர்ப்புக்கு வழி செய்திருந்தார் மேஜர் சுதாஜினி. ஆரம்பப் பயிற்சியுடன் மாலதி படையணியில் இணைக்கப்பட்ட இவர் சிறிது காலத்தின் பின் மாலதி சிறப்பு அணியில் இணைந்தார். இவரது நிதானமான,நுணுக்கமான, அதேவேளை வேகமான செயற்பாடுகள் இந்த சிறப்பு அணியின் கண்ணிவெடியாளராக இவரை மாற்றிது. மணலாற்றுக் காட்டில் வேவுப் பணியில் ஈடுபட்டதுடன் கல்யாணபுரத் தாக்குதலிலும் பங்குகொண்டார். சிறப்புப் படையணிக்குப் பெருமை தேடித்தந்த அம்பகாமச் சமரிலும் சுதாஜினியின் பங்கு குறிப்பிடத்தக்கது.

அதேபோல் இவ்வணியிலே மேஜர் சசியும் இணைந்திருந்தார். பயிற்சியிலேயே காடுபற்றிய அனுபவத்தை உள்வாங்கும் பெரும் முயற்சி. காவலுலாக்கள், பதுங்கித் தாக்குதல்கள் என பயிற்சியும், கடமையும் ஒன்றாக நடந்துகொண்டிருக்க, அந்த வனத்தின் மூலை முடுக்கெங்கும் நடந்து திரிந்தார் சசி. திறமை அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டவர்களே உள்வாங்கப்பட்ட இவ்வணியிலும் தன் திறமையைக் காட்டினார். ஆர்வத்துடன் எதையும் நுணுக்கமாக அவதானிக்கும் ஆற்றல் இவருக்கு இயல்பானது. அதுவே அவரின் வளர்ச்சிக்கு இன்னும் உதவியது. இவ்வாறே தன் இலட்சியம் நோக்கிய பாதையில் இறுதிவரை நடந்தார் மேஜர் சசி. சத்தியா என்றதும் அவரது குள்ளமான உருவம்தான் நினைவுக்கு வரும். இந்த உருவத்துள் எப்படி எரிமலையைச் சுமக்க முடிந்தது? இந்த இதயத்துள் எப்படி புயலொன்று மையம் கொண்டது? இலட்சிய உறுதிக்கு உருவம் ஒரு பொருட்டல்ல என்பது இவரைப் பார்த்தாலே புரிந்துவிடும்.

1995இன் நடுப்பகுதியில் இயக்கத்தில் இணைந்ததிலிருந்து களமுனைகளிலேயே அவரது காலம் கழிந்தது. பின்னர் கரும்புலிகள் அணியின் நிர்வாகப் பணிக்குத் தெரிவுசெய்யப்பட்டபோதுதான் அவர்களின் வாழ்க்கை பற்றி அறியும் வாய்ப்புக் கிடைத்தது. அதுவே அவரது இலட்சியத்தை இன்னும் வீச்சாக்கியது. இறுதியில் தானும் அவ்வகையில் இணைந்துகொள்ள முயன்றபோது அவரது உயரம் அதற்குத் தடையாகவே இருந்தது. விடாமுயற்சியுடன் தொடர்ந்து தலைவருக்கு மடல் வரைந்துகொண்டிருந்தார். இறுதியில் அவரது வேண்டுகோள் நிறைவேறியது. பெரும் கனவோடு களம் சென்றார். தன் பணியை நிறைவேற்றினார். சமுத்திரவெட்டியில் என்றும் அழியாமல் வாழ்வார் சத்தியா.



வரும் நானே. மருத்துவரும் நானே" என்றவாறாகக் களமுனையின் தொகை சுருங்கியிருந்தது. ஒரு அணியின் மருத்துவப் போராளியாக நின்ற தவிர், பின்னணி நீரேரிக் கரையிலிருந்து முன்னரங்க நிலைகள்வரை வெடிபொருட்களுடனேயே திரிந்தார். அணிகளுக்கான வெடிபொருள் விநியோகத்தில் அவரது பங்கு முக்கியமானது. வெற்றியோ, தோல்வியோ இழப்புக்கள் ஒவ்வொரு களமுனைக்கும் வழமை என்பதுபோல் எமது பம்பல்களும், சிரிப்புகளும் வழமையாகிப்போகும். அங்கு எறிகணை விழுந்ததால் கிண்டப்பட்டுக் கிடந்த அந்தக் கிழங்குதான் இராசவள்ளிக் கிழங்கு என்பதைக் கண்டுபிடித்த பின்னர் இராசவள்ளிக் கிழங்குக் கஞ்சியால் களமுனையே கலகலக்கும். தென்மராட்சிப் பிரதேசத்தினுள் காப்புச் சூட்டணி, மறிப்பு அணி எல்லாம் விட்டு ஒரு கோழிக் கூட்டுக்குப் பதுங்கித் தாக்குதல் செய்ய முற்பட்டு, கூட்டோடு கோழிகளையும் தூக்கி வந்ததும் இங்கு தான் நடந்தது.

இவ்வாறு சிரித்தபடி சாவுக்குள் வாழ்வோராய் நாம் இருக்க, ஆனையிறவுப் புற்றுநோய் வளையத்தை இன்னும் இன்னும் இறுக்கும் செயல்களைக்

இந்நிலையில் ஆனையிறவுத் தளம் புலிகளால் மீட்கப்பட, பளைப் பகுதியும் ஆனையிறவைநோக்கி நின்ற தமிழ் செல்வியின் அணி ஆனையிறவுப் பகுதியிலிருந்து தாக்குதலைச் செய்துகொண்டு வந்த கஜனின் அணியுடன் கைகுலுக்கிக்கொண்டது. எழுதுமட்டுவாளை நோக்கியிருந்த முன்னரங்க நிலையினை நீட்டி கிளாலி வரை தமிழ் செல்வியின் அணி நிலையெடுத்துக்கொண்டது. நீண்ட காலமாக அடிமைப்பட்டுக் கிடந்த ஆனையிறவு புலிக்கொடி [illegible] [illegible] மூடிக்கிடந்த யாழ் [illegible] திறக்கப்பட்டது. [illegible]

[illegible] தீவிரத்தில் பல களங்கள் கண்டு வென்று நிமிர்ந்தவர்தான் சிறிவாணி. சிங்கபுர, மாஓயா, மணலாறு போன்றவை என நீளும் அவரது களங்களின் பட்டியல். அந்தப்போர் அனுபவத்துடனேயே [illegible]

தொடர்வான்...

தமிழீழ வரலாற்றில் தடம் பதித்தவர்கள்

| இல | பெயர் | சொந்தப் பெயர் | ஊர் | வீரச்சாவு | சம்பவம் |
|---|---|---|---|---|---|
| 504. | 2ஆம் லெப். [illegible] | [illegible] | [illegible] | 1998.09.27 | கிளிநொச்சி ஓயாத அலைகள்-2 |
| 505. | 2ஆம் லெப். [illegible] | [illegible] | [illegible] | 1998.09.27 | கிளிநொச்சி ஓயாத அலைகள்-2 |
| 506. | லெப். கெளசினி | [illegible] செல்வராசா | [illegible] | 1998.09.27 | கிளிநொச்சி ஓயாத அலைகள்-2 |
| 507. | லெப். கிருபா | பத்மாதேவி பெருமாள் | கிளிநொச்சி | 1998.09.27 | கிளிநொச்சி ஓயாத அலைகள்-2 |
| 508. | லெப். சுதா | துஷ்யந்தினி இரத்தினம் | யாழ்ப்பாணம் | 1998.09.27 | கிளிநொச்சி ஓயாத அலைகள்-2 |
| 509. | லெப். [illegible] | [illegible] | திருகோணமலை | 1998.09.27 | கிளிநொச்சி ஓயாத அலைகள்-2 |
| 510. | லெப். [illegible] | [illegible]பிள்ளை | யாழ்ப்பாணம் | 1998.09.27 | கிளிநொச்சி ஓயாத அலைகள்-2 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹரிஷ்ணவியின் கொலைக் குற்றவாளியை பொலிஸ் மோப்ப நாய் காட்டிக்கொடுக்கவில்லை



## நடந்தது என்ன?

கடந்த 16ஆம் திகதி வவுனியா உக்குலாங்குளப் பகுதியில் ஹரிஷ்ணவி என்கிற மாணவி தூக்கிலிடப்பட்டு சடலமாக மீட்கப்பட்ட அவர் வன்புணர்வுக்குள்ளாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டார் எனத்தெரிய வந்தநிலையில். பல்வேறான செய்திகள் திரிபுபடுத்தப்பட்ட நிலையில் ஊடகங்களில் வெளிவந்து கொண்டிருக்கின்றன. **இச்சம்பவத்தின் உண்மைத்தன்மை குறித்து தினப்புயல் பத்திரிகை ஆராய்ந்தபோது. இக்கொலைச் சம்பவம் தொடர்பில் ஹரிஷ்ணவியின் தாயாரான மாதினி கெங்காதரன் தெரிவிக்கையில்,** நான் காலையில் பாடசாலைக்கு செல்வதற்கு முன்னர் எனது மகளின் காலை உணவிற்காக சுசியத்தினை தயார் செய்து வைத்தேன். நான் செல்வதற்கு முன்பதாகவே எனது மகள் அதனை உண்டார். மதிய உணவையும் தயார்படுத்திவிட்டே நான் பாடசாலைக்குச்செல்வது வழக்கம். இவ்வாறிருக்கும்போது சம்பவ தினத்தன்று எனது மகள் என்னிடம் அம்மா உணவைத் தரவா? தண்ணீர் எடுத்துவைத்துள்ளீர்களா? எனக்கேட்டார். நல்ல மனதுடனே என்னை பாடசாலைக்கு வழியனுப்பினார். நீ ஏன் இன்று பாடசாலைக்கு வரவில்லை எனக்கேட்டபோது. வெள்ளை சீருடை அழுக்காகியிருக்கிறது. ஆகவே நான் இன்று வரவில்லை என்ற காரணத்தையே மகள் என்னிடம் தெரிவித்தார். அதன் பின்னர் நான் வவுனியா விபுலானந்தா பாடசாலையில் கற்பிப்பதனால் அங்கு சென்றுவிட்டேன்.

**பாடசாலை சென்ற அந்தநேர இடைவெளியில் நீங்கள் வீட்டில் இருக்கும் உங்கள் மகளுடன் தொடர்பினை மேற்கொண்டீர்களா?** இதற்கு இல்லை எனக்கூறிய தாய். **மகள் வீட்டில் தனிமையில் தான் உள்ளார் என்ற விடயம் பற்றி யாரிடமாவது தெரிவித்திருந்தீர்களா?** என வினவிய போது. இல்லை எனக்கூறிய அவர் **நீங்கள் பாடசாலைக்குச் செல்லும்போது காணியின் வெளிக்கதவினை எவ்வாறு பூட்டியிருந்தீர்கள்?** இதற்கு நான் கதவினை பூட்டினால் பூட்டிச் செல்லவில்லை எனக்கூறினார். **அருகில் இருக்கும் சைக்கிள் சேர்விஸ் கடையின் உரிமையாளர் பாலசிங்கம் ஜனார்தனிடம் மகளைப் பார்த்துக்கொள்ளுமாறு கூறினீர்களா? என வினவியபோது.** இல்லை எனக்கூறிய தாயார் நான் பாடசாலை முடித்து வீட்டிற்கு வந்து எனது மகளை அழைத்தேன். வெளிக்கதவு நான் பூட்டியதைப்போன்றே இருந்தது. முதலில் எனது மகன் தான் வீட்டிற்கு வந்து சகோதரியைப் பயமுறுத்துவோம் எனக்கூறி வீட்டிற்குள் பார்த்தான். அவர்தான் என்னிடம் அக்கா கட்டிலின் மேலே தொங்கிக்கொண்டிருக்கின்றார் எனக்கூறினார். அப்போது நான் உடனே வந்து அறையைப் பார்த்தபோது எனது மகள் தூக்கில் தொங்கியவாறு காணப்பட்டார். என்னைப் பயமுறுத்துவதற்காகத்தான் இவ்வாறு செய்கின்றாரா? எனப் பார்த்தேன். உடனே மருத்துவமனைக்குக் கொண்டுசெல்ல முற்பட்டேன். எனது மகள் இறந்துவிட்டாள் என்பதை என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. தூக்கிலிடப்பட்டிருந்த சமயம் எனது மகள் காற்சட்டை ஒன்றினையே அணிந்திருந்தார். அது சற்று விலகியிருந்தது. சற்று விலகிய நிலையில் உள்ளாடை காணப்பட்டது. உடனேயே நான் அந்த சுருக்குப் போடப்பட்டிருந்த சீலையினை அவிழ்த்து கட்டிலில் படுக்கவைத்து சாம்பல் நிற நீளக்காற்சட்டையினை அணிவித்தேன். வேறு எதுவும் அவரது உடலில் நான் மாற்றங்களைச் செய்யவில்லை. அருகிலிருந்த மருத்துவரை நாடினேன். அவர் வந்து பார்வையிட்டு பிள்ளை இறந்துவிட்டதாகக் கூறினார்.

அதன் பின்னர் அன்றைய தினம் இரவு 7.45மணியளவில் திடீர் மரண விசாரணை அதிகாரியான சிவநாதன் கிஷோர் அவர்கள் எமது வீட்டிற்கு பொலிஸ் சகிதம் வருகை தந்து விசாரணைகளை முன்னெடுத்தார். அவர் என்னிடம். **மகளுக்கு காதல் விவகாரங்கள் ஏதாவது இருக்கிறதா? யாரையாவது சந்தேகிக்கின்றீர்களா? பாடசாலை சீருடைப்பிரச்சினைக்காக உங்களது மகள் தூக்கில் தொங்கினாரா? பொய் சொல்லவேண்டாம். உண்மையைக் கூறுங்கள் என்றார்.** எனது மகளுக்கு இவ்வாறான காதல் விவகாரங்கள் எதுவும் இல்லை என்றே கூறினேன். அவ்வாறானவள் அவள் இல்லை. மேற்குறிப்பிடப்பட்ட விடயங்களையே நான் மரண விசாரணை அதிகாரிக்குத் தெரிவித்தேன். அதன் பின்னர் எமது மகளை பிரேத பரிசோதனைக்காக வைத்தியசாலைக்குக் கொண்டுசென்றுவிட்டார்கள். **"மருத்துவர்களின் அறிக்கையின்படி எனது மகள் கையடக்கத் தொலைபேசியின் சார்ஜ் செய்யப்படும் வயரினால் கழுத்து நெறிக்கப்பட்டு பாலியல் துன்புறுத்தல்களின் மூலமே கொலை செய்யப்பட்டிருக்கின்றார்"** எனத் தெரிவிக்கப்பட்டது.

மரண விசாரணை அதிகாரி ஒருசில விடயங்களை ஒத்துக்கொள்ளச் சொல்லிய அடிப்படையில் நான் ஒத்துக்கொண்டேன். காரணம் எனது மகளின் உடலை என்னிடம் இவர்கள் ஒப்படைக்கவேண்டும் என்பதற்காகவே. அதன் பின்னர் எனது மகளுடைய மரண சடங்குகள் நிறைவடைந்திருந்தது. இதற்கிடையில் ஊடகங்கள் பலவும் பல்வேறான கோணங்களில் செய்திகளை பிரசுரிக்க ஆரம்பித்துவிட்டன.

எனக்கும் சேர்விஸ் கடையின் உரிமையாளருக்கும் 10 வருடங்களாக நெருங்கிய தொடர்புகள் இருப்பதாகவும் இவ்விவகாரங்கள் எனது மகளுக்குத் தெரியவந்ததன் அடிப்படையிலேயே மகள் கடை உரிமையாளர் ஜனார்தனினால் கொலை செய்யப்பட்டிருக்கலாம்.

நானும் எனது பிள்ளைகளும் வெளிநாடு செல்ல முற்பட்டவேளை அதனை விரும்பாத சைக்கிள் கடையின் உரிமையாளர் எனது வீட்டிற்குள் அத்துமீறி நுழைந்து. எமது கடவுச்சீட்டு மற்றும் வீசாக்களை கிழித்தெறிந்துவிட்டதாகவும் நான் வெளிநாடு சென்றால் இவருக்கான சலுகைகள் நிறுத்தப்படும் என்பதான செய்திகளும். அத்தோடு அந்த சேவிஸ் கடையினை எனது செலவில்தான் அமைத்துக்கொடுத்ததாகவும். எனது கணவர் வெளிநாட்டில் இருப்பதன் காரணமாக இவரையே உதவிக்குப் பயன்படுத்திக்கொண்டதாகவும் இதன் அடிப்படையில் சேர்விஸ் கடையின் உரிமையாளரின் மனைவி கோபமடைந்து இன்னொருவரை வைத்து எனது மகளை கொலை செய்திருக்கக்கூடும் என்றும் அல்லது மனைவி கூறி ஜனார்தன் எனது மகளை கொலை செய்திருக்கக்கூடும் என்றும் மொத்தத்தில் எனது நடத்தை சரியில்லை என்றும் கிராமத்துக்குள் எனது குடும்பம் மற்றும் என்னைப் பற்றியதான சிறந்த அபிப்பிராயங்கள் இல்லை எனவும் எனது சுயதேவைக்காக ஜனார்தனைப் பயன்படுத்தியதாகவும் ஆகவே இவர்தான் இந்தக் கொலையினைச் செய்திருக்கின்றார் என்ற அடிப்படையில் பொலிஸார் அவரைக் கைதுசெய்திருக்கின்றார்கள்.

இது இவ்வாறிருக்க பாலசிங்கம் ஜனார்தன் சந்தேகத்தின் அடிப்படையில் பொலிஸாரினால் சிவன்கோயிலுக்கு அருகாமையில் உள்ள வீதியில் வைத்து கைதுசெய்யப்பட்டிருக்கின்றார். பொலிஸாரிடம் நான் சைக்கிள் சேர்விஸ் கடை உரிமையாளர் மீது எனக்குச் சந்தேகம் இருக்கிறது. காரணம் இவர் பக்கத்தில் இருக்கிறார். எனது மகள் ஏதாவது சத்தம் எழுப்பியிருந்தால் இவருக்குத் தெரியாமல் இருப்பதற்கான வாய்ப்புக்கள் இல்லை. இவர் இக்கொலையினை செய்யாவிட்டாலும் வேறு ஒருவரைக் கொண்டு இக்கொலையினை செய்திருக்கலாம் எனவும் நான் சந்தேகிக்கின்றேன் . எனக்கூறியதன் நிமித்தம் பொலிஸார் இவரைக் கைதுசெய்தனர்.

**சைக்கிள் கடை ஜனார்தனுடன் நீங்கள் குறிப்பிட்ட காலங்களில் கதைத்திருக்கின்றீர்களா? என வினவிய போது.** இல்லை எனக்கூறிய மாதினி. ஜனார்தன் நல்லவர் எனவும் அவரது மனைவியே மிகக்கொடூரமானவர் எனவும் கூறினார்.

**இவ்வாறு கூறுவதன் ஊடாக நீங்கள் ஜனார்தனைக் காப்பாற்ற முயல்கிறீர்களா? எனக்கேட்டபோது.** என்னோடு அவர் சண்டை பிடிப்பதில்லை பதிலாக அவரது மனைவியே சண்டை பிடிப்பார். அப்போது அவரது கணவர் ஜனார்தன் சத்தம் போடவேண்டாம் என அவரைக் கூறினாலும் கூட அவர் கேட்கமாட்டார்.

**உங்களது மகளைக் கொலை செய்யும் அளவிற்கு ஜனார்தனின் மனைவி உங்களிடம் என்ன வாக்குவாதப்பட்டார் என வினவ,** நீங்கள் வெளிநாட்டுக்குப் போவதை நான் பார்க்கின்றேன். எனக்கு கடன் தரவேண்டும். அவ்வாறு தராவிட்டால் என்ன செய்கிறேன் பார் என்றெல்லாம் சவால் விட்டிருந்தார். ஏற்கனவே எட்டு மாதங்களுக்கு முன்னர் வேலிப் பிரச்சினை இருந்தது. பின்னர் நாம் தான் அதனை அடைத்தோம்.

**இதற்கு முன்னர் இவர்கள் உங்களுடன் பிரச்சினைப் படவில்லையா? எனக் கேட்டபோது,** அவ்வாறில்லை என்றார்.

**உங்களது மகன் சேவிஸ் கடை உரிமையாளரை(ஜனார்தன்)ரகுமாமா என அழைப்பாரா?** அப்படி அழைப்பதில்லை அதற்கான தேவையும் இல்லை.

**அப்படியாயின் ஜனார்தனின் மனைவி தான் அடியாட்களைக்கொண்டு உங்களது மகளைக் கொலை செய்திருக்கலாம் என நினைக்கிறீர்களா?** அப்படியும் நடந்திருக்கலாம் எனக் கூறிய ஹரிஷ்ணவியின் தாயார் இன்னும் பல விடயங்களைக் கூறினார்.

**உங்களுடைய கணவர் இயக்கங்களுடன் சம்பந்தப்பட்டவரா?** அவ்வாறு ஒன்றிலும் சம்பந்தப்படவில்லை. 2007ஆம் ஆண்டுக்கு முன்னர் விடுதலைப்புலிகளுடைய புலனாய்வாளர் சுட்டிருக்கும் நெருப்பு என்றும் ஒருவர் எங்களுடைய வீட்டில் இருப்பதாகக் கூறி. புளொட் அமைப்பினைச் சேர்ந்த மூவர் இவ்வீட்டில் இராணுவத்தினரால் கொலை செய்யப்பட்டனர். அச்சமயம் எனது கணவர் தப்பித்துவிட்டார். அதன் பின்னரே எனது கணவர் வெளிநாட்டிற்குச் சென்றார். காலை ஆகாரத்தை எனது மகள் முடித்த பின்னர் மதிய ஆகாரத்தையும் உண்பதற்கு முயன்றிருக்கின்றார். அச்சமயம் அவ்வுணவு கீழே கொட்டுப்பட்டிருந்தது. அவர் மதிய உணவு சாப்பிடவில்லை என நினைக்கிறேன். 11.00-1.30 மணிக்கு இடைப்பட்ட நேரத்திலேயே எனது மகள் கொலை செய்யப்பட்டிருக்கலாம் என நான் சந்தேகிக்கின்றேன்.

**இது இவ்வாறிருக்க சேர்விஸ் கடையின் உரிமையாளரின்(ஜனார்தனின்) மனைவியிடம் இச்சம்பவம் குறித்து வினவியபோது.** 11.00-1.30மணி வரை எனது கணவர் மூன்று சைக்கிள்களை சேர்விஸ் செய்துகொண்டிருந்தார். இறுதியாக எமது வீட்டிற்கு அண்மித்துள்ள வீட்டின் ஒருவரின் சைக்கிளையே சேர்விஸ் செய்துகொண்டிருந்தார். இச்சமயம் நான் சமைத்துக்கொண்டிருந்தேன். இயந்திரங்களின் இரைச்சல் காரணமாக எந்தவொரு சத்தமும் எனக்குக் கேட்கவில்லை. ஒரு மோட்டார் வாகனம் சேர்விஸ் பண்ணுவதற்கு 1.30மணித்தியாலம் தேவைப்படும். எனது கணவர் 1.30க்கு சாப்பிட வந்ததாகவும் தெரிவித்தார். அதன் பின்னர் சேர்விஸ் செய்துகொடுக்கவில்லை என்றார்.

**அவ்வாறாகவிருந்தால் இம்மாணவி கொலை செய்யப்பட்டுவிட்டார் என எவ்வாறு அறிந்தீர்கள்?** எனது கணவரே முதலில் என்னிடம் கூறினார். கெங்காவினது மகள் தூக்கில் தொங்கி இறந்துவிட்டார் என்றார். நானும் ஏதோ விபத்து என்றுதான் அங்கு போனேன். அப்போது அந்தப்பிள்ளை கட்டிலில் படுக்கவைக்கப்பட்டு இருந்தது. எனது கணவரும் அந்தப் பிள்ளையைப் பார்த்துவிட்டே சென்றார்.

**இது தொடர்பாக ஹரிஷ்ணவியின் சகோதரன் கூறுகையில்,** எனக்கு இந்த சேர்விஸ் கடையின் உரிமையாளர் மீதுதான் சந்தேகம். எனது சகோதரி தொங்கிய நிலையில் இருந்தபோது அடிக்கடி வேலியால் எட்டிப்பார்த்துக்கொண்டிருந்தார். அவருடைய செயற்பாடுகள் சந்தேகத்தை ஏற்படுத்தியது. அவரது மனைவியின் தூண்டுதலின் அடிப்படையில் எனது சகோதரிகொலைசெய்யப்பட்டிருக்கலாம் என்றார்.

அப்படியாயின் காணாமல் போனதாகக் கூறப்படும் மாதினியின் கையடக்கத் தொலைபேசியினை வீட்டின் அலுமாரியில் இருந்து பொலிஸாரின் தேடிக்கொடுத்த மோப்ப நாய். ஏன் அருகில் இருந்த சந்தேக நபர் எனப்படும் ஜனார்தனின் வீட்டிற்குள் சென்றிருக்கக்கூடாது. அவர் செய்யாவிட்டாலும் அவர் வேறு யாருடைய உதவியுடன் இதனைச் செய்திருக்கலாம் என்ற சந்தேகங்களும் எழுகின்றது. இங்கே தான் மாறுபட்ட கருத்துக்கள் தோற்றுவிக்கப்படுகின்றது.

08ஆம் பக்கம் பார்க்க...

சுழியோடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மக்கள் பேரவையின் தீர்வுத்திட்டம் புஷ்வானமா?

திம்பு-டோக்கியோ வரையான தீர்வுத் திட்டங்கள் சாத்தியமற்ற நிலையிலும், 22பாராளுமன்ற உறுப்பினர்கள் தமிழ்த்தரப்பில் அங்கம் வகித்த காலத்திலும் விடுதலைப்புலிகளிடம் இடைக்கால நிர்வாகம் கையளிக்கப்பட்ட காலத்திலும் ஒரு பலமாகவிருந்தபோது, தமிழ் மக்களுக்கான தீர்வுத்திட்டத்தை பெற்றுக்கொள்ளாத நிலையில் இப்புதிய ஆட்சியில் தமிழ் மக்கள் பேரவையானது தமிழ் மக்களுக்காக தாம் வரைந்த தீர்வுத்திட்டத்தின் ஊடாக விடுதலையினைப் பெற்றுக்கொள்ள முடியும் என்பதன் அடிப்படையிலேயே இத்தீர்வுத்திட்டம் அமையப்பெறுவதாகக் கூறுகிறார்கள்.

இது சாத்தியம் அசாத்தியம் என்பதற்கப்பால் த.தே.கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினராகவிருந்த சுரேஷ் பிரேமச்சந்திரன் அப்போது ஏன் இதுபற்றிச் சிந்திக்கவில்லை. புத்திஜீவிகளை உள்வாங்கிக்கொள்கிறோம் எனக்கூறும் இவர்கள் ஆயுதக்கட்சிகளை உள்வாங்கிக்கொண்டு இவ்வாறு கூறுவது ஏளனத்திற்குரியது. ரெலோ, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எப், சிறிரெலோ, கருணா குழுவினர், பிள்ளையான், டக்ளஸ் தேவானந்தா இவர்களையும் உள்வாங்கிக்கொண்டால் பேரவைக்கு பெரும் பேராதரவு கிடைக்கும் என்று நினைக்கிறார்களோ? தமிழினத்தின் போராட்டத்தைக் காட்டிக்கொடுத்த இவர்களுள் புளொட், ஈ.பி.ஆர்.எல்.எப் கட்சிகள் தமிழ் மக்கள் பேரவையில் அங்கம் வகித்துவருகின்றது. அந்தவகையில் ஏனையவர்களும் உள்வாங்கப்படலாம் என்ற கருத்து மக்கள் மத்தியில் உள்ளது. புத்திஜீவிகள் என்ற போர்வையில் ஆயுதக்கட்சிகளின் உள்வாங்கலை ஏற்றுக்கொள்ள முடியாது. இப்பேரவையின் செயற்பாட்டிற்கு வணங்கும் முதல்வர் த.தே.கூட்டமைப்பு, வடமாகாண சபையினை பிரித்தாளும் வடிவமாகவே தமிழ் மக்கள் பேரவையினை மக்கள் பார்க்கின்றனர். தமிழ் மக்கள் பேரவையினால் முன்னெடுக்கப்பட்ட நிபுணர் குழுவின் அறிக்கை உண்மையான விடயங்களையே உள்ளடக்கியிருக்கின்றது. இது நடைமுறையில் சாத்தியமாகுமா? என்பது கேள்விக்குறி. அவ்வாறு சாத்தியப்படாத விடயத்தினை செயற்படுத்தத்துணிவது முட்டாள்தனம். இதில் த.தே.கூட்டமைப்பும் உள்வாங்கப்பட்டு செயற்படுமாகவிருந்தால் தமிழ் மக்களுக்கு சாதகமான தன்மையினை ஏற்படுத்துமே தவிர தன்னிச்சையாக பேரவை செயற்படுமாகவிருந்தால் தமிழ் மக்கள் பேரவையையும், அதன் நிபுணர் குழுவின் அறிக்கையையும்புஷ்வானமாகவேமக்கள் கருதுவர். இப்பேரவையின் நிபுணர் குழுவின் அறிக்கையினை பார்ப்போம். இதனை அவதானித்து தமிழ்த்தரப்பினரும், தமிழ் மக்களும் தீர்மானங்களை மேற்கொள்வது வரவேற்கத்தக்கது.

**தமிழ் மக்கள் பேரவை**
**தேசிய இனப் பிரச்சினைக்கான அரசியல் தீர்வை கண்டடைவது தொடர்பிலான நிபுணர் குழுவின் அறிக்கை**

**அறிமுகம்**

தமிழ் மக்கள் பேரவையானது அரசியல் தீர்வு ஒன்று தொடர்பில் மக்கள் மத்தியில் கலந்தாய்வுஒன்றைநடத்துவதற்குஉதவும் வகையில் அரசியல் தீர்வு தொடர்பிலான முக்கிய வரையறைகளை உள்ளடக்கிய முன்மொழிவு ஒன்றைத் தருமாறு பணித்து 27டிசம்பர் 2015 அன்றுஒரு நிபுணர் குழுவை நியமித்தது. பேரவையில் அங்கம் வகிக்கும் அரசியற் கட்சிகளின் பிரதிநிதிகளும் சிவில் சமூக குழுக்களின் பிரதிநிதிகளும் இவ் நிபுணர் குழுவில் இடம்பெற்றனர். 2016 ஜனவரி மாதத்தில் இடம்பெற்ற பல சுற்றுக் கலந்துரையாடல்களின் பின்னர் நிபுணர் குழுவானது இவ் அறிக்கையையும் முன்மொழிவையும் பேரவையின் பரிசீலனைக்கும் அதனைத் தொடர்ந்து மக்கள் கலந்துரையாடலுக்குமாக சமர்ப்பிக்கின்றது.

**அரசியலமைப்பு ஏற்பாடுகளைச் செய்வதற்கு முன் அரசியல் உடன்படிக்கை ஒன்றை எட்டுவதன் தேவைப்பாடு**

புதியதோர் அரசியல் தீர்வு ஒன்றை கண்டறிவது என்பது வெறுமனே புதியதோர் அரசியலமைப்பை எழுதுவதன் மூலம் எட்டமுடியாது. இலங்கை ஒரு சிங்கள பௌத்த தேசிய அரசாக இருப்பதே தேசிய இனப்பிரச்சினையின் மூலவேர் ஆகும். தற்போதைய இலங்கை அரசில் (அரசு என்பது அரசாங்கத்தில் இருந்து வேறுபடுத்தி அனுகப்படுகின்றது) முழு அரசும் ஒருதேசத்தோடும் ஒரு மக்கள் கூட்டத்தோடும் அடையாளப்படுத்தப்படுகின்றது. இங்கு அரசானது ஓர் அதிகாரப் படிநிலையை கொண்டிருப்பதும் அவ் அதிகாரப்படிநிலையில் சிங்கள பௌத்த அரசு முதல் நிலையில் இருப்பதுமே இங்கு பிரதான பிரச்சினையாகும். இந்த அதிகாரப் படிநிலையானது ஒற்றையாட்சி முறைமையின் மூலம் உறுதிப்படுத்தப்படுகின்றது. தெற்கில் இருக்கும் இரண்டு பெரிய கட்சிகளும் ஒற்றையாட்சியின் பாற்பட்ட சிங்கள பௌத்த அரசு என்ற கருத்தியலில் உறுதியாக இருக்கின்றன. இந்த கருத்தியல் தமிழ் அரசியல் அபிப்பிராயத்தின் எந்த வகையினருக்கும் ஏற்புடையதல்ல. ஆகவே தான் அரசு தொடர்பில் எல்லோராலும் பகிர்ந்து கொள்ளப்படும் ஓர் அடிப்படைப்பார்வை இல்லாது ஓர் அரசியலமைப்பு ஆக்க முயற்சியில் நாம் ஈடுபட முடியாது என்று நாம் சொல்கின்றோம்.

இலங்கையானது ஒரு மதசார்புப் படிமுறையற்ற அரசாக உருவாகுவதற்கு சிங்கள பௌத்த சமூகமானது இலங்கையின் பல்வேறு மக்கள் கூட்டங்களுக்கிடையே ஒரு சமூக ஒப்பந்தம் ஒன்று தேவை என்பதை ஏற்றுக் கொள்ளவேண்டும். இவ் ஒப்பந்தம் ஊடாக ஒரு புதிய பல்-தேசிய இலங்கை அரசு ஒன்று தோற்றம் பெறவேண்டும். இதன் அர்த்தம் யாதெனில் தமிழ் மக்களினது தனித்துவமும் அவர்களது சுயநிர்ணய உரிமையும் முஸ்லீம், மலையக தமிழ் மக்களின் அரசியல் விருப்பார்வங்களும் அங்கீகரிக்கப்படல் ஆகும். 1978 அரசியலமைப்பின் 13வது திருத்தச் சட்டம் தோல்வியடைந்தமைக்கான காரணம்அது ஒற்றையாட்சி முறைமைக்குள் இருந்தமை மட்டுமல்லாது சிங்கள பௌத்த தேசத்தை உச்சத்தில் கொண்டிருந்த ஓர் அதிகாரப் படிநிலையுடன் கூடிய அரசிற்குள் உள்வாங்கப்பட்டமையாலும் என்பது விளங்கிக்கொள்ளப்படவேண்டும். இந்த அதிகாரப் படிநிலையோடு கூடிய அரசு என்ற கருத்தியல் நிலை மாறாவிட்டால் சமஷ்டி அரசியலமைப்பு வந்தாலும் அரு நடைமுறைப்படுத்தப்படாத ஒன்றாகவே இருக்கும். இதன் காரணமாகவே அரசியலமைப்பு ஏற்பாடுகளைப் பற்றி நாம் பேசத்தொடங்க முன்னர் தமிழ் மக்கள் கூட்டத்தினது தனித்துவமும் சுயநிர்ணய உரிமையும் ஒரு அரசியல் உடன்படிக்கை ஒன்றின் மூலம் அங்கீகரிக்கப்பட வேண்டும் என வலியுறுத்துகின்றோம்.

இத்தகையதொரு சிந்தனை நெறியில் இருந்து தான் புதிய அரசியலமைப்பின் ஏற்பாடுகளைப் பற்றிப் பேச முடியும். இத்தகைய சிந்தனை மாற்றம் இல்லாதவிடத்து கடந்தகால அரசியலமைப்பாக்க முயற்சிகள் போன்றே இம்முறையும் அரசியலமைப்பாக்க முயற்சி பெரும்பான்மைவாத தன்னிச்சையான முயற்சியாக அமைந்துவிடும்.

அரசியலமைப்பு ஆக்க முயற்சிக்கு முன் எட்டப்படவேண்டிய அரசு தொடர்பான தொலைநோக்குப் பார்வையானது ஓர் உடன்படிக்கை வடிவில் (பொஸ்னியாவில் கைச்சாத்திடப்பட்ட டேய்டன் உடன்படிக்கை, வட அயர்லாந்து பிரச்சினை தொடர்பில் கைச்சாத்திடப்பட்ட குட் ஃப்ரைடே உடன்படிக்கை போன்றவொரு உடன்படிக்கை) சம்பந்தப்பட்ட தரப்புகளுக்கிடையில் கைச்சாத்திடப்படவேண்டியது அவசியமாகும். இவ்வுடன் படிக்கையில் உள்ளடக்கப்படவேண்டிய விடயங்களில் தமிழர்களின் தேசம் என்ற அங்கீகாரம், அவர்களின் சுயநிர்ணய உரிமை, இறைமை, கூட்டாட்சி, அதிகாரம், பாரம்பரிய தாயகம் ஆகியன உள்ளடங்கும். எண்ணிக்கையில் பெரும்பான்மையினரான சிங்கள பௌத்த சமூகமும் அதன் அரசியல் பிரதிநிதிகளும் இந்த உடன்படிக்கையை தன்னிச்சையாக கிழித்தெறிந்தால் வேறு மாற்றுவழிகள் எதுவும் இல்லாதவிடத்து தமிழ் மக்கள் ஒரு பொது வாக்கெடுப்பு மூலம் தமது அரசியல் எதிர்காலத்தை தீர்மானித்துக் கொள்ளலாம் என்ற ஏற்பாடும் இந்த உடன் படிக்கையில் உள்வாங்கப்படவேண்டும். இவ்வுடன்படிக்கையானது மூன்றாம் தரப்பொன்றால் (அமெரிக்கா, இந்தியா போன்ற அரசொன்றால் அல்லது ஐக்கிய நாடுகள் சபையினால்) உத்தரவாதம் அளிக்கப்பட்ட உடன்படிக்கையாக இருக்கவேண்டும். அரசியலமைப்பு ஒன்று உள்நாட்டு சட்டத்தோடு மட்டுப்படுவதாகக் கருதப்படுவதால், இவ்வுடன்படிக்கை மூலமாக மூன்றாம் தரப்பொன்றின் பங்கு பற்றலை உள்வாங்குவதானது எட்டப்பட்ட அரசியல் தீர்வின் நிலைத்தகு தன்மையை ஒரு சர்வதேச, வெளித் தரப்பு ஒன்றின் உத்தரவாதத்தின் ஊடாக நிலைபெறச்செய்ய உதவும். மேலும் இவ்வுடன்படிக்கையானது. பொறுப்புக் கூறல் மற்றும் நிலை பெறச்செய்ய உதவும். மேலும் இவ்வுடன்படிக்கையானது பொறுப்புக்கூறல் மற்றும் நீதி, அரசியல் கைதிகளின் விடுதலை, இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருக்கும் காணிகளின் விடுவிப்பு, காணாமல் போகச் செய்யப்பட்டோரின் பிரச்சினைகள், இராணுவமயநீக்கம். அரசால் செய்யப்பட்ட திட்டமிட்ட குடியேற்றங்கள், பாதுகாப்புத்துறை மறுசீரமைப்பு, குற்றங்கள் மீள நிகழாமை தொடர்பான உறுதியளிப்புத் தொடர்பிலானவை போன்ற முக்கிய விடயங்கள் தொடர்பாகவும் உடன்பாடுகளை எட்டிய ஓர் உடன்படிக்கையாக இருக்க வேண்டும். மேற் சொன்ன விடயங்களில் முன்னேற்றம் இல்லாமல் அரசியலமைப்பு விவகாரங்களைப்பற்றிய திறந்த பாதுகாப்பான உரையாடல் ஒன்று வடக்கு கிழக்கில் நடைபெறமுடியாது.

**"மக்கள் கூட்டங்கள்" மற்றும் "தேசம்" என்ற சொற்பாவனை தொடர்பில் பின்வரும் விளக்கத்தை தருகின்றோம்.**

அ) பொதுச் சர்வதேச சட்டம், குறிப்பாக சிவில் மற்றும் குடியியல் உரிமைகளுக்கான சர்வதேச பொருத்தனை, "மக்கள் கூட்டங்கள்" சுயநிர்ணய உரிமைக்கு உரித்தானவர்கள் என வரையறுக்கின்றது. சர்வதேச சட்டம் "மக்கள் கூட்டங்கள்" என்ற சொற்பாவனையை வேண்டுமென்றே வரைவிலக்கணப்படுத்தவில்லை என சில புலமையாளர்கள் கூறுகின்றனர். அதற்கான காரணம் இப்பதம் அரசியலினால் வரையறுக்கப்பட வேண்டுமே அன்றி சட்டத்தரணிகளால் வரையறுக்கப்பட வேண்டிய ஒன்றல்ல என்பதனாலேய ஆகும்.

ஆ) சர்வதேச சட்டம் மிகவும் தெளிவாக சிறுபான்மையோர் என வரையறுக்கும் மக்கள் கூட்டத்தினரை தனியாகவும் தமக்கு சுயநிர்ணய உரிமையைக்கோரும் மக்கள் சட்டத்தினரை வேறோர் வகைக்குரியதாகவும்வேறுபடுத்துகின்றது. வெவ்வேறு துறைசார் புலமையாளர்கள் தம்மை தேசமாக - சுயாட்சிக்கு உரித்தானவர்களாக - கருதும் மக்கள் கூட்டத்தினரே சுயநிர்ணய உரிமையைக் கோருகின்றனர் எனக் கூறுகின்றனர். அத்தோடு சுயநிர்ணய உரிமை என்பது பல உரிமைகளின் கூட்டாக இருப்பதும் அதற்குள் தனி நாட்டிற்கான உரிமை என்பது அவற்றில் ஒன்று மட்டுமே என்பதும் ஏற்றுக்கொள்ளப்படுகின்றது.

இ) தமிழ் மக்கள் வெகு காலமாகவே அரசியல் ரீதியாகத் தம்மைத் தேசமாகக் கருதி வந்துள்ளனர். அவ்வாறாக தம்மை தேசமாக வெளிப்படுத்தும் குறிப்பிடத்தக்க ஆவணமாக ஏப்ரல் 1951இல் இலங்கை தமிழரசுக் கட்சியின் திருகோணமலையில் இடம்பெற்ற முதலாவது மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட முதல் தீர்மானம் அமைகின்றது. இத்தீர்மானத்தில் தம்மைத்தேசம் என அழைத்துக் கொள்வதற்குத் தமிழர்கள் சவால் விடப்பட முடியாத நியாயங்களைத் தம்மகத்தே கொண்டவர்கள் எனக் கூறப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட வேண்டியது. இம் மாநாட்டிலேயே தமிழர்களின் சமஷ்டிக் கோரிக்கையும் தெளிவாக முன் வைக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. இதில் இருந்து சமஷ்டிக் கோரிக்கையும் தெளிவாக முன்வைக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. இதிலிருந்து சமஷ்டிக் கோரிக்கைக்கும் தேசம் என்ற அடையாளப்படுத்தலுக்கும் நேரடித் தொடர்பு உண்டு என்பதும் இவை முரண்பாடானவை அல்ல என்பதும் பெறப்படும். மேலும் தமிழர்கள் ஓர் தேசத்தவர்கள் என்ற முன் வைப்பு இலங்கைத் தமிழரசுக் கட்சி, தமிழர் விடுதலைக்கூட்டணி மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆகிய கட்சிகளால் தொடர்ந்து தேர்தல்களில் முன் வைக்கப்பட்டு அவை தமிழ் மக்களால் தொடர்ந்து ஏற்றுக்கொள்ளப்பட்டும் வந்துள்ளமை தெரிந்ததே.

ஈ) ஆகவே இந்த உப குழுவானது வரலாறு, அரசியல் மற்றும் சட்டம் அடிப்படையில் சொல்லப்பட்டுள்ள மேற்படி காரணங்களுக்காக தமிழ் மக்கள் ஒரு தேசம் என்று உறுதிப்படக் கூறுகின்றது. இன்னும் தெளிவாக சர்வதேச சட்ட மொழியில் கூறுவதானால் தமிழர்கள் ஒரு மக்கள் கூட்டம் என்ற வகையில் தம்மை தேசமாகக் கருதி சுயநிர்ணய உரிமையைக் கோருகின்றனர். என நிபுணர் குழு சமர்ப்பிக்கின்றது. மேற்சொன்னவை காரணமாக தமிழ் மக்கள் பேரவை யானது தேசம் என்ற சொற்பதத்தை தொடர்ந்து எம்முன் வந்த பல தலைமுறைத் தமிழர்கள் பாவித்தமை போன்றே தொடர்ந்து உபயோகப்படுத்துவதா? என்ற தீர்மானத்தை மக்கள் கலந்தாய்வின் போது மக்களிடம் விடப்படவேண்டும் எனக் கருதுகின்றது. மேலும் தேசம் என்ற அரசியற் பாவனை ஒரு குறிப்பிட்ட கட்சியினது கண்டுபிடிப்போ அல்லது அவர்களின் ஏகபோக உரிமையோ இல்லை என்பதையும் உறுதிப்படத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**அரசியலமைப்பு ஏற்பாடுகளுக்கான வரைபு முன்மொழிவுகள்**

**1.இலங்கை அரசின் தன்மை**

1.1இலங்கை ஒரு பல்-தேசிய, பல்-கலாசார, பன்மொழித்துவ, பல்-மத அரசாகும். அது தனது அக்கத்துவ மக்கள் கூட்டங்களையும், சமூகங்களையும், கொண்டமைந்தது ஆகும். மத்தியும், மாநிலங்களும் மக்கள் கூட்டங்களின், சமூகங்களின் பன்மைத்துவத்தை மதித்து, அங்கீகரித்து, பாதுகாக்கும் கடப்பாட்டைக் கொண்டவை.

1.2 சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லீம்கள், மலையகத் தமிழர்கள் மற்றும் ஏனைய சமூகங்கள் பல்-தேசிய இலங்கையை உருவாக்குகின்றன.

1.3 1978ஆம் ஆண்டின் அரசியலமைப்பில் வரையறுக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மாகாணங்கள் தமிழ் தேசத்தின் பாரம்பரிய தாயகமாக இருக்கும் காரணத்தினால் அதன் ஆயுள்புலப்பரப்பாக அமையப்பெறும்.

தொடரும்...

**நெற்றிப்பொறியன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ் நிலத்தடி நீர் மாசடைவு தொடர்பில், அமைச்சர் ஐங்கரநேசனின் மீது குற்றஞ்சாட்டுவது தவறு

கடந்த சில வாரங்களாக வடமாகாண சபையின் விவசாயத்துறை அமைச்சர் ஐங்கரநேசனின் மீது யாழ். நிலத்தடி நீர் மாசடைவு தொடர்பில், நொதேர்ன் பவர் நிறுவனத்துடன் ஒப்பந்தம் ஒன்றினை மேற்கொண்டு அவர்களிடத்திலிருந்து பெருந்தொகையான பணத்தினை பெற்றுக்கொண்டதன் அடிப்படையில் அவருக்கு சார்பான அறிக்கையே இந்த நிபுணர் குழுவினால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது என வட மாகாணசபையின் அரசியல்வாதிகள் பலராலும், சில பொதுமக்கள், ஈ.பி.டி.பி அமைப்பினராலும் கூறப்படும் அதேநேரம், அமைச்சர் மீது வீணாக குற்றத்தினைச் சுமத்தி, பாத்தீனியம் சம்பந்தமான பிரச்சினையையும், குடிநீருக்காக வழங்கப்பட்ட தண்ணீர் தாங்கிகள் தொடர்பில்நிதிமோசடிகளைச்செய்தமை, தனது மகளின் கல்விக்காக 04கோடி ரூபாவை வெளிநாட்டிற்கு அனுப்பினார் மற்றும் குளங்களின் புனரமைப்பிற்கு நிதி வழங்கப்பட்டபோது அதில் அக்கறை செலுத்தாமல் தன்னிச்சையாகச் செயற்பட்டார் என்றவாறான போலியான குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளது. இவையனைத்தும் சோடிக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கள். அதுமட்டுமல்லாது இவருக்கு ஆதரவாக வடக்கின் முதல்வரும் செயற்படுகின்றார் என்றவாறான செய்திகள் வெளிவந்தன.

குறிப்பாக வடமாகாணசபையின் அமைச்சர்களும், உறுப்பினர்களும் ஒன்றினைப் புரிந்துகொள்ளவேண்டும். மக்களுக்காக ஒதுக்கப்பட்ட நிதியில் இருந்து எத்தனை அரசியல்வாதிகள் கொள்ளையடித்தார்கள் என்ற விபரங்கள் பல ஊடகங்களிடம் இருக்கிறது. இதனை அரசியல் இராஜதந்திரங்கள் கருதி வெளிப்படுத்த இயலாத ஒரு சூழ்நிலை உருவாகியுள்ளது. இதனால் மத்திய அரசாங்கம் இதனைச் சாதகமாகப் பயன்படுத்தி மீதமுள்ள அரசியல்வாதிகளையும் ஓரங்கட்டும் செயற்பாடாக இது அமையப்பெறும். அதிகமான நிதி நொதேர்ன் பவர் நிறுவனத்திடமிருந்து தான் பெற்றுக்கொண்டார் எனக் கூறப்படுகின்றது. இந்நிறுவனத்தின் செயற்பாடுகள் குறித்து சுகாதார பரிசோதகர்கள் நீதிமன்றத்தில் ஆஜராகி இவ்விடயம் தொடர்பாக விளக்கமளிக்குமாறு கூறப்பட்டது.

இது இவ்வாறிருக்க இவர்களுடைய அறிக்கை கூறும் விடயம் என்ன? அதனை தெளிவுபடுத்தவேண்டிய தேவை உள்ளது. ஐங்கரநேசன் மீதான குற்றச்சாட்டுக்கள் எதனை அடிப்படையாகக்கொண்டிருக்கின்றன. குற்றச்சாட்டுக்கள் எவ்வாறிருக்கின்றன என்பவை பற்றி விரிவாகப் பார்க்கின்ற பொழுது, கிணற்று நீரில் ஆபத்தான BTEX இல்லை எனவும், மலக் கழிவுகள், நைற்றேற்றும்தான் உள்ளது என்றும் கூறப்பட்டுள்ளது.

இது சுண்ணாகத்தில் இயங்கி வந்த Northern Power Company இனது என்ஜின்களின் செயற்பாடுகள், எந்தவகையிலும், வலிகாமத்தின் நில அடி நீரில் மாசுபடுத்தலைச் செய்யவில்லை என உறுதிப்படுத்தும் ஒரு அறிக்கையாக மாத்திரம்தான் அமைந்துள்ளது.

வடமாகாண சபையின் முதலமைச்சரதும், அமைச்சர் ஐங்கரநேசனதும் நடவடிக்கைகளும், வடமாகாண சபையால் நியமிக்கப்பட்ட "நிபுணர் குழு"வினது நடவடிக்கைகளும் ஆராயப்படவேண்டிய மிக முக்கிய விடயங்கள் ஆகின்றன.

முதலாவதாக, வலிகாமப்பகுதியின் நில அடி நீரில் எப்படியான ஆபத்தான இரசாயனப் பொருட்கள் கலந்திருக்கமுடியும் என்பது. Northern Power Company இனது என்ஜின்கள் எதனை எரிபொருளாகக்கொண்டு இயக்கப்படுகின்றன என்பதால்தான் நிர்ணயிக்கப்படுகிறது.

ஆனால், வட மாகாண சபையின் "நிபுணர் குழு"ஆனது, அந்த என்ஜின்கள் எதனைக்கொண்டு இயக்கப்படுகின்றன என்பதை அறிந்து உறுதிப்படுத்தவேயில்லை. இதை அந்தக் கொம்பனியின் என்ஜின்களின் ரகம், ஏனையவைகளைக் கொண்டுதான் அறிந்திருக்கமுடியும்.

இதைவிட, Northern Power Company உற்பத்தி செய்து இலங்கை மின்சார சபைக்கு விநியோகித்து வந்த மின் சக்திக்கு, மாதாமாதம் ஒரு Unit இக்கு அது எவ்வளவு பணத்தைப்பெற்று வந்துள்ளது என்பதூடாகவும் இதனை அறியமுடியும். ஒவ்வொரு வெவ்வேறு எரிபொருளுக்கும், இலங்கை மின்சார சபையானது வெவ்வேறு கட்டணத்தைத்தான் ஒரு Unit மின்சக்திக்குச் செலுத்துகிறது.

ஆனால், இங்கு ஒரு வியப்பான ஏமாற்று விடயம் என்னவென்றால், Northern Power Company அதனது என்ஜின்களைHeavyOil கொண்டுஇயக்கி வந்திருந்தபோதும், அந்தக் கொம்பனிக்கு டீசலில் இயக்கும் கூடிய பணமே மின்சார சபையால் ஒவ்வொரு Unit இற்கும் செலுத்தப்பட்டு வந்துள்ளது என்பதை அறியமுடிகிறதாக அறியப்படுகிறது.

இந்த நிலையில், Northern Power Company ஆனது இலங்கை மக்களின் பல பில்லியன் பணத்தை இதுவரை காலமும் கொள்ளையடித்துள்ளது. அதற்கு மின்சார சபையும், மின் சக்தி அமைச்சும், அரசும் துணை போயிருந்தன என ஒரு சாரார் குற்றம் சாட்டுகின்றனர்.

வடக்கு மாகாண சபையினால் நியமிக்கப்பட்ட "நிபுணர் குழு"வினது ஏமாற்று நடவடிக்கைகளைச் சரியாக விளங்கிக்கொள்ள, ஒருவருக்கு பின்வரும் விடயங்கள் பற்றிய அடிப்படை அறிவு இருக்கவேண்டும்:-

1) BTEX என்றால் என்ன?
2) அதில் உள்ள ஐதறோ கார்பன்கள் எவை?
3) அவை ஒவ்வொன்றினதும் கொதி நிலை, நீரில் கரையும் அளவுகள் எவை?
4) மசகு எண்ணெயினை' (Crude oil) வடிகட்டும்போது, என்னென்ன வெப்பநிலைகளில் வெவ்வேறு எரிபொருட்கள் பெறப்படுகின்றன?

இவைகளை வைத்தே நிலஅடி நீரில் சுண்ணாகத்தின் Northern Power Company இனது என்ஜின்களின் பயன்பாட்டால் எவையெவைகள் கலந்திருக்கமுடியும் என்பதை அறியமுடியும்.

1. BTEX என்றால் என்ன?
BTEX is an acronym that stands for benzene, toluene, ethylbenzene, and xylenes. These compounds are some of the volatile organic compounds (VOCs) found in petroleum derivatives such as petrol (gasoline). Toluene, ethylbenzene, and xylenes have harmful effects on the central nervous system.

2.Benzene, toluene, ethylbenzene and xylenes என்பவைகளின் கொதி நிலைகளும், நீரில் கரையும் அளவுகளும்:-
Compound Boiling point °C Water solubility mg l-1
Benzene 80.1 1780
Toluene 110.8 535
o-Xylene 144.4 175
m-Xylene 139 135
p-Xylene 138.4 198
Ethylbenzene 136.2 152

3. மசகு எண்ணையினை வடித்தலும், வெவ்வேறு வெப்பநிலைகளில் பெறப்படுபவையும்:-
மசகு எண்ணெய் வடிப்பு
இதிலிருந்து.
1) 150 பாகை செண்ரிகிறேட் வரையான வெப்பநிலையில் "பெற்றோல்" (Petrol) கிடைக்கிறது.
2) 150 - 200 பாகை செண்ரிகிறேட் வரையான வெப்பநிலையில் "மண்ணெய்" (Kerosene) கிடைக்கிறது.
3) 200 - 300 பாகை செண்ரிகிறேட் வரையான வெப்பநிலையில் "டீசல்" (Diesel) கிடைக்கிறது.
4) 300 - 370 பாகை செண்ரிகிறேட் வரையான வெப்பநிலையில் "எரி ஓயில்" (Fuel Oil) கிடைக்கிறது.
5) 370 - 408 பாகை செண்ரிகிறேட் வரையான வெப்பநிலையில் Lubricating oil, Paraffin wax, Asphalt என்பவைகள் கிடைக்கின்றன.

BTEX உள்ளவைகளின் கொதி நிலைகள் 150 பாகை செண்ரிகிறேட் இலும் குறைவாக இருப்பதால், பெற்றோலில் மாத்திரம்தான் BTEX காணப்படும்.

370 பாகை செண்ரிகிறேட் வரையான வெப்பநிலையில் "எரி ஓயில்" (Fuel Oil) கிடைப்பதால்.. அதில் BTEX எல்லாம் ஏற்கனவே ஆவியாகிய நிலையில், அது காணப்படமாட்டாது.

இந்தநிலையில், பொதுவாகக் கூறினால், Northern Power Company இனது என்ஜின்களை Fuel Oil இயக்குவதனால், BTEX என்பது மண்ணிலும், நிலவடி நீரிலும் என்ன காரணத்தாலும் கலக்கமாட்டாது.

இந்த நிலையில்,
1) வடக்கு மாகாண சபையால் நியமிக்கப்பட்ட "நிபுணர் குழு" ஏன் கிணற்றுநீரில் BTEX உள்ளதா என்பதைப் பரீட்சித்தது?
2) அந்த "நிபுணர் குழு" ஏன் வலிகாமக் கிணற்று நீரில் ஆபத்தை விளைவிக்கக்கூடிய BTEX இல்லை என அறிக்கை தயாரித்தது?

இது பெரும் ஏமாற்றே!!
ஏன் இந்த ஏமாற்று பரிட்சைகளையும், அறிக்கையையும் வட மாகாண சபையால் உருவாக்கப்பட்ட "நிபுணர் குழு" வெளியிட்டது?
Toluene can be used as an octane booster in gasoline fuels used in internal combus tion engines. இதனால், பெற்றோலில் Toluene ஏனையவைகள் காணப்படலாம்.

வாகனங்களுக்குப் பெற்றோல் பயன்படுத்துவதால், காற்றினில் BTEX கழிவுகள் காணப்படலாம்.

ஆனால், Northern Power Company என்ஜின்களின் செயற்பாடுகளால் நில அடி நீரில் BTEX காணப்படவேமாட்டாது.

04.Northern Power Company என்ஜின்களின் செயற்பாடுகளால் நில அடி நீரில் கலந்திருக்கக்கூடிய ஆபத்தானவைகள் எவை?
Northern Power Company என்ஜின்களின் செயற்பாடுகளால் நில அடி நீரில் கலந்திருக்கக்கூடிய ஆபத்தானவைகள் Heavy metals, Grease, oil போன்றவைகளே. இவற்றினால் மனிதருக்கும், மிருகங்களுக்கும், பறவைகளுக்கும் பெரும் ஆபத்துக்கள் உருவாகும்.

ஆனால், வலிகாமத்தின் நிலவடி நீரில் இவை கலந்துள்ளனவா, இல்லையா என்பதை வடமாகாண சபையால் நியமிக்கப்பட்ட போலி நிபுணர் குழு முழுமையாக ஆராயவேயில்லை.

இது ஏன்?
V) ஆராயவேண்டியவைகளை ஆராயாது, இருக்கமாட்டாதவைகள்நீரில்உள்ளனவா என்பதை ஏன் ஆராய்ந்து, போலி "நிபுணர் குழு" அறிக்கையை வெளியிட்டது?

இது மிக முக்கியவொரு கேள்வியாகும். இங்குதான் ஒரு முக்கிய விடயம் அவதானிக்கப்படவேண்டும்.
Northern Power Company இனது செயற்பாடுகளால்தான் வலிகாமத்தின் நில அடி நீரில் கழிவு ஓயில்கள் கலந்துள்ளது. இது பெரும் பிரச்சினையை 2 லட்சம் வரையான மக்களுக்கு உருவாக்கியுள்ளது என்ற விடயம் ஆதாரபூர்வமாக அமைச்சர் சம்பிக்க ரணவக்கவுக்கு ஜனாதிபதி சட்டத்தரணியான Shantha Abimana sigham தலைமையிலான குழு [illegible] நிலையில், அமைச்சர் சம்பிக்க ரணவக்க Northern Power Company இடமிருந்து மின் சக்தியைக் கொள்வனவு செய்யவேண்டாம் என்ற கட்டளையை இலங்கை மின்சார சபைக்கு இட்டிருந்தார்.

அதேவேளையில், மல்லாகம் நீதிமன்றத்தில் பாதிக்கப்பட்ட 12 பேரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில், நீதிமன்றம் Northern Power Company இனது மின் நிலையத்தினை மூடி சீல் வைத்திருந்தது.

இதற்கு எதிராக Northern Power Company ஆனது யாழ்ப்பாண மேல் நீதிமன்றத்தில் மேன் முறையீடு செய்தபோதும், நீதிமன்றம் மின் நிலையத்தினை திறக்க அனுமதி வழங்கவில்லை.

இந்த நிலையில், Northern Power Company கொழும்பு அப்பீல் கோர்ட்டில் மேல்முறையீடு செய்துள்ளது. அந்த வழக்கு பல மாதங்களாகத் தொடர்கிறது. அப்பீல் கோர்ட் ஆனது மின் நிலையத்தினை திறந்து, இயங்க அனுமதி கொடுப்பதாயின், வலிகாமத்தின் நில அடி நீரில் எந்த மாசடைதலும் நடைபெறவில்லை என்ற ஒரு "நிபுணர் குழு" அறிக்கை தேவை!!

இங்குதான் முதலமைச்சர் விக்னேஸ்வரனாலும், ஐங்கரநேசனாலும், வடமாகாண சபையாலும் விசேடமாக நியமிக்கபட்ட "நிபுணர் குழு" என்பதும், அதன் அறிக்கையும் மிக முக்கியமாகின்றன. இதைவிட மிக முக்கியமானது என்னவெனில், மல்லாகம் நீதி மன்றத்தில் நடைபெற்றவை.

அச்செய்தி பின்வருமாறு:-
கழிவு ஓயில் தொடர்பான வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, வடமாகாண அமைச்சர் பொ.ஐங்கரநேசனுக்கு அழைப்பாணை விடுக்கப்பட்டபோதிலும் நீதிமன்றுக்கு சமூகமளிக்கவில்லையென தெரிவிக்கப்படுகிறது.

கழிவொயில் காரணமாகப் பாதிக்கப்பட்ட பகுதிகளில் குடிநீர் விநியோகம் சீராக மேற்கொள்வதில்லையென அப்பிரதேசங்களைச் சேர்ந்த இரு சுகாதார வைத்திய அதிகாரிகள் மல்லாகம் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்த நிலையில், குறித்த வழக்கு மல்லாகம் நீதிமன்றத்தில் நீதிபதி ஏ.யூட்சன் முன்னிலையில்மீண்டும்விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன் போது கடந்த வழக்குத் தவணையின் போது வடமாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசனுக்கு நீதிமன்றத்தால் அழைப்பாணை விடுக்கப்பட்ட போதும்அவர்நீதிமன்றத்தில் ஆஜராகியிருக்கவில்லை.

வடமாகாண விவசாய அமைச்சர் வேறொரு நிகழ்விற்குச் சென்ற காரணத்தால் அவர் வருகை தர முடியவில்லை என வடமாகாண சபையின் அபிவிருத்தி அலுவலர் நீதிமன்றத்தில் அவர் சார்பில் கடிதமொன்றைச் சமர்ப்பிக்க முற்பட்டபோதும் நீதவான் அதனை நிராகரித்து பிடிவிறாந்து பிறப்பிக்க முற்பட்ட நிலையில் அவர் சார்பில் சிரேஷ்ட சட்டத்தரணி கு.பொ.சி.வரதராஜா நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்தார்.

இதன்போது பொதுமக்கள் நலன் சார்ந்து ஜனாதிபதி சட்டத்தரணி சாந்தா அபிமன்னசிங்கம், சட்டத்தரணிகளான சோ.தேவராஜா, கே.சுகாஷ், சோபிதன், பி.பார்த்தீபன் ஆகியோரும் வடக்கு மாகாண சபையின் சார்பில் சிரேஷ்ட சட்டத்தரணி கு.பொ.சி.வரதராஜாவும் ஆஜராகியிருந்தனர். இதன் போது சிரேஷ்ட சட்டத்தரணி கு.பொ.சி. வரதராஜா, பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு நீர் விநியோகிப்பது தொடர்பில் கதைப்பதற்கான எந்தவொரு அதிகாரமும் வடமாகாண சபைக்கு இல்லையெனவும், இந்த அதிகாரம் அரசாங்க அதிபர் மற்றும் பிரதேச செயலாளர்களுக்கே உள்ளதாகவும் மன்றுக்குத் தெரியப்படுத்தினார்.

தொடரும்...

சுழியோடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்று தமிழ்த் தலைவர்கள் ஒன்றிணைந்து போராட்டம் நடத்தியிருந்தால் தமிழீழம் கிடைத்திருக்கும் - சுதந்திரப்போராட்டம் பற்றிய பார்வை.

**கடந்தவாரத் தொடர்ச்சி...**

அவர்களை இந்தியா ஏற்கவேண்டும் என்று சிறிமாவோ வலியுறுத்தத் தொடங்கினார். அப்போது இந்தியாவின் பிரதமராக நேரு இருந்தார். சிறிமாவோவின் கோரிக்கையை ஏற்க அவர் மறுத்துவிட்டார். மலையகத் தமிழர்களில் ஒரு பகுதியினரை ஏற்றுக் கொள்ள நேரு சம்மதித்துவிட்டதாக, பத்திரிகையில் செய்தி வெளியாகியது. அதைப்பார்த்து நேரு கோபம் அடைந்தார். "இலங்கையில் உள்ள தமிழர்களுக்கு அந்த நாட்டு அரசாங்கம் பிரஜா உரிமை தரவேண்டும். அவர்களை ஆடு - மாடு போல் கருதி சிங்கள அரசு பேச்சு நடத்த முயன்றால், நான் சம்மதிக்க மாட்டேன்" என்று திட்டவட்டமாகக் கூறினார். இந்த நிலையில் 1964 மே 27ஆம் திகதி நேரு காலமானார். சாஸ்திரி - சிறிமாவோ பண்டாரநாயக்கா ஒப்பந்தம் கையெழுத்தானது.

### 5 லட்சம் இலங்கைத் தமிழர்களை இந்தியா ஏற்கவேண்டும் (29.10.1964)

இலங்கையில் "நாடற்றவர்கள்" என்ற நிலையில் இருந்த தமிழர்கள் குறித்து. இந்தியப் பிரதமர் லால்பகதூர் சாஸ்திரியும். இலங்கைப் பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்காவும் டெல்லியில் ஓர் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர். இலங்கைத் தமிழர்களில் 5 லட்சம் பேரை இந்தியாவுக்கு கட்டாயமாக அனுப்ப இந்த ஒப்பந்தம் வகை செய்தது. இலங்கைத் தமிழர்களின் எதிர்காலம் குறித்து டெல்லியில் பிரதமர் லால்பகதூர் சாஸ்திரியும், இலங்கைப் பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்காவும் 1964ஆம் ஆண்டு ஒக்டோபர் மாத இறுதியில் பேச்சுவார்த்தை நடத்தினார்கள். 10 நாட்களாக நடந்துவந்த பேச்சுவார்த்தையில் இருவருக்கும் இடையே ஒக்டோபர் 29ஆம் திகதி உடன்பாடு ஏற்பட்டது. ஒப்பந்தத்தில் இருவரும் கையெழுத்திட்டார்கள்.

**ஒப்பந்த விபரம் வருமாறு:-**

01. இலங்கையில் குடியுரிமை இல்லாமல் 9 லட்சம் தமிழர்கள் இருக்கிறார்கள். இவர்களில் 5.5 லட்சம் தமிழர்களை இந்தியா அழைத்துக் கொள்ளவேண்டும்.

02. மீதியுள்ளவர்களில் 3 லட்சம் தமிழர்களுக்கு இலங்கையில் வசிப்பதற்கு குடியுரிமை' வழங்கப்படும்.

03. மீதியுள்ள 1.5 லட்சம் தமிழர்களின் நிலைமை பற்றி பின்னர் முடிவு செய்யப்படும்.

இந்த ஒப்பந்தத்தின்படி. இலங்கைத் தமிழர்களை வெளியேற்ற 15ஆண்டு கால அவகாசம் கொடுக்கப்பட்டது. ஆண்டுதோறும் 36 ஆயிரம் தமிழர்கள் இலங்கையை விட்டு வெளியேறவேண்டும். இலங்கையை விட்டு வெளியேறுவதற்குள் இவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகளும் வெளியேறவேண்டும். 3 லட்சம் தமிழர்களுக்கு இலங்கையில் குடியுரிமை வழங்க ஒப்புக்கொண்டபடி, ஆண்டுக்கு 20 ஆயிரம் தமிழர்களுக்கு இலங்கை அரசாங்கம் குடியுரிமை கொடுக்கவேண்டும். இவ்வாறு அந்த ஒப்பந்தத்தில் கூறப்பட்டு இருந்தது. சிறிமாவோ பண்டாரநாயக்காவுடன். நடந்த பேச்சுவார்த்தையில். லால்பகதூர் சாஸ்திரிக்கு உதவியாக மத்திய மந்திரி சுவரண்சிங். தமிழக மந்திரி ராமையா ஆகியோரும் பங்கேற்றனர். (தமிழ்நாட்டில் அப்போது காங்கிரஸ் ஆட்சி நடந்தது. முதல்-அமைச்சராக பக்தவச்சலம் இருந்தார். அகில இந்திய காங்கிரஸ் தலைவராக காமராஜர் இருந்தார்)

இலங்கையில் வாழும் தமிழர்கள் வெளியேற்றப்படுவதால், தமிழ்நாடு நேரடியாக பாதிக்கப்படும் என்ற நிலை நிலவுவதால். இந்தப் பேச்சுவார்த்தையில் கலந்துகொள்ள தமிழக மந்திரி ராமையா விசேஷமாக அழைக்கப்பட்டிருந்தார். "அப்போது பர்மாவில் இருந்து தமிழர்கள் லட்சக்கணக்கான அளவில் வந்து கொண்டிருக்கிறார்கள். இலங்கையில் இருந்து தமிழர்களும் வந்தால், நிலைமையை சமாளிப்பது பெரும் சங்கடமாக இருக்கும்" என்று மந்திரி ராமையா கவலை தெரிவித்தார். "இலங்கையில் இருந்து வரும் தமிழர்களைக் குடி அமர்த்துவது அகில இந்திய பிரச்சினையாகக் கருதப்படும். தமிழக அரசுக்குத் தேவையான அனைத்து உதவிகளும் அளிக்கப்படும்" என்று மத்திய அரசு உறுதி அளித்தது.

இலங்கையில் இருந்து தமிழர்கள் வலுக்கட்டாயமாக வெளியேற்றப்படுவதற்கு இலங்கைத் தமிழர் தலைவர் செல்வநாயகம் கடும் கண்டனம் தெரிவித்தார். அவர் வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டு இருப்பதாவது:- "இலங்கைத் தமிழர்களை வெளியேற்றுவதற்கான ஒப்பந்தம், இதுவரை நடந்திராத முறையில் செய்யப்பட்டுள்ளது. ஆட்சிபீடத்தில் உள்ளவர்கள், தமிழர்களை சொக்கட்டான் காய்களாக வைத்து அரசியல் சூதாட்டம் நடத்துகிறார்கள். வெளியேற்றப்படும் 5.5 லட்சம் மக்களின் தலைவிதியை நினைத்து நான் வருந்துகிறேன். இலங்கைத் தமிழர்களில் பெரும்பாலானவர்கள் பிறந்த இடம் இலங்கைதான். அவர்களுக்குத் தமிழ்நாட்டில் வீடு, வாசல் எதுவும் கிடையாது. அவர்கள் எப்படி இலங்கையை விட்டுப்போகமுடியும்? பொருளாதார ரீதியில் பார்த்தாலும், இலங்கைத்தமிழர்களை வெளியேற்றுவதில் இலங்கைக்கு நஷ்டம் ஏற்படும். 5.5 லட்சம் பேர்களில் 4 லட்சம் பேர் தோட்டங்களில் வேலை செய்யும் நல்ல உழைப்பாளிகள். அவர்களை இலங்கை இழக்க நேரிடும்." இவ்வாறு செல்வநாயகம் குறிப்பிட்டார்.

**தி.மு.கழகத்தின் சார்பில். தமிழ்நாடு சட்டசபை எதிர்க்கட்சித் தலைவர் இரா.நெடுஞ்செழியன் ஒரு அறிக்கை வெளியிட்டார். அதில் கூறப்பட்டு இருப்பதாவது:-** "5.5 லட்சம் தமிழர்களை இலங்கையில் இருந்து தமிழ்நாட்டுக்கு அழைத்துக்கொள்வது என்று டெல்லியில் செய்யப்பட்ட ஒப்பந்தம், இந்திய அரசாங்கத்துக்கு திருப்தி அளிப்பதாக இருக்கலாம். ஆனால் தி.மு.கழகத்திற்கு ஏமாற்றத்தையும், அதிருப்தியையும் கொடுத்து இருக்கிறது. இலங்கைத் தமிழர்கள், இலங்கையிலேயே பிறந்து வளர்ந்தவர்கள். அவர்களை இந்தியாவுக்கு அழைக்க முடிவு செய்து இருப்பதை ஏற்றுக் கொள்வதற்கில்லை. இந்தப் பிரச்சினை இந்தியாவுக்கு, குறிப்பாக, தமிழ்நாட்டுக்கு பெரிய பாரமாக இருக்கும்." இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டு இருந்தது.

**சுதந்திரக் கட்சித் தலைவர் ராஜாஜி கூறியதாவது:-** இந்த ஒப்பந்தம், கேலிக்கூத்தாக இருக்கிறது. ஒப்பந்தத்தில் திருப்தி அளிக்கக்கூடிய அம்சம் எதுவும் இல்லை. இந்த ஒப்பந்தம் எனக்கு வருத்தத்தை கொடுக்கிறது. இந்த ஒப்பந்தம், இலங்கைத் தமிழர்களைக் கட்டுப்படுத்த முடியாது. ஏனென்றால், தங்கள் தகராறில் இந்தியா - இலங்கை அரசாங்கங்கள் தீர்ப்பளிக்கவேண்டும் என்று அவர்கள் விரும்பவில்லை. ஒப்பந்தம் குறித்து, அவர்களைக் கலந்து பேசவில்லை." இவ்வாறு ராஜாஜி கூறினார்.

தமிழரசுக் கழகத்தலைவர் ம.பொ. சிவஞானம் கூறுகையில், "இலங்கை - இந்தியா ஒப்பந்தத்தைப் படித்து வியப்பும், வேதனையும் அடைந்தேன். எந்தக் கொள்கையையும் அடிப்படையாகக் கொண்டு ஒப்பந்தம் செய்யப்படவில்லை. பேரம் பேசும் முறையே முழுக்க முழுக்க கடைப்பிடிக்கப்பட்டு இருக்கிறது" என்றார். லால்பகதூர் சாஸ்திரி 1966ஆம் ஆண்டு ஜனவரி 11ஆம் திகதி காலமானார். அதன் பிறகு. இந்திரா காந்தி பிரதமர் ஆனார். இந்திரா காந்தியும். சிறிமாவோ பண்டாரநாயக்காவும் பல்வேறு சந்தர்ப்பங்களில் பேச்சுவார்த்தை நடத்தினர். சாஸ்திரி - சிறிமாவோ ஒப்பந்தம் பற்றியும் அவர்கள் ஆலோசித்தனர். ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதில் ஏராளமான சிக்கல்கள் இருந்தன. இந்திய குடியுரிமை கோரி விண்ணப்பித்த இலங்கைத் தமிழர்களின் மனுக்கள், இந்திய தூதரகத்தில் தேங்கிக் கிடந்தன. காலம் கடந்து போய்விட்டதால், இந்த ஒப்பந்தம் செல்லுபடியாகாது என்று ஒரு கட்டத்தில் இந்தியா அறிவித்தது. சாஸ்திரி - சிறிமாவோ ஒப்பந்தம் வெறும் ஏட்டளவுடன் நின்று விட்டது.

### இலங்கையில் ஒரு கிளியோபாட்ரா

இலங்கையில் கி.மு.51இல் ஒரு சிங்கள அரசி இருந்தாள். அவள் பெயர் அனுலா. அவளுடைய கணவன் பெயர் கோரநாயகா. சிவா என்ற தமிழன் அரண்மனை காவலாளியாக இருந்தான். அழகும், கம்பீரமும், கட்டான உடலும் கொண்டவன். அவனை அனுலா விரும்பினாள். எனவே, மதுவில் விஷம் கலந்துகொடுத்து, கணவனைக் கொன்றாள். சிவாவும், அனுலாவும் காதலர்களாக வாழ்ந்தார்கள். சிவாவை காதலித்தாலும், காவலாளியான அவனை மணக்க அனுலா விரும்பவில்லை. எனவே, அரசகுடும்பத்தை சேர்ந்த திசா என்பவனை மறுமணம் செய்து கொண்டாள். அவனுடன் ஒரு வருடம் 2 மாதங்களே வாழ்ந்தாள். வடுகா என்ற தச்சுத்தொழிலாளியுடன் காதல் ஏற்பட்டதால், திசாவை விரட்டி அடித்தாள். அனுலா மொத்தம் 6 திருமணங்களை செய்து கொண்டாள். வேறு இளைஞர்களையும் காதலித்தாள். கடைசியில் விஷம் குடித்து தற்கொலை செய்து கொண்டாள். எகிப்தில் பிறந்து, ஜூலியஸ் சீசர், ஆண்டனி ஆகிய ரோமானிய மாவீரர்களை காதலித்த கிளியோபாட்ரா, கடைசியில் தன் உடல் மீது விஷப்பாம்பை விட்டு கொத்தச்செய்து தற்கொலை செய்து கொண்டது போலவே அனுலாவின் வாழ்க்கையும் முடிந்தது. இது கதையும் அல்ல கற்பனையும் அல்ல. சிங்களவரின் சரித்திரத்தைக் கூறும் "மகாவம்சம்" நூலில் இடம்பெற்றுள்ள வரலாறு.

### திருமதி பண்டாரநாயக்கா ஆட்சியில் இலங்கை குடியரசு நாடாகியது. 'இலங்கை' என்ற பெயர் 'ஸ்ரீலங்கா' என்று மாற்றம்.

இலங்கை 1972 மே 22ஆம் திகதி குடியரசு நாடாகியது. பெயரும் "ஸ்ரீலங்கா" என்று மாற்றப்பட்டது. 1965ஆம் ஆண்டில் நடைபெற்ற தேர்தலில், திருமதி பண்டாரநாயக்காவின் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி தோல்வி அடைந்தது. டட்லி சேனநாயகா (மறைந்த பிரதமர் டி.எஸ்.சேனநாயகாவின் மகன்) தலைமையிலான ஐக்கிய தேசிய கட்சி கூடுதல் இடங்களைப் பிடித்தது. என்றாலும் மெஜோரிட்டி கிடைக்கவில்லை. 7 கட்சிகளின் ஆதரவுடன் டட்லி சேனநாயகா பிரதமரானார். ஆதரவு அளித்த கட்சிகளில் செல்வநாயகத்தின் "தமிழரசு கட்சி"யும் ஒன்று. தமிழர் தலைவர் செல்வநாயகத்துடன், டட்லி சேனநாயகா ஓர் ஒப்பந்தம் செய்துகொண்டார். "மாகாண சபைகள் அமைக்கப்படும். தமிழர்களுக்கு அதிக அதிகாரம் கொடுக்கப்படும்" என்பது அந்த ஒப்பந்தத்தின் சாரமாகும்.

இந்த ஒப்பந்தத்தை நிறைவேற்ற வகை செய்யும் சட்டமசோதா. 1968 ஜனவரி மாதத்தில் பாராளுமன்றத்தில் தாக்கல் செய்யப்படும் என்று டட்லி சேனநாயகா வாக்குறுதி அளித்தார். ஆனால் சொன்னபடி. மசோதா தாக்கல் செய்யப்படவில்லை. மே 22ஆம் திகதி செல்வநாயகமும், தமிழரசு கட்சியின் மற்ற தலைவர்களும் பிரதமர் டட்லி சேனநாயகாவை சந்தித்து. "வாக்குறுதி கொடுத்தபடி சட்டம் கொண்டு வாருங்கள். அதுபற்றி வெள்ளை அறிக்கையை பாராளுமன்றத்தில் தாக்கல் செய்யுங்கள்" என்று கேட்டுக்கொண்டார்கள். அதற்கு பிரதமர் சம்மதித்தார். சொன்னபடி அறிக்கையை தாக்கல் செய்தார். இதற்கு எதிர்ப்பு தெரிவித்து சிறிமாவோ பண்டாரநாயகாவும். அவர் கட்சியினரும் வெளிநடப்பு செய்தனர். அறிக்கையின் நகலை, பாராளுமன்றத்துக்கு வெளியே தீ வைத்துக் கொளுத்தினர். செல்வநாயகத்துடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தை பிரதமர் டட்லி சேனநாயகா விரும்பினாலும். அதற்கு எதிர்க்கட்சியினர் பெரும் தடையாக இருந்தனர். இதுகுறித்து டட்லியை செல்வநாயகம் பலமுறை சந்தித்துப் பேசினார். ஆனால் பலன் ஏதும் இல்லை. "நாங்கள் பண்டாரநாயகாவினால் கைவிடப்பட்டோம். பிறகு திருமதி பண்டாரநாயகாவால் கைவிடப்பட்டோம். இப்போது உங்களால் கைவிடப்படுகிறோம்" என்று டட்லியிடம் நேருக்கு நேர் கூறிவிட்டு வெளியே வந்தார். செல்வநாயகம். தமிழரசு கட்சி சார்பாக. மந்திரிசபையில் இடம் பெற்றிருந்த திருச்செல்வம், பதவியை ராஜினாமா செய்தார்.

1970 மே மாதம் நடந்த பாராளுமன்ற பொதுத்தேர்தலில் திருமதி பண்டாரநாயகாவின் "ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி" வெற்றிபெற்றது. மொத்தம் உள்ள 151 இடங்களில் 91 இடங்களில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி வெற்றி பெற்று, பெரும்பான்மையுடன் ஆட்சி அமைத்தது. திருமதி.பண்டாரநாயகா தனது தேர்தல் அறிக்கையில். புதிய அரசியல் சட்டம் கொண்டு வரப்படும் என்று அறிவித்து இருந்தார். ஆட்சிக்கு வந்ததும். புதிய அரசியல் திட்டத்தை உருவாக்க அமைச்சர்கள் கொண்ட ஒரு குழுவை அமைத்தார். அந்தக் குழு தயாரித்த அரசியல் சட்டத்தின்படி. 1972 மே 22ஆம் திகதி இலங்கை குடியரசு நாடாகியது. ஆங்கிலத்தில் "சிலோன்" என்று இலங்கை குறிப்பிடப்பட்டு வந்தது. அந்தப்பெயர் "ஸ்ரீலங்கா" என்று மாற்றப்பட்டது. (ஸ்ரீலங்கா' என்றால். பிர்காசமான இலங்கை' என்று பொருள்) புதிய அரசியல் சட்டப்படி. ஜனாதிபதியை பிரதமர் நியமிப்பார். ஜனாதிபதியின் பதவிக்காலம் 4 ஆண்டுகள். ஆயினும் அதிகாரம் முழுவதும் பிரதமர் கையில் இருக்கும். (இந்தியாவில். பாராளுமன்றத்தின் இரு சபைகளின் உறுப்பினர்களும். மாநில சட்டசபைகளின் உறுப்பினர்களும் ஓட்டு போட்டு. ஜனாதிபதியை தேர்ந்தெடுக்கிறார்கள்.)

### யாழ்ப்பாணத்தில் நடந்த உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டில் பொலிஸ் தாக்குதலில் 9 பேர் பலி

இலங்கையில். யாழ்ப்பாணத்தில் 1974ஆம் ஆண்டு ஜனவரி முதல் வாரத்தில் உலகத் தமிழ் மாநாடு நடைபெற்றது. அப்போது மைதானத்திற்குள் பொலீசார் நுழைந்துதாக்குதல்நடத்தினார்கள். இதில் 9 பேர் பலியானார்கள். இலங்கையைச் சேர்ந்த தமிழ் அறிஞர் தனிநாயகம் அடிகளாரின் முயற்சியால் தோற்றுவிக்கப்பட்ட "உலகத்தமிழ் ஆராய்ச்சி மன்றம்" சார்பில். முதலாவது உலகத் தமிழ் மாநாடு மலேசியத் தலைநகரான கோலாலம்பூரிலும். இரண்டாவது மாநாடு தமிழகத் தலைநகரான சென்னையிலும். மூன்றாவது மாநாடு பாரிஸ் நகரிலும் நடைபெற்றது. நாலாவது மாநாட்டை இலங்கை யாழ்ப்பாணத்தில் நடத்த உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றம் முடிவு செய்தது.

இதுபற்றிய ஆலோசனைக் கூட்டம் கொழும்பு நகரில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் பங்கேற்ற இலங்கை அமைச்சர் குமாரசூரியரின் பிரதிநிதிகள். இலங்கைத் தலைநகர் கொழும்பில் மாநாட்டை நடத்தவேண்டும் என்றும். அதை பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயகா தொடங்கி வைக்கவேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தனர். இதைப் பெரும்பாலானோர் விரும்பவில்லை. உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றத்தின் கொழும்பு கிளை, மாநாட்டை யாழ்ப்பாணத்தில் நடத்துவதை ஆதரித்தனர். இதன்படி. உலகத்தமிழ் மாநாட்டை யாழ்ப்பாணத்தில் 1974ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 3ஆம் திகதி தொடங்கி 10ஆம் திகதி வரை நடத்துவது என்று தீர்மானிக்கப்பட்டது. இதனால் ஆத்திரம் கொண்ட அமைச்சர் குமாரசூரியரும், அவருடைய ஆதரவாளர்களும் மாநாட்டை தமிழரசு கட்சியின் விழா என்றும், அரசாங்க விரோத சக்திகளின் நடவடிக்கை என்றும் பிரசாரம் செய்யத்தொடங்கினார்கள்.

மாநாட்டுக்கு அனைத்து வழிகளிலும் தொல்லைகள் கொடுப்பதில் குமாரசூரியரும். அவரது ஆதரவாளர்களும் ஈடுபட்டனர். மாநாடு பற்றி பொதுமக்களுக்கு அறிவிப்பதற்கு ஒலிபெருக்கியைப் பயன்படுத்த அனுமதி வழங்க பொலீசார் மறுத்தனர். மாநாட்டுக்கு வருவதற்கு விண்ணப்பித்த தமிழ் அறிஞர்கள் சிலருக்கு 'விசா' மறுக்கப்பட்டது. 'விசா' இல்லாமல் வந்தவர்கள் விமான நிலையத்தில் இருந்து திருப்பி அனுப்பப்பட்டனர். மாநாட்டை நடத்துவதற்கு வீரசிங்கம் மண்டபத்தையும். திறந்தவெளி அரங்கத்தையும் பயன்படுத்துவதற்கு சில கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. இதிலும் குமாரசூரியரின் தலையீடு இருந்தது. மாநாடு தொடங்குவதற்கு 3 நாட்களுக்கு முன்புதான் அவற்றை உபயோகிப்பதற்கான அனுமதி வழங்கப்பட்டது. தடைகளைக்கடந்து யாழ்ப்பாணத்தில். உலகத் தமிழ் மாநாடு நடைபெறும் செய்தி அறிந்து மக்கள் மகிழ்ச்சி வெள்ளத்தில் திளைத்தனர். யாழ் நகரமே விழாக்கோலம் பூண்டது. கடை வீதிகளில் மின்விளக்கு அலங்காரங்கள் நகரை அலங்கரித்தன. கனிகளுடன் கூடிய வாழை. மாமரங்கள். தென்னை. பனை. பாக்கு. மூங்கில் மரங்கள் கட்டி வைக்கப்பட்டிருந்தன.

**மறவன்** தொடரும்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிராந்தியச் செய்திகள்

## வெள்ளைக்கொடியுடன் அத்துமீறி செல்வோம் - வலி.வடக்கு மக்கள்

சித்திரைப் புத்தாண்டுக்குள் எம்மை எமதுசொந்த இடங்களில் மீள்குடியேற்றம் செய்யாவிடின், வெள்ளைக் கொடிகளுடன் எமது பகுதிக்குள் அத்துமீறி பிரவேசிப்போம் என வலி. வடக்கில் மீள்குடியேற்றம் செய்யப்பட வேண்டிய மக்கள் சூளுரைத்துள்ளனர். வலி.வடக்கு நலன்புரிநிலைய பொது நிர்வாக அமைப்பினரின் ஏற்பாட்டில், யாழ்.சபாபதிபிள்ளை மற்றும் கண்ணகி நலன்புரி நிலையங்களில் வாழும் மக்கள் கடந்த வெள்ளிக்கிழமை மீள்குடியேற்றத்தினை வலியுறுத்தி அடையாள உண்ணாவிரத போராட்டத்தினை முன்னெடுத்தனர். இந்த உண்ணாவிரதப் போராட்டத்தில் பங்கேற்ற மக்களே மேற்கண்டவாறு தெரிவித்தனர். உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்கள் 03 அம்ச கோரிக்கைகளை முன்வைத்துள்ளனர்.

பலாலி விமான நிலையத்தை சர்வதேச விமான நிலையமாக விஸ்தரிப்புச் செய்யவேண்டாம். எதிர்வரும் ஏப்ரல் மாதத்திற்குள் விரைவில் வலி.வடக்கு மீள்குடியேற்றம் மற்றும் நலன்புரி நிலைய மக்களுக்கான வாழ்வாதாரங்களை வழங்குதல் உள்ளிட்ட கோரிக்கைகளை பாதிக்கப்பட்ட மக்கள் முன்வைத்துள்ளனர். இந்நிலையில் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டிருந்த மக்கள் தொடர்ந்தும் கருத்து வெளியிடுகையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எதிர்வரும் 6 மாதத்திற்குள் வலி.வடக்கில் மீள்குடியேற்றம் செய்து, வலிவடக்கு மக்களின் பிரச்சினைக்கு தீர்வு தருவேன் எனக் கூறினார். ஆனால், பலாலி விமான நிலையத்தினை சர்வதேச விமான நிலையமாக புனரமைப்புச் செய்வதற்கு வலிவடக்கு மக்களின் காணிகள் சுவீகரிக்கப்படுமென்றும், அதை யார் எதிர்த்தாலும், பலாலி விமான நிலையம் விஸ்தரிப்புச் செய்யப்படுமென்று பாதுகாப்புசெயலாளர் மற்றும்புனர்வாழ்வு அமைச்சரின் கருத்துக்கள் எம்மை அதிர்ச்சியடைய வைத்துள்ளன.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன 6 மாத காலத்திற்குள் எம்மை தமது சொந்த இடங்களில் மீள்குடியேற்றம் செய்வார் என நம்பிக்கையுடன் இருந்தோம். ஆனால், பலாலி விமான நிலையத்தினை விஸ்தரிப்புச்செய்வோம் என கூறியதன் பின்னர் ஜனாதிபதியின் வார்த்தையில் நம்பிக்கை இழந்துவிட்டோம். சுமார் 26 வருடங்களுக்கு மேலாக பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்கி வரும் எம்மை ஜனாதிபதி கருணைகொண்டு, எமதுசொந்த நிலங்களில் மீள்குடியேற்றம் செய்யவேண்டும். அவ்வாறு எதிர்வரும் ஏப்ரல் மாதம் புதுவருடத்திற்கு முன்னர் மீள்குடியேற்றம் செய்யத் தவறின் எம்மை அழித்தாலும் பரவாயில்லை வெள்ளைக் கொடியினை பிடித்துக்கொண்டு, உயர்பாதுகாப்பு வலயத்திற்குள் அத்துமீறி நுழைந்து எமது சொந்த இடங்களில் நாமே மீள்குடியேறுவோம். இதேவேளை இடம்பெற்ற உண்ணாவிரதப் போராட்டத்தில் 32 நலன்புரி நிலைய மக்கள் கலந்துகொண்டதுடன் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன், வடக்கு மாகாண சபை உறுப்பினர் சர்வேஸ்வரன், வலி.வடக்கு பிரதேச முன்னாள் உபதவிசாளர் ச.சஜீவன் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.தம்மை மீள்குடியேற்றம் செய்யும் வரை வலி. வடக்கு மக்கள் வாழும் நலன்புரி நிலையங்களில் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் அடையாள உண்ணாவிரத போராட்டத்தினை சுழற்சிமுறையில் முன்னெடுக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

## சோஷலிச இளைஞர் சங்கத்தின் தேசிய உறுப்பினராகின்றார்

28-02-2016 அன்று கொழும்பு சுகததாச உள்ளக விளையாட்டரங்கில் சோஷலிச இளைஞர் சங்கத்தின் 3வது மாநாட்டில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பெ.ஸ்ரீகந்தநேசன்(புயல்) அவர்கள் சோஷலிச இளைஞர் சங்கத்தின் தேசிய உறுப்பினராகவும், யாழ் ஒருங்கிணைப்பாளராகவும் ஏக மனதாக தெரிவு செய்யப்பட்டார். இவர் ஓர் ஆசிரியராகவும் ஓர் எழுத்தாளராகவும் ஓர் ஆய்வாளராகவும் திகழ்பவர். தினப்புயல் பத்திரிகையின் முன்னாள் பிரதம ஆசிரியரான இவர், தாய்மொழி வளர்ச்சி மன்றத்தின் தலைவரும், ஸ்ரீ-தர்சனம் சஞ்சிகையின் ஆசிரியரும், யாழ்-பல்கலையின் முதுதத்துவமாணி மாணவரும் ஆவார். தமிழ்ப்பாடத்தின் சிறப்புப்பட்டதாரியும் கல்வியல் டிப்ளோமா பட்டதாரியும் ஆவார். "வட பகுதி மக்களின் போர்க்கால அவல வாழ்வினை" இவரது சிறுகதைகள் வெளிப்படுத்தும் என பேராசிரியர் அ.சண்முகதாஸன் "செழிப்பைத்தேடும் பறவைகள்" என்னும் சிறுகதைத் தொகுப்பின் ஆய்வுரையில் குறிப்பிட்டுள்ளார்.

தற்போது பாராளுமன்ற மறு சீரமைப்பு வெகுசன ஊடக அமைச்சின் கீழ் பாராளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்நாயக்கா அவர்களின் ஆராய்ச்சி உதவியாளராக பணியாற்றுகின்றார். இவ்வாறாக பன்முக ஆளுமை உடைய இவர் சோஷலிச இளைஞர் சங்கத்தின் தேசிய உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டமையை முன்னிட்டு இந்நாளில் அவருக்கு எமது மனமார்ந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்






## காட்டுத்தீயில் 4 காடு நாசம்

நோட்டன் பிரிட்ஜ் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஒஸ்போன் பகுதியில் காட்டுத் தீயினால் 4 ஏக்கர் காடு சாம்பலாகியதாக நோட்டன் பிரிட்ஜ் பொலிஸார் தெரிவித்தனர். 05 திகதி பகல் 1 மணியளவிலே காசல்ரீ ஓயா கரையோர பகுதியிலே தீ பரவியுள்ளதாகவும் கருப்பன் தேயிலை மரங்கள் பல தீயினால் கருகியுள்ளத்தாகவும் மேலதிக விசாரணை தொடர்வதாகவும் நோட்டன் பிரிட்ஜ் பொலிஸார் தெரிவித்தனர்.

நோட்டன் பிரிட்ஜ் நிருபர் மு.இராமசந்திரன்






## பெண்ணொருவர் சுருக்கிட்டு தற்கொலை

கெக்கிராவ - தாதுசேனபுர மீன்பிடி கிராமத்தில் பெண்ணொருவர் கழுத்தில் சுருக்கிட்டு தற்கொலை செய்துகொண்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். குறித்த பெண் தனது வீட்டில் உள்ள அறை ஒன்றில் இவ்வாறு தற்கொலை செய்து கொண்டுள்ளார். பொலிஸாருக்கு கிடைத்த தகவலையடுத்து பெண்ணின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

35வயதான பெண்ணே இவ்வாறு தற்கொலை செய்து கொண்டுள்ளதாக கெக்கிராவ பொலிஸார் தெரிவித்துள்ளனர். பெண் தற்கொலை செய்து கொண்டமைக்கான காரணம் இது வரை தெரியவில்லை. குறித்த மரணம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கெக்கிராவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## நவீன புகைப்பட பிரதியிடல் இயந்திரம் வவுனியாவில் அறிமுகம்

இலங்கையில் முதல் முறையாக நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய புகைப்பட பிரதியிடல் (பிறிண்டிங்) இயந்திரம் ஒன்று ஒஸ்ரியா நிறுவனத்தின் உரிமையாளர் எஸ்.சிவஜீவன் அவர்களால் வவுனியாவில் அறிமுகம் செய்யப்பட்டது. வவுனியா மில் வீதியில் அமைந்துள்ள தனியார் விருந்தினர் விடுதியொன்றில் கோலாகலமாக அறிமுகம் செய்யப்பட்ட இவ்வியந்திரத்தில் மரப்பலகை உட்பட புகைப்பட அல்பங்கள் வரைக்கும் ஏழு வர்ணங்களில் பிரதியிட (பிறிண்ட்) செய்யமுடியும் என்பதுடன் இத்தொழில்நுட்பத்தில் பிரதியிடப்படும் புகைப்படங்கள் 200 வருடங்களுக்கு மேல் பாவிக்கக்கூடியது என்பதும் குறிப்பிடத்தக்கது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக எச்.பி நிறுவனத்தின் இலங்கைக்கான முகாமையாளர் ஆர்.அப்பாதுரை கலந்துகொண்டிருந்தார்.




## வெலிக்கடை சிறைச்சலை அருகில் மற்றுமொரு துப்பாக்கிச்சூடு

கொழும்பு - வெலிக்கடை சிறைச்சாலைக்கு முன்பு மீண்டும் துப்பாக்கிச்சூட்டு சம்பவம் இடம் பெற்றுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார். இந்த சம்பவத்தில் 23 வயதுடைய மூன்று மாத கர்ப்பிணி பெண்ணொருவர் படுகாயமடைந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். குறித்த சம்பவம் பிற்பகல் 03.50 மணியளவில் இடம்பெற்றதாகவும் பொலிஸ் ஊடகப்பேச்சாளர் ருவன் குணசேகர தெரிவித்துள்ளார். மேலும், பாதிக்கப்பட்ட பெண் தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன், அவரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. மேற்படி சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## வவுனியா கல்வாரி திருத்தல தவக்கால ஆராதனை

வவுனியா பெரியகோமரசன்குளத்தில் அமைந்துள்ள கல்வாரி திருத்தலத்தில் வருடாவருடம் தவக்காலத்தில் வெள்ளி தோறும் ஆராதனைகள் நடைபெற்று வருவதுண்டு. இவ்வருடமும், கடந்த 04.03.2016 வெள்ளியன்று ஆராதனைகள் நடைபெற்றன. இதில் மன்னார் மறைமாவட்டத்தை சேர்ந்த திரளான பக்தர்கள் பாதை யாத்திரை மேற்கொண்டு வழிபாடுகளில் ஈடுபட்டனர். இந்நிகழ்வில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வைத்திய கலாநிதி சி.சிவமோகன் கலந்து கொண்டு வழிபாடுகளில் பங்கேற்றார்.



04ஆம் பக்கத் தொடர்ச்சி...

ரகு கடையில் வேலை செய்துகொண்டிருக்கும் போது அந்தப் பிள்ளையை கொலை செய்திருப்பாராகவிருந்தால் அவரை மோப்ப நாய் காட்டிக்கொடுத்திருக்கும். கையடக்கத் தொலைபேசியினை எடுத்துக்கொடுத்த நாய்க்கு அயல் வீட்டிலிருக்கும் ஜனார்தனை அடையாளங்காட்ட இயலாமல் போனது ஏன்? என்ற சந்தேகங்களும் எழுப்பப்படுகின்றன.

இந்த சந்தேக நபரான ஜனார்தன் அந்த கிராமத்தில் எப்படியானவர் என வினவியபோது, அவர் நற்பண்புகளைக் கொண்டிருப்பதாகவும், நான்கைந்து வருடங்களாக சிவன் கோயிலில் காலை 05மணிக்கு மணி அடிப்பவர். ஆலயத்தினை சுத்தம் செய்பவர் பின்னர் 06மணியளவில் கடையினை திறப்பவர் எனவும் பிரச்சினைகளுக்கு செல்லாத ஒருவர். பொலிஸில் இவருக்கெதிராக எந்த விதமான முறைப்பாடுகளும் இல்லை எனவும் அவ்வூர் தெரிவித்தனர். அப்படியாயின் கொலையின் சூத்திரதாரி எவ்வாறு வீட்டிற்குள் நுழைந்தார்?

தொடரும்...

## எருமையுடன் மோதி வாகனம் விபத்து

முல்லைத்தீவு மாவட்டத்தில், நெடுங்கேணி ஒட்டுசுட்டான் வீதியில் மாட்டுடன் மோதி கயஸ் வாகனம் ஒன்று விபத்துக்குள்ளாகி உள்ளது. குறித்த விபத்து இரவு 10.00 மணியளவில் நடந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இதில் 5 பேர் படுகாயமடைந்துள்ளதாக ஒட்டுசுட்டான் பொலிஸார்கூறியுள்ளனர்.வவுனியாவிலிருந்து புதுக்குடியிருப்பு நோக்கி பயணித்த வாகனமே ஒட்டுசுட்டான் பகுதியில் வீதியில் நின்ற எருமை மாட்டுடன் மோதி விபத்துக்குள்ளாகியது. இந்த விபத்தில், பாடசாலை வீதி வள்ளிபுனம் புதுக்குடியிருப்பை சேர்ந்தவர்களான தினேஸ், தினேஸ் ரவிக்கா (25), தினேஸ் டிலுக்சி (03) மற்றும் வல்வெட்டித்துறை யாழ்ப்பாணத்தை சேர்ந்தவர்களான பிறேமதாஸ் - பிரதீபன் (28) கனகலிங்கம் - சுமனாதேவி (45) ஆகியோரே இவ்வாறு காயமடைந்துள்ளனர். காயமடைந்தவர்கள் ஒட்டுசுட்டான் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, அங்கிருந்து மேலதிக சிகிச்சைகளுக்காக முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர். இந்த விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை ஒட்டுசுட்டான் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






## மிரட்டிய சூர்யா 24 ஸ்பெஷல்



சூர்யா எப்போதும் தமிழ் சினிமாவில் புதியதாக ஏதும் செய்ய காத்திருப்பவர். அவரின் சமீபத்திய பல முயற்சிகள் தோல்வியை தழுவ, 'திரும்ப வரமாட்டேன்னு நினைச்சீங்களா? வந்துட்டேன்' என தற்போது இன்னும் ஒரு படி மேலே சென்று 24 டீசரில் மிரட்டியுள்ளார். கடிகாரத்தை மையப்படுத்தி வந்த டீசரை கவனிக்கையில் டைம் ட்ராவலர் கதையாக கூட இருக்கலாம்.

படத்தில் மொத்தம் எத்தனை சூர்யா 2 அல்லது 3 என நம்மையே யோசிக்க வைக்கின்றது. பீரியட் கதை என்பதால் படக்குழுவினர்கள் கடினமாக வேலை செய்துள்ளனர். கண்டிப்பாக இந்த டீசர் ரசிகர்களுக்கு செம்ம விருந்து தான். அதைவிட ரகுமானின் இசை படத்தை வேறு லெவலுக்கு அழைத்துச் செல்லும் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை.

## பதிலடி வழங்கிய ஸ்ருதிஹாசன்



தென்னிந்திய சினிமாவில் தமிழ், தெலுங்கு என இரண்டு துறையிலும் முன்னணியில் உள்ளவர் ஸ்ருதிஹாசன். இவர் தற்போது மலையாளத்தில் சூப்பர் ஹிட் ஆன ப்ரேமம் படத்தின் தெலுங்கு ரீமேக்கில் சாய் பல்லவி கதாபாத்திரத்தில் நடித்துள்ளார். இதற்காக பலரும் அவரை சமூக வலைத்தளத்தில் கிண்டல் செய்ய, நீண்ட நாட்களாக மௌனம் சாதித்தார். தற்போது இதுகுறித்து ஒரு ஆங்கில நாளிதழில் மனம் திறந்துள்ளார்.

இதில் இவர் கூறுகையில், 'அவர் கருத்துக்களை மதிக்கின்றேன், ஆனால், படமே வரவில்லை அதற்குள் இப்படி பேசுவதை நான் ஏற்கமாட்டேன்' எனக் கூறியுள்ளார்.

## நடிகர் சங்க புகாருக்கு சரத்குமாரின் அதிரடி பதில்



நடிகர் சங்கம் சார்பில் அளித்துள்ள புகாருக்கு தற்போது விளக்கம் அளித்துள்ளார் சரத்குமார். முன்னாள் நடிகர் சங்கத்தலைவர் சரத்குமார் பதவியில் இருந்தபோது பல்கோடி ரூபாய் ஊழல் செய்திருப்பதாக நடிகர் சங்கத்தின் அறக்கட்டளை குழு உறுப்பினர் பூச்சி முருகன் சென்னை கமிஷனர் அலுவலகத்தில் புகார் கொடுத்திருக்கிறார்.

இதனிடையே புகார் குறித்து சென்னை கமிஷனர் அலுவலகத்திற்கு சரத்குமார் தரப்பில் விளக்கக் கடிதம் கொடுக்கப்பட்டுள்ளது. அதில், நடிகர் சங்கத்தில் நான் எந்த முறைகேடும் செய்யவில்லை, கார்த்தி, பூச்சி முருகன் கொடுத்திருக்கும் புகார் உண்மையில்லை. என் மீது கொடுக்கப்பட்டிருக்கும் புகார் அரசியல் உள்நோக்கம் கொண்டது என்று கூறியுள்ளார்.

## கமல் பட நடிகை ரகசிய திருமணம்



பிரமாண்ட இயக்குனர் ஷங்கர் இயக்கத்தில் கமல் இரட்டை வேடத்தில் நடித்திருந்த படம் இந்தியன். இந்த படத்தில் முக்கிய கதாநாயகியாக நடித்திருந்தவர் Urmila Matondkar. 80களில் நடிக்கத்தொடங்கிய இவர் தமிழ், ஹிந்தி, தெலுங்கு என அனைத்து மொழிகளிலும் இதுவரை 60க்கும் மேற்பட்ட படங்களில் நடித்துள்ளார்.

இப்போது 42 வயதாகும் இவர், காஷ்மீரைச் சேர்ந்த Mohsin Akhtar Mir என்ற தொழிலதிபரை ரகசியமாக திருமணம் செய்துகொண்டுள்ளார். ஊர்மிலா வீட்டில் மதியம் நடந்த திருமணத்தில் மணமக்களின் குடும்பத்தினரை தவிர யாரையும் அழைக்கவில்லையாம்.

## ஆஸ்கர் விருதை மறந்து சென்ற டிகாப்ரியோ



டிகாப்ரியோவிற்கு எப்படா ஆஸ்கர் கிடைக்கும் என கோடிக்கணக்கான ரசிகர்கள் காத்திருந்தனர். அவர்கள் நினைத்தது போலவே சில தினங்களுக்கு முன் நடந்த ஆஸ்கர் விருது விழாவில் சிறந்த நடிகருக்கான ஆஸ்கர் விருதை தட்டிச்சென்றார்.

. ஆனால், விருது விழா முடிந்து ஒரு ஹோட்டலில் விருந்திற்கு ஏற்பாடு செய்துள்ளனர். அப்போது அனைவருடன் டிகாப்ரியோ பாட்டுப்பாடி நடனமாடி கலக்கியுள்ளார். இதைத் தொடர்ந்து இவர் ஆஸ்கர் விருதை மறந்துவிட்டு காரில் ஏறிவிட்டார். பின் உதவியாளர் ஒருவர் இந்த விருதை எடுத்து வந்து அவரிடம் கொடுத்துள்ளார்

## பிரபல நடிகர் குறித்து ரித்திகா சிங்

இறுதிச்சுற்று என்ற ஒரே படத்தின் மூலம் அனைத்து தமிழ் சினிமா ரசிகர்களையும் கவர்ந்தவர் ரித்திகா சிங். இவர் அடுத்து மணிகண்டன் இயக்கத்தில் விஜய் சேதுபதிக்கு ஜோடியாக நடிக்கவுள்ளார். இதுகுறித்து இவர் 'விஜய் சேதுபதி குறித்து நிறைய கேள்விப்பட்டுள்ளேன் அவருடன் நடிப்பது மனதிற்கு சந்தோஷமாக உள்ளது. அவருடன் நடிப்பதற்கு முன் விஜய் சேதுபதி நடித்த அனைத்து படங்களையும் பார்த்துவிட்டு தான் படப்பிடிப்பிற்கு வருவேன்' என கூறியுள்ளார்.

## ஷங்கரை மிஞ்சும் இருமுகன் படக்குழுவினர்கள்



ஷங்கர் படங்கள் என்றால் ஹீரோ யார் என்று பார்ப்பதே இல்லை, எதிர்ப்பார்ப்பு பூஜை போட்ட அன்றே தொடங்கிவிடும். அந்த எதிர்ப்பார்ப்பை பொய்யாக்காமல் ஷங்கர் தன்னால் முடிந்த அளவிற்கு படத்தில் சர்ப்ரைஸ் வைத்திருப்பார். மேலும், தன் படங்களின் படப்பிடிப்பு புகைப்படங்கள் ஏதும் வெளியவே வரக்கூடாது என்பதில் மிகக் கவனமாக இருப்பார்.

அதற்காக படப்பிடிப்பு தளத்தில் யாரையும் செல்போன் பயன்படுத்த விட மாட்டார். இதேபோல் தான் இருமுகன் படப்பிடிப்பும் நடக்கின்றதாம். ஏனெனில் விக்ரமின் கெட்டப் வெளியே வரகூடாது என்பதற்காக பல கட்டளைகளை விடுத்துள்ளனர்.

## அதிர்ச்சியில் மாப்பிள்ளை சிங்கம் படக்குழுவினர்கள்



விமல்-அஞ்சலி நடிப்பில் நீண்ட நாட்களாக கிடப்பில் இருக்கும் படம் மாப்பிள்ளை சிங்கம். இப்படம் இம்மாதம் திரைக்கு வருவதாக இருந்தது. ஆனால், அதற்குள் யாரோ இந்த படத்தின் சென்ஸார் காப்பியை இணையத்தில் லீக் செய்துவிட்டனர். இதனால், படக்குழு கடும் அதிர்ச்சியில் உள்ளது.

மேலும், சென்ஸார் காப்பியே இப்படி இணையத்தில் வருவது கோலிவுட்டையே அதிர வைத்துள்ளது. கடந்த வருடம் வெளிவந்த ப்ரேமம் படம் கூட சென்ஸார் ப்ரிண்ட் லீக் ஆனது குறிப்பிடத்தக்கது.

## கனவை நிறைவேற்ற முடியாத ஏக்கத்தில் கீர்த்தி சுரேஷ்



விஜய், தனுஷ், சிவகார்த்திகேயன் என முன்னணி நடிகர்களுக்கு தொடக்கத்திலேயே ஜோடியாகிவிட்டார் கீர்த்தி சுரேஷ். இவர் தற்போது சிவகார்த்திகேயனுக்கு ஜோடியாக ரெமோ படத்தில் நடித்து வருகிறார். இப்படத்தில் இவர் மருத்துவராக நடிக்கின்றாராம். இதை அறிந்த கீர்த்தியின் அம்மா மேனகா, 'என் மகளை மருத்துவராக்க வேண்டும் என்பதே எனது விருப்பம்.

ஆனால், அதற்குள் நடிக்க வந்து விட்டார்' என வருத்தத்துடன் கூறினாராம். இதனால், அம்மாவின் கனவை நிறைவேற்ற முடியாத ஏக்கத்தில் உள்ளாராம் கீர்த்தி சுரேஷ்.

## தெறி படத்தில் இணைந்த டி.ஆர்



புலி படத்தின் ஓடியோ வெளியீடு விழாவில் 'இது அசத்தலான புலி, அசால்டான புலி, ஆரவாரமான புலி' என மூச்சு விடாமல் விஜயை புகழ்ந்து பேசி அனைவரின் கவனத்தையும் ஈர்த்தவர் T.R. இவர் இப்போது விஜய் நடிக்கும் தெறி படத்தில் ஒரு குத்து பாட்டு பாடியுள்ளாராம். அவர் பேசினாலே அனல் பறக்கும், பாடினால் சொல்லவா வேண்டும்.

விஜய், சமந்தா, எமி மற்றும் பலர் நடிப்பில் அட்லி இயக்கிவரும் தெறி ஏப்ரல் 14ம் திகதி தியேட்டர்களில் வெளியாகவுள்ளது. பாடல்களை அனைவரும் எதிர்பார்த்துகொண்டிருக்கும் நிலையில், ஓடியோ வெளியீட்டுத் திகதி மிக விரைவில் அறிவிக்கப்படவுள்ளது.

## கபாலியில் பன்ச் வசனங்கள் இல்லை



சூப்பர் ஸ்டார் ரஜனிகாந்த் நடித்த கபாலி படத்தை பற்றி இந்த வாரம் பல தகவல்கள் வெளிவந்துள்ளது. இப்படத்தில் ரஜனி ஒரு International DON ஆக தோன்றுகிறாராம். ஒரு கட்டத்தில் இதையெல்லாம் விட்டு அனாதை குழந்தைகளுக்காக ஒரு ஆசிரமம் தொடங்கி தன் வாழ்க்கையை நிம்மதியாக வாழ நினைக்கும்போது, மீண்டும் ஒரு சிலர் இவரை தொந்தரவு செய்ய, பின் கபாலி ஆடும் ஆட்டம் தான் ஹைலைட்.

இப்படத்தில் ரஜனிக்கும், ராதிகா ஆப்தேவிற்கும் ஒரு டூயட் உள்ளது. ஆனால், இவை நடுத்தர வயதை தாண்டிய ஓர் உறவை சித்தரிக்க கூடியவையாம். மேலும், இப்படத்தில் ரஜனிக்கு பன்ச் வசனங்கள் இல்லை. ஆனால், அவர் பேசும் ஒவ்வொரு வசனமும் அத்தனை பவர்புல்லாக இருக்குமாம்.

சிவகார்த்திகேயன் தற்போது முன்னணி நடிகர் என்று கூறும் அளவிற்கு வளர்ந்துவிட்டார். மேலும், சில மாதங்களுக்கு முன் இவரை கமல் ரசிகர்கள் தாக்கிவிட்டனர் என்று ஒரு செய்தி வந்தது. ஆனால், இதை கமல் மற்றும் சிவகார்த்திகேயன் இருவரும் மறுத்தனர். இந்நிலையில் நீண்ட இடைவெளைக்குப் பிறகு இருவரும் ஒரு மேடையில் தோன்றவுள்ளனர். தினைராஸ் பழனிச்சாமி இயக்கத்தில் மியான் படத்தின் இசை வெளியீட்டு விழாவில் சிவகார்த்திகேயன் மற்றும் கமல்ஹாசன் இருவரும் பங்கேற்க உள்ளதாக கூறப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1956–2009வரை சிங்கள இனத்தால் திட்டமிட்டுச் செய்யப்பட்ட தமிழினப் படுகொலைகள்

கடந்தவாரத் தொடர்ச்சி...

63. கல்முனை படுகொலை - கல்முனை ராணுவ முகாமில் 11.08.1990 அன்று சிங்கள ராணுவம்/சிங்கள சிறப்புப்படையினரால் பெண்கள் ராணுவ முகாமில் பாலியல் வல்லுறவிற்கு உட்படுத்தி கொல்லப்பட்டனர்.

64. துறைநீலாவணை படுகொலை - பல்வேறு இடங்களில் 12.06.1990 அன்று 60பேர் சிங்கள ராணுவத்தால் கொலை.

65. ஏறாவூர் மருத்துவமனை படுகொலை - மருத்துவமனையில் 12.08.1990அன்று 10பேர் சிங்கள ராணுவத்தால் கொலை.

66. கோரவெளி படுகொலை - பல்வேறு இடங்களில் 14.08.1990அன்று 15பேர் சிங்கள ராணுவத்தால் கொலை.

67. சேனகன் படுகொலை - பல்வேறு இடங்களில் 26.08.1990அன்று 4பேர் சிங்கள ராணுவத்தால் கொலை.

68. நெல்லியடி சந்தை படுகொலை - சந்தையில் 29.08.1990அன்று 16பேர் சிங்கள ராணுவத்தால் கொலை.

69. சத்துருக்கொண்டான் படுகொலை - பல்வேறு இடங்களில் 09.09.1990அன்று 205பேர் சிங்கள ராணுவத்தால் கொலை.

70. நட்பிட்டிமுனை படுகொலை - கல்முனை அதிரடிப்படை முகாமில் 10.09.1990 அன்று 23பேர் சிங்கள ராணுவம்/சிங்கள காவல்துறையால் கொலை.

71. வந்தாறு மூலை படுகொலை - பல்வேறு இடங்களில் 05&23.09.1990அன்று 174பேர் சிங்கள ராணுவத்தால் கொலை.

72. ஒட்டுசுட்டான் படுகொலை - பல்வேறு இடங்களில் 27.11.1990அன்று 12பேர் சிங்கள வான்படையால் கொலை.

73. புல்லுமலை படுகொலை - கோவிலில் 07.1984அன்று 9பேர் சிங்கள ராணுவம் இளம்பெண்களும். பெண் குழந்தைகளும் வன்புணர்ச்சி செய்யப்பட்டனர். பின் வெட்டியும் வயிற்றுபகுதி கிழிக்கப்பட்டும் கொலை செய்யப்பட்டனர்.

பல்வேறு இடங்களில் 04.01.1985அன்று 10பேர் சிங்கள ராணுவத்தால் கொலை.

பல்வேறு இடங்களில் 10.01.1985அன்று 10பேர் சிங்கள ராணுவத்தால் கொலை.

பல்வேறு இடங்களில் 10.11.1986அன்று 103பேர் சிங்கள ராணுவத்தால் கொலை.

பல்வேறு இடங்களில் 1986அன்று 7பேர் சிங்கள ராணுவத்தால் கொலை.

குளத்தில் மீன் பிடிக்கும்போது 1987அன்று 14பேர் சிங்கள ராணுவத்தால் கொலை.

74. புதுக்குடியிருப்பு சந்தி படுகொலை - பல்வேறு இடங்களில் 30.01.1991அன்று 28பேர் சிங்கள வான்படையால் ஒரு நிறை மாத கர்ப்பிணி பெண் குண்டு வீச்சிலிருந்து தப்பிக்க பதுங்கு குழியில் குதித்ததில் குழந்தை வெளிவந்தது. பின் உடல் ஊனமுற்றார்.

75. உருத்ரபுரம் படுகொலை - பல்வேறு இடங்களில் 04.02.1991அன்று 9பேர் சிங்கள வான்படையால் இறுதி ஊர்வலத்தில் குண்டுகள் வீசப்பட்டன.

76. வங்காலை படுகொலை - தள்ளாடி ராணுவ முகாமில் 17.02.1991அன்று 5பேர் சிங்கள ராணுவத்தால் கொலை.

77. வட்டக்கச்சி படுகொலை - பல்வேறு இடங்களில் 28.02.1991அன்று 9பேர் சிங்கள வான்படையால் கொலை.

78. வந்தாறு மூலை படுகொலை - தெருவில் 09.06.1991அன்று 10பேர் சிங்கள ராணுவத்தால் கொலை.

79. கொக்கக்கட்டிச்சோலை படுகொலை - பல்வேறு இடங்களில் 12.06.1991அன்று 220க்குமேல் சிங்கள வான்படையால் மக்கள் தலைகளை வெட்டி கொலை செய்யப்பட்டனர். கண்கள் தோண்டி எடுக்கப்பட்டன. ஒரு தாய் தனது குழந்தைக்கு பால் கொடுத்துக்கொண்டிருந்த நிலையிலேயே கொலை செய்யப்பட்டார். மேலும் ஒரு குழந்தை சுவற்றில் அறைந்து கொலை செய்யப்பட்டது.

80. கிண்ணியடிபடுகொலை - பல்வேறு இடங்களில் 12.07.1991அன்று 13பேர் சிங்கள ராணுவத்தால் கொலை.

81. கரபோலை. முத்துக்கல் படுகொலை - பல்வேறு இடங்களில் 1991அன்று 97பேர் சிங்கள ராணுவத்தால் கொலை.

82. வற்றாப்பளை படுகொலை - பொங்கல் விழாவின்போது 18.05.1992அன்று 14பேர் சிங்கள வான்படையால் கொலை.

83. தெள்ளிப்பளை கோவில் படுகொலை - கோவில் 30.05.1992அன்று 10பேர் சிங்கள வான்படையால் கொலை.

84. மைலந்தனை படுகொலை - பல்வேறு இடங்களில் 09.08.1992அன்று 50பேர் சிங்கள ராணுவத்தால் கொலை.

85. கிளாலி படுகொலை - கடலில் 02.01.1993அன்று 35பேர் சிங்கள கடற்படையால் கொலை.

29.07.01993அன்று 17பேர் சிங்கள கடற்படையால் கொலை.

86. மாத்தளன் படுகொலை - சமுதாய கூட திறப்பு விழாவில் 18.09.1993ஆண்டு 20பேர் சிங்கள வான்படையால் கொலை.

87. சாவகக்கேசரி. சங்கத்தானை படுகொலை பதுங்கு குழியில் 28.09.1993அன்று 30பேர் சிங்கள வான்படையால் கொலை.

88. கொக்குவில் கோவில் படுகொலை - கோவிலில் 29.09.1993அன்று 3பேர் சிங்கள வான்படையால் கொலை.

89. குருநகர் தேவாலைய படுகொலை - தேவாலயத்தில் 13.11.1993அன்று 13பேர் சிங்கள வான்படையால் கொலை.

90. சுண்டிக்குளம் படுகொலை - கடலில் 18.02.1994அன்று 10பேர் சிங்கள வான்படையால் கொலை.

91. நவாலி தேவாலய படுகொலை - தேவாலயத்தில் 09.07.1995அன்று 150பேர் சிங்கள வான்படையால் கொலை.

92. நாகர்கோவில் படுகொலை - பள்ளிக்கூடத்தில் 22.09.1995 அன்று 40பேர் சிங்கள வான்படையால் 7பேர் மாணவர்கள் வகுப்பறைக்குள் கொலை செய்யப்பட்டனர்.

93. செம்மணி புதைகுழிகள் - பல்வேறு இடங்களில் 1996அன்று 400பேர் சிங்கள ராணுவத்தால் 7பேர் சிங்கள வீரார்களால் கொலை - நீதிமன்ற வாக்குமூலம்.

94. கிளிநொச்சி நகர படுகொலை - பல்வேறு இடங்களில் 1996-1998அன்று 184பேர் சிங்கள ராணுவத்தின் கழிவு நீர்த்தொட்டிகளில் இருந்தும் கிணற்றில் இருந்து பல மனித மண்டை ஓடுகள் எடுக்கப்பட்டன.

95. குமாரபுரம் படுகொலை - கிராமத்தில் 11.2.1996 26அன்று சிங்கள ராணுவத்தினால் ஒரு 16 வயது பெண் இராணுவத்தினரால் வன்புணர்ச்சி செய்யப்பட்டதில் உடல் முழுவதும் நகக்கீறல்களாலும் பற்களால் கடித்த காயங்களினாலும் அவதிப்படுவதை காண சகிக்காமல் அவளை சுட்டுக்கொன்றதாக ஒரு சிங்கள ராணுவ வீரன் விசாரணையின்போது தெரிவித்தான்.

96. நாச்சிக்குடா படுகொலை- வீட்டில் உறங்கும்போது 16.03.1991அன்று 19பேர் சிங்கள ராணுவத்தால் கொலை.

97. தம்பிராய் சந்தை படுகொலை - சந்தையில் 17.05.1996ஆண்டு 7பேர்சிங்கள வான்படையால் கொலை.

98. மல்லாவி படுகொலை - பல்வேறு இடங்களில் 24.07.1996அன்று 9பேர் சிங்கள வான்படையால் கொலை.

99. வவுனிக்குளம் படுகொலை - பல்வேறு இடங்களில் 26.09.1996அன்று 4பேர் சிங்கள வான்படையால் கொலை.

100. கோணாவில் படுகொலை - தெருவில் 27.09.1996அன்று 5பேர் சிங்கள வான்படையால் கொலை.

101. முள்ளிவாய்க்கால் படுகொலை - கடற்கரையில் 13.05.1997அன்று 9பேர் சிங்கள வான்படையால் கொலை.

102. மாங்குளம் படுகொலை - தெருவில் 08.06.1997அன்று 7பேர் சிங்கள இராணுவத்தால் கொலை.

103. அக்கராயன் மருத்துவமனை படுகொலை - மருத்துவமனையில் 15.07.1997அன்று 3பேர் சிங்கள ராணுவத்தால் கொலை.

தஞ்சமடைந்த தேவாலயம் 15.08.1997அன்று 15பேர் சிங்கள வான்படையால் கொலை.

104. தம்பலகாமம் படுகொலை - கிராமத்தில் 01.02.1998அன்று 8பேர் சிங்கள ராணுவத்தால் கொலைசெய்யப்பட்ட ஒருவரின் பிறப்புறுப்பை அறுத்து அவரது வாயில் திணித்து வைத்தனர் ராணுவத்தினர்.

105. பழையவட்டக்கச்சி படுகொலை - பல்வேறு இடங்களில் 26.03.1998அன்று 6பேர் சிங்கள வான்படையால் கொலை.

106. சுதந்திரபுரம் படுகொலை - கிராமத்தில் 10.06.1998அன்று 33பேர் சிங்கள வான்படையால் கொலை.

107. விசுவமடு படுகொலை - பல்வேறு இடங்களில் 25.11.1998அன்று 6பேர் சிங்கள ராணுவம் உணவருந்திக் கொண்டிருந்த ஒரு குழந்தை மீது ஏவுகணை வெடித்ததில் அக்குழந்தை அக்கணமே கொல்லப்பட்டது.

108. சுண்டிக்குளம் படுகொலை - அகதிகள் குடியிருப்பில் 02.12.1998அன்று 7பேர் சிங்கள ராணுவத்தால் கொலை.

109 மந்துவில் படுகொலை - பல்வேறு இடங்களில் 15.09.1999அன்று 29பேர் சிங்கள வான்படையால் கொலை.

110. பாலிநகர் படுகொலை - பல்வேறு இடங்களில் 03.09.1999அன்று 25பேர் சிங்கள ராணுவத்தால் கொலை.

111. பாலிநகர் படுகொலை - பல்வேறு இடங்களில் 03.11.1999அன்று 6பேர் சிங்கள வான்படையால் கொலை.

112. மடு தேவாலய படுகொலை - தேவாலயம் 20.11.1999அன்று 44பேர் சிங்கள ராணுவத்தால் கொலை. இப்படுகொலையில் ஒரு தாய் தன் 4 குழந்தைகளையும் பறிகொடுத்தார்.

113. பிண்டுநுவேவா படுகொலை - மறுவாழ்வு மையம் 25.10.2000அன்று 28பேர் சிங்கள வான்படையால் கொலை.

114. மிருசுவில் படுகொலை - பல்வேறு இடங்களில் 19.12.2000அன்று 9பேர் சிங்கள ராணுவத்தால் கொலை.

115. பேசாலை வீட்டுத்திட்ட படுகொலை - வீட்டில் 23.12.2005அன்று 4பேர் சிங்கள கடற்படையால் கொலை.

116. திருகோணமலை மாணவர் படுகொலை - மாணவர்கள் கூடும் இடத்தில் 02.01.2006அன்று 5பேர் சிங்கள இனவெறியாளர்கள்/சிங்கள ராணுவத்தினால் கொலை.

117. மானிப்பாய் குடும்ப படுகொலை - வீட்டில் 24.01.2006 அன்று 3பேர் சிங்கள இனவெறியாளர்களால் கொலை.

118. திருகோணமலை படுகொலை - கடைவீதியில் 12.04.2006அன்று 15பேர் சிங்கள இனவெறியாளர்களால் கொலை.

119. கொம்புவைத்தகுளம் படுகொலை - கடத்திக்கொலை - 13.04.2006 அன்று 3பேர் சிங்கள ராணுவத்தால் கொல்லப்பட்டவர்களின் முகங்கள் திராவகம் ஊற்றி சிதைக்கப்பட்டிருந்தன.

120. புத்தூர் படுகொலை - கடத்திக்கொலை 18.04.2006அன்று 5பேர் சிங்கள ராணுவத்தால் கொலை.

121. மூதூர் குண்டுவெடிப்பு - கிராமத்தில் 25.04.2006அன்று 12பேர் சிங்கள முப்படைகளால் கொலை.

122. உதயன் பத்திரிகை தாக்குதல் - பத்திரிகை அலுவலகம் 02.06.2006அன்று 2பேர் சிங்கள ராணுவத்தால் கொலை.

123. நெல்லியடி படுகொலை - சாலை 04.05.2006அன்று 7பேர் சிங்கள ராணுவத்தால் கொலை.

124. மதுவில் கோவில் படுகொலை - கோவில் 06.05.2006அன்று 8பேர் சிங்கள ராணுவத்தால் கொலை.

125. அல்லைபிட்டி படுகொலை - வீட்டில் 13.05.2006அன்று 13பேர் சிங்கள துணை ராணுவத்தால் கொலை.

126. வடமுனைக் கண்ணிவெடி படுகொலை பயணத்தின்போது 07.06.2006அன்று 10பேர் சிங்கள ராணுவத்தால் கொலை.

127 வங்காலை குடும்பம் - படுகொலை வீட்டில் உறங்கும்போது 08.06.2006அன்று 4பேர் சிங்கள ராணுவத்தால் மனைவியை பாலியல் வல்லுறவு செய்து கொன்றும் கணவனையும் குழந்தையையும் கொன்றும் தூக்கிலிட்டும் சென்றனர்.

128. கைதடி மனித புதைகுழி பல்வேறு இடங்களில் 06.2006அன்று 4பேர் படுகொலை.

129. பேசாலை தேவாலய படுகொலை - தேவாலயத்தில் 17.06.2006அன்று 4பேர் சிங்கள கடற்படையால் கொலை.

130. மயிலம்பாவெளி படுகொலை - சாலையில் 27.06.2006அன்று 3பேர் அடையாளம் தெரியாதவர்களால் கொலை.

131. முசலி படுகொலை - சாலையில் 28.06.2006அன்று 3பேர் சிங்கள ராணுவத்தால் 132பேர் அக்சன்பார்ம் தன்னார்வ தொண்டு நிறுவன படுகொலை. தன்னார்வதொண்டு நிறுவன அலுவலகம் 05.08.2006அன்று 17பேர் சிங்கள ராணுவத்தால் கொலை.

133. நெடுங்கேணி அம்புலன்ஸ் தாக்குதல் அம்புலன்ஸில் 08.08.2006அன்று 5பேர் சிங்கள ராணுவத்தின் ஆழ ஊடுருவும் அணியால் கொலை.

134. அல்லைபிட்டி ஏவுகணை தாக்குதல் - தேவாலயத்தில் 13.08.2006அன்று 12பேர் சிங்கள ராணுவத்தால் தஞ்சமடைந்து இருந்த மக்களை மனித கேடயமாக பயன்படுத்தினர்.

தொடரும்...

இரணியன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேள்விக்குறியாகும் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை

தமிழ் அரசியல்கைதிகளுடைய விடுதலை தொடர்பில் நீண்டகாலமாக அரச தரப்பினருடன் பேச்சுக்களை நடாத்திவரும் த.தே.கூட்டமைப்பு அவர்களின் விடுதலையில் எந்தளவில் அக்கறைகொண்டுள்ளார்கள் என்பதை கடந்தகால நிகழ்வுகளைக்கொண்டு கணிப்பிடமுடிகிறது. தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலைக்கு த.தே.கூட்டமைப்பின் அழுத்தங்கள் அரசிற்கு போதாமல் இருப்பதாக அரசியல் கைதிகள் குற்றஞ்சாட்டியிருக்கும் அதேநேரம், கைதிகளைப் பார்வையிடுவதற்காக அரசியல்வாதிகள் பலரும் சென்றுவருகின்ற நிகழ்வுகள் மாத்திரமே அண்மையகாலமாக நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இதுவரையில் எத்தனை அரசியல்கைதிகள் மொத்தமாக எஞ்சியிருக்கின்ற போராளிகளை விடுதலை செய்வதற்கும் இலங்கையரசு மறுத்து வருகின்றது.

ஜனநாயகம் நிலைநாட்டப்பட்டுள்ளது எனக்கூறிக்கொண்டிருக்கும் மைத்திரி-ரணில் அரசாங்கம் இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுவது ஜன நாயகத்தினை மீறும் ஒரு செயலாகும். பயங்கரவாதத் தடைச்சட்டத்தினை இலங்கையிலிருந்து நீக்குவதற்கு உலக நாடுகளுக்கு அதிகாரம் இல்லை. அவர்கள் அழுத்தம் கொடுப்பார்களாகவிருந்தால் பல்வேறு விதமான பிரச்சினைகளை சர்வதேச ரீதியாக எதிர்நோக்கவேண்டியேற்படும். அதனையே ஐ.நா மனித உரிமை ஆணையாளர் அல் ஹூசைன் அவர்கள் கூறிச்சென்றுள்ளார்.



மோசமான தண்டனைகள் கிடைத்துவிடும் என்கின்ற காரணத்தினால் இக்கைதிகள் தமது குற்றத்தினை ஒப்புக்கொள்ளாது தமது போராட்டத்தினை தொடர்ந்து முன்னெடுத்து வருகின்றனர்.

வெவ்வேறு காரணங்களுக்காக தடுத்துவைத்திருக்கின்றோம் எனக் கூறும் அரசு. இவர்களை நாம் விடுதலை செய்வதனால் சிங்கள தேசத்தில் குழப்பநிலைகள் உருவாகும். இப்பிரச்சினைக்கு நாம் நினைத்த மாத்திரத்திலே முடிவுகளை மேற்கொள்ள இயலாது என்று அரசு தீர்மானித்துள்ளது.

மஹிந்த ரஜபக்ஷவினால் விடுதலை செய்யப்பட்ட அரசியல்கைதிகளில் 90%மானவர்கள் சிறுவர்களே. 10%வீதமானவர்கள் போராளிகள். அதிலும் சரணடைந்த தளபதிகள், துணைத்தளபதிகள், கேணல் என அனைவரும் சுட்டுக்கொல்லப்பட்டனர். யுத்தம் நடைபெற்றுக்கொண்டிருக்கும போதும், 1990ஆம் ஆண்டுகளில் தடுத்துவைக்கப்பட்டவர்களே இதில் உள்ளடக்கப்படுகின்றார்கள். தண்டனை பெற்றவர்கள், தடுப்புக்காவலில் வைக்கப் பட்டவர்கள் என அண்ணளவாக 1000பேர் வரையில் இருக்கலாம். ஆனால் இவர்களின் சரியான தரவுகள் இதுவரையில் வெளியிடவில்லை. அண்மையில் மகசின் சிறைச்சாலையில் 85பேரும், அநுராதபுரத்தில் 08பேர் என்ற அடிப்படையில் தான் உண்ணா விரதத்தில் ஈடுபட்டிருந்தனர். 250 முள்ளிவாய்க்காலில் இருந்தார்கள். அதில் 140000பேரின், நிலைமை என்ன? காணாமற்போனார்களா? கொல்லப்பட்டார்களா? அவ்வாறு அவர்கள் காணாமற்போயிருந்தால் அல்லது கொல்லப்பட்டால் இவர்கள் அனைவரும் பயங்கரவாதிகளா? இனப்படுகொலை தொடர்பாக வடமாகாணசபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டபோது மன்னார் ஆயர் ஜோசப் அவர்களின் கூற்றின்படி 144000பேர் கொல்லப்பட்டார்கள் எனக் கூறியிருந்தார். இங்கு இனப்படுகொலை இடம்பெற்றது என்பதற்கு பல சான்றுகள் இருக்கின்றன. இதனை தற்போதைய கூட்டரசாங்கம் மூடிமறைத்து வருகின்றது. ஒருபோதும் இலங்கை இராணுவத்தை அரசாங்கம் காட்டிக்கொடுக்க முன்வராது. இதில் மாற்றுக்கருத்தில்லை. இனப்படுகொலை இடம்பெற்றது என்பதையும் இவ்வரசாங்கம் ஏற்றுக்கொள்ளாது. போர்க்குற்ற விசாரணையே ஏற்றுக்கொள்ளப்படும். இதில் தமிழினத்திற்கு எந்தவித தீர்வுகளும் கிடைக்கப்போவதில்லை. தமிழ் மக்களுக்கான தீர்வுத்திட்டங்களை முன்னெடுப்போம் எனக்கூறிக்கொண்டு விக்னேஸ்வரன் தலைமையில் புதிதாக உருவாகியிருக்கும் தமிழ் மக்கள் பேரவையும் இதற்கான தீர்வுகளை பெற்றுக் கொடுக்கப்போவதில்லை. ஒவ்வொரு அரசியல்வாதிகளும் தத்தம் கதிரைகளை பலப்படுத்திக்கொள்கிறார்களே

சிறைகளில் இருக்கிறார்கள் என்கின்ற விபரங்கள் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு மற்றும் தமிழ்த்தரப்புக்கள். இராணுவ உயர் அதிகாரிகளிடத்தில் இல்லை என்றே குறிப்பிடவேண்டும். 02, 03, 05, 10பேர் என அரசியல்கைதிகள் விடுதலை செய்யப்பட்டிருக்கின்றார்கள். தமிழ் அரசியல்கைதிகளின் விவகாரங்களில் இரு வகையானோர் இருக்கிறார்கள் அதாவது குற்றத்தை ஒப்புக்கொண்டு தண்டனை வழங்கப்பட்ட கைதிகள் மற்றும் இதுவரையில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு சிறைகளில் தடுத்துவைக்கப்பட்டுள்ள கைதிகள் என அடங்குகின்றனர். இக்கைதிகளின் விடுதலை என்பது இனங்காணப்பட்ட ஒரு விடயமாகவிருந்தால் அதனை அனைத்துக்கட்சிகளும்பரிசீலனைசெய்து யார் உண்மையில் அரசியல்கைதிகள் என்பதனை இனங்கண்டு. அவர்களுக்கான விடுதலையினை பெற்றுக்கொடுப்பதற்கு முனைப்புடன் இருப்பதாகத் தெரியவில்லை. த.தே.கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களிடம் அரசியல்கைதிகளின் பெயர் விபரங்கள் இருக்கின்றதா என வினவ அவர்களிடம் முழுமையான விபரங்கள் இல்லை என்கிறார்கள்.

250 கைதிகள் உள்ளதாக பொதுவாகக் கூறப்பட்டதே தவிர இவர்களுள் யார் அரசியல்கைதிகள் என பிரித்துக் காட்டப்படவில்லை. அதிகமாக விடுதலைப்புலிகளின் முக்கியஸ்தர்கள் பலரை இராணுவம் இறுதிநேர யுத்தத்தின்போது கொன்றது. 200இற்கும் மேற்பட்ட முக்கிய தளபதிகள் உயிருடன் இல்லை. இவர்கள் காணாமற்போனோர் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளனர். பயங்கரவாதிகளை அழிப்பதாகக்கூறி போராட்ட இலட்சியவாதிகளையும் விடுதலைப்புலிகளின் போராட்டத்தையும் சர்வதேசத்தின் உதவியுடன் அழித்தொழித்த இலங்கை அரசு இறுதி நேர யுத்தத்தின் போது கண்மூடித்தனமாக மக்களின் மீது தாக்குதல்களை நடாத்திவிட்டு இலங்கையில் இடம்பெற்றது போர்க்குற்றமே.இனப்படுகொலை இல்லை என்பதை மூடிமறைக்கும் அதேநேரம் யுத்தம் நிறைவடைந்து 06ஆண்டுகளைக் கடந்துள்ள நிலையிலும் இன்னமும் விடுதலைப்புலிகளின் போராட்டம் இருப்பதாகக்கூறி பயங்கரவாதத் தடைச்சட்டத்தினை நீக்காதிருப்பதுடன்

யுத்தம் நிறைவடைந்து ஆறு ஆண்டுகளைக் கடந்துள்ள நிலையில் பயங்கரவாதத் தடைச்சட்டத்தினை அரசு ஏன் இன்னமும் நீக்காமலிருக்கவேண்டும். பிரதான விடயமாக விடுதலைப்புலிகளின் மீள் உருவாக்கம் ஆரம்பித்துவிடும் என்ற காரணம். இந்தியா மீண்டும் விடுதலைப்புலிகளுக்கு ஆயுதங்களை வழங்கி கெரில்லா முறையிலான யுத்தத்தை ஆரம்பித்துவைக்கும். சர்வதேச நாட்டின் உதவி என்பது அமெரிக்காவின் ஊடாக நெறிப்படுத்தப்பட்டு தனது சர்வாதிகார தன்மையினை இலங்கையில் திணிப்பதற்கான நிலைமைகள் உருவாக்கப்படும். சர்வதேச ரீதியில் பயங்கரவாதத்தை முற்றாக அழித்துவிட்டோம் எனக் கூறிக்கொண்டிருக்கும் இலங்கை அரசு சர்வதேச நாடுகளது அழுத்தங்கள் மற்றும் செயற்பாடுகள் மீண்டுமொரு போராட்டப் பாதைக்கு இட்டுச்செல்லும் என்ற காரணத்தினாலேயே இன்னமும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்காமல் அமுலில் வைத்திருக்கிறது. இச்சட்டம் நீக்கப்பட்டால் அரசியல்கைதிகள் என்ற வரையறைக்குள் உள்ளவர்கள் அனைவரும் விடுதலை செய்யப்படுவார்கள். இதில் கொலைக்குற்றங்களுடன் தொடர்புடைய அரசியல்கைதிகளும் இருக்கிறார்கள். இதனால் அரசிற்கு பாரிய நெருக்கடிகள் தோற்றுவிக்கப்படும். உதாரணமாக கலஹாரி, அநுராதபுர தாக்குதல், கொலன்னாவ தாக்குதல், மத்தியவங்கி, வருமான வரித் திணைக்களம், கோத்தபாய, சந்திரிக்கா, பொன்சேகா போன்றோர் மீது அரசியல் ரீதியான தாக்குதல்களில் ஈடுபட்டவர்களை விடுதலை செய்யவேண்டிய நிலைமைஉருவாகும். இவர்கள் விடுதலைப் போராட்டத்தை முன்னின்று செயற்படுத்தியவர்களும் கூட. இவர்களின் விடுதலையினால் இலங்கை அரசாங்கம் தமக்கு அச்சுறுத்தல் ஏற்படும் என்றே எண்ணுகின்றது.

த.தே.கூட்டமைப்போ இவர்களுக்கான விடுதலை மிக விரைவில் கிடைத்துவிடும் அதற்கான அழுத்தங்களை கொடுத்துக்கொண்டிருக்கிறோம் எனக்கூறி நாட்கள் கடந்து செல்கின்றது. இவர்களை நம்ப முடியாத நிலைக்கு தற்போது இந்த அரசியல்கைதிகளின் நிலைமைகள் மாறியுள்ளது. திடீரென குற்றத்தை ஒப்புக்கொண்டால் இதனைவிட அரசியல்கைதிகளாக முன்னர் இனங்காணப்பட்டிருந்தனர். ஆனால் இன்று 93அரசியல் கைதிகளே இனங்காணப்பட்டுள்ளனர். ஒவ்வொரு சிறைச்சாலைக்கும்த.தே.கூட்டமைப்பினர் விஜயம் மேற்கொண்டு இத்தரவுகளைப் பெறமுடியும். இதனை இவர்கள் செய்யாதிருப்பதன் காரணம் என்ன? பாராளுமன்ற உறுப்பினர்களான சிறிதரன், சிவமோகன், சிவசக்தி ஆனந்தன் போன்றோர் மாத்திரமா தமிழ்த் தேசியக்கூட்டமைப்பில் இருப்பவர்கள். அரசியல்கைதிகளை சந்திப்பதற்கு இவர்களே அதிகமாக செல்கின்றனர். ஏனையவர்கள் அனைவரும் என்ன செய்ய நினைக்கிறார்கள். அரசியல்கைதிகள் என்ற போர்வையில் வருடக்கணக்கில் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் இவர்களுடைய மனநிலை எவ்வாறிருக்கும் என்பதை தமிழ் அரசியல்வாதிகள் புரிந்துகொள்ளமுடியும். வெறுமனே தேர்தல் காலங்களில் மாத்திரம் போலியான வாக்குறுதிகளைக்கூறி வாக்குப் பிச்சைக்கேட்கும் நீங்கள் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் அக்கறையின்மையுடன் செயற்படுவது என்பது தமிழ்த்தேசியக்கூட்டமைப்பை உருவாக்கிய; அவர் சார்ந்த தமிழினத்திற்கு செய்யும் மிகப்பெரிய துரோகமே. தமிழினத்தின் விடுதலைக்காக ஆயுதமேந்திப்போராடியவர்கள் இவர்கள்.

கரும்புலிகளின் வாழ்க்கைவரலாறுகளை எடுத்துக்கொண்டால் அவர்களுடைய தியாகங்கள் சொல்லில் அடங்காதவை. சர்வதேசம் தமிழினத்தின் விடுதலைக்கான கதவினை திறந்துவைக்கிறது எனக் கூறிக்கொள்ளும் த.தே.கூட்டமைப்பு அரசியல்கைதிகளின் விடுதலையினை விரைவுபடுத்தாதது கேலிக்கூத்தான ஒரு செயல். இனியாவது தரவுகளை திரட்டும் செயற்பாடுகளை த.தே.கூட்டமைப்பு மேற்கொள்ளவேண்டும். யுத்தம் உச்ச கட்டத்தினை அடைந்தபொழுது ஆயிரக்கணக்கில் போராளிகள் கொல்லப்பட்டார்கள். இறுதிப் போரின்போது 25000மேற்பட்ட போராளிகள் கொல்லப்பட்டதாகவும். 50000இற்கும் மேற்பட்டவர்கள் இருந்தார்கள் எனவும், இவர்களில் 11000பேர் விடுதலை செய்யப்பட்டார்கள் எனக்கூறப்படுகிறது. ஏனையவர்களுக்கு என்ன நடந்து எனக்கேட்டால் பதில் இல்லை. இதேபோன்று 4இலட்சம் பேர் தவிர தமிழ்த்தேசியம், சுயநிர்ணய உரிமை தொடர்பாக சிந்திப்பவர்கள் இல்லை. காலத்திற்குக்காலம் அரசியல் முறை கள் மாற்றம்பெற்றுச் செல்கின்றதே தவிர. தமிழ் அரசியல்கைதிகளின் விடுதலை தொடர்பில் தீவிர அக்கறை காட்டுவதாகத் தெரியவில்லை.

தமிழினத்தின் விடுதலைக்காகப் போராடிய இவ்வரசியல்கைதிகள் விடுதலை செய்யப்படாதிருப்பது என்பது கூட்டமைப்பாகவும், எதிர்க்கட்சியாகவும் இருந்துகொண்டு பயனற்ற செயற்பாடுகளில் த.தே.கூட்டமைப்பு ஈடுபடுவதென்பது மக்கள் மத்தியில் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது. பூகோள அரசியல், சர்வதேச பின்னணி என்று கூறியே தமிழ் மக்களை ஏமாற்றிய செயற்பாடுகளை மூத்த அரசியல்வாதிகள் செய்து வந்தார்கள். அதனையே தற்போதுள்ள தலைவர்களும் செய்துவருகின்றார்கள். இந்நிலையில் தமிழ் அரசியல்கைதிகளினது விடுதலை என்பது கேள்விக்குறியாகவே இருந்துவருகின்றது. சட்ட ரீதியாக இவர்களை விடுதலை செய்வதாகவிருந்தாலும் கூட அதற்கான முன்னெடுப்புக்களை எவரும் செய்ய முன்வரவில்லை. அவ்வாறு செயற்பட யாராவது முன்வந்தாலும் அவர்கள் த.தே.கூட்டமைப்பினைச் சார்ந்தவர்கள் இல்லையெனில் இது அரசின் சதித்திட்டம் என்றே கூறுகிறார்கள். விடுதலையின் பின்னர் கைதுசெய்வதற்கான உத்திகள் என்கிறார்கள். இவ்வாறிருக்கின்றபொழுது இந்த தமிழ் அரசியல்கைதிகளின் விடுதலைக்கு யார் குரல்கொடுப்பார்? தமிழீழத்தின் விடுதலைக்காகக் குரல்கொடுத்தவர்கள் இன்று மௌனிகளாக்கப்பட்ட நிலையில் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு எத்தகைய நிலைப்பாட்டினை எடுக்கப்போகின்றது. யுத்தம் நிறைவடைந்த பின்னர் இவ்வரசியல்கைதிகள் நிரந்தரமாகவே விடுதலைசெய்யப்பட்டுவிடுவாரக்ள என்ற காலம் கடந்து மீண்டுமொரு யுத்த பாசறைக்குள் தமிழ் மக்களை இட்டுச்செல்லும் வழிகளையே இவ்வரசாங்கம் எடுத்துச்செல்கிறது. இதற்கு உடந்தையாக தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு செயற்படுகிறது. அரசியல்கைதிகளின் தரவுகளை அறிந்துகொண்டு அதற்கமைய செயற படுவதே சிறந்த அரசியல் நகர்வாக அமையும் எனலாம்.

**மறவன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆன்மீக உலகம்



## நல்வாழ்விற்கான நற்சிந்தனைகள்

தண்ணீர் நிறைய குடியுங்கள். காலை உணவு ஒரு அரசன்/அரசி போலவும், மதிய உணவு ஒரு இளவரசன்/இளவரசி போலவும். இரவு உணவை யாசகம் செய்பவனைப்போலவும் உண்ண வேண்டும்.

இயற்கைஉணவை.பழங்களை அதிகமாக எடுத்துக்கொண்டு. பதப்படுத்தப்பட்ட உணவை தவிர்த்துவிடுங்கள்.

உடற்பயிற்சி மற்றும் பிரார்த்தனைக்கு நேரம் ஒதுக்குங்கள்.

தினமும் முடிந்த அளவு விளையாடுங்கள். நிறைய புத்தகம் படியுங்கள்.

ஒரு நாளைக்கு 10 நிமிடம் தனிமையில் அமைதியாக இருங்கள். குறைந்தது 7 மணிநேரம் தூங்குங்கள்.

குறைந்தது 10 நிமிடம் முதல் 30 நிமிடம் வரை நடைப்பயிற்சி மேற்கொள்ளுங்கள். உங்களை ஒருபொழுதும் மற்றவருடன் ஒப்பிடாதீர்கள். அவர்கள் பயணிக்கும்/மேற்கொண்டிருக்கும் பாதை வேறு. உங்கள் பர்தை வேறு.

எதிர்மறையான எண்ணங்களை எப்பொழுதும் மனதில் நினைக்காதீர்கள். உங்களால் முடிந்த அளவு வேலை செய்யுங்கள். அளவுக்கு மீறி எதையும் செய்யாதீர்கள்.

மற்றவர்களைப் பற்றிப் புறம் பேசுவதில் உங்கள் சக்தியை வீணாக்காதீர்கள். நீங்கள் விழித்திருக்கும் பொழுது எதிர்காலத்தைப்பற்றி நிறைய கனவு காணுங்கள்.

அடுத்தவரைப் பார்த்து பொறாமை கொள்வது நேர விரயம். உங்களுக்கு தேவையானது உங்களிடம் உள்ளது.

கடந்த காலத்தை மறக்க முயற்சி செய்யுங்கள். கடந்த காலம் உங்கள் நிகழ்காலத்தை சிதைத்துவிடும்.

வாழும் இந்த குறுகிய காலத்தில் யாரையும் வெறுக்காதீர்கள். எப்பொழுதும் மகிழ்ச்சியாக இருக்க கற்றுக் கொள்ளுங்கள்.

வாழ்க்கை ஒரு பள்ளிக்கூடம். நீங்கள் கற்றுக்கொள்ள வந்திருக்கிறீர்கள். சிக்கல்களும். பிரச்சனைகளும் இங்கு பாடங்கள்.

முடியாது என்று சொல்லவேண்டிய இடங்களில் தயவு செய்து முடியாது என்று சொல்லுங்கள். இது பல பிரச்சினைகளை ஆரம்பத்திலே தீர்த்துவிடும்.

வெளிநாட்டிலோ வெளியூரிலோ இருந்தால் குடும்பத்தில் இருப்பவர்களுக்கும். நண்பர்களுக்கும். வேண்டியவர்களுக்கும் அடிக்கடி தொலைபேசியிலோ. கடிதம் மூலமாகவோ தொடர்புகொண்டிருங்கள்.

மன்னிக்கப் பழகுங்கள். 70 வயதிற்கு மேலிருப்பவர்களையும். 6 வயதிற்கு கீழிருப்பவர்களையும் கவனிக்க நேரம் ஒதுக்குங்கள்.

அடுத்தவர்கள் என்ன நினைப்பார்களோ என்பதைப்பற்றி ஒருபொழுதும் கவலை கொள்ளாதீர்கள். உங்கள் நண்பர்களை மதிக்கப் பழகுங்கள்.

உங்கள் மனதிற்கு எது சரியென்று படுகிறதோ அதை உடனே செய்யுங்கள். ஒவ்வொரு நாளும் இறைவனுக்கு நன்றி சொல்லுங்கள்.



உங்கள் ஆழ்மனதில் இருப்பது சந்தோஷம் தான். அதை தேடி அனுபவித்துக் கொண்டே இருங்கள்.

உங்களுக்கு எது சந்தோஷத்தை கொடுக்காதோ. எது அழகை கொடுக்காதோ. நிம்மதியைக் கொடுக்காதோ அதை நீக்கிவிடுங்கள். எந்த சூழ்நிலையும் ஒருநாள் கண்டிப்பாக மாறும்.

எண்ணங்களுக்கேற்பவே ஒருவரது செயல்கள் அமைகிறது. எண்ணமே நல்ல. தீய செயல்களை செய்வதற்கு தூண்டுதலாக இருக்கிறது. நீர்ப்பரப்பில் ஒரு கல்லைப் போடுகிறீர்கள். கல் விழும் இடத்தில் அலைகள் தோன்றி. அப்படியே பரவி கரை வரையில் பெரிதாகி பின் மறைகிறது. அதைப்போலவே எண்ணத்தில் கல் போல விழும் தீய சிந்தனையே. அலைபோல உடல் முழுதும் பரவுகிறது. அந்த எண்ணம் கண்களை அடையும்போது. தீயவற்றை பார்க்கிறது. கைகளை அடையும்போது தீய செயல்களை செய்கிறது. கால்களை அடையும்போது செல்லக்கூடாத இடங்களுக்கு செல்ல வைக்கிறது. அதுவே நல்ல எண்ணமாக இருந்தால் செயல்களும் நல்லதாகவே இருக்கும். ஆகவே, மனதில் நற்சிந்தனைகளை வளர்த்துக்கொள்ளுங்கள்.

வெப்பம். குளிர்ச்சி இவ்விரண்டும் இயற்கையின் மாறுதல்களுக்கேற்ப சுழற்சியாக வந்து கொண்டே இருக்கிறது. கோடை காலத்தில் வெப்பத்தை வெறுத்து. குளிர்ச்சியை விரும்புகிறோம். குளிர்காலத்தில் குளிர்ச்சியை ஒதுக்கி. வெப்பத்தை தேடிச்செல்கிறோம். ஒரு சமயத்தில் நாம் விரும்பும் சூழலை. மற்றொரு நேரத்தில் வெறுக்கவும். விரும்பவும் செய்கிறோம். வெறுப்பதாலோ, விரும்புவதாலோ இவ்விரண்டிலிருந்தும் நாம் ஒதுங்கிவிட முடியாது. அதைப்போலவே இன்பமும். துன்பமும் வாழ்க்கையில் தொடர்ந்து நிகழ்ந்து கொண்டுதான் இருக்கும். இவை இரண்டையும் வேறுவேறாக பார்க்காமல் சமமாக பாவித்து ஏற்றுக்கொள்ளுங்கள்

உணவை வீணாக்காமல் இருப்பதும் கூட அன்னதானம் செய்த புண்ணியத்தை ஒருவனுக்கு கொடுக்கும்.

உண்பதற்காக உயிர் வாழாதீர்கள். உயிர் வாழ மட்டுமே உண்ணுங்கள்.

உடல் என்னும் இயந்திரம் இயங்க, அளவுடன் உண்ணவேண்டும்.

நாவின் ருசிக்காக அலையவேண்டாம். விரைவில் செரிக்கும் எளிய உணவுகளையே உண்ணுங்கள்.

உழைத்து உண்பவனுக்கு மட்டுமே உணவு உடம்பில் ஒட்டும். உழைக்காமல் ஒருவேளை கூட உண்ணக்கூடாது.

துன்ப இருளில் சிக்கித்தவிக்கும் உயிர்களுக்கு உதவிக்கரம் நீட்டுங்கள். உங்களின் இதயத்தில் அருள் ஒளி பரவத் தொடங்கும். ஒவ்வொரு அணுவிலும் கடவுள் நிறைந்திருக்கிறார். அவரை மறந்தால் நம்மால் உயிர் வாழவே முடியாது.

## நபிமொழிகள்

"மரணித்த பிறகு சொர்க்கத்தில் நுழைந்துவிட்ட ஒருவரிடம் 'நீ என்ன செய்து கொண்டிருந்தாய்?' என கேட்கப்பட்டது. அவராக நினைத்தோ அல்லது நினைவூட்டப்பட்டோ கூறினார். "நான் மக்களுக்கு வியாபாரம் செய்து கொண்டிருந்தேன். கஷ்டப்படுவோருக்கு -கடனாளிகளுக்கு-தவணை கொடுப்பேன். காசு பணங்களில் ஏதேனும் குறையிருந்தாலும் அதனை பெரிதுபடுத்தாது வாங்கிக்கொள்வேன்" என்று கூறினார். இதனால் அவரை அல்லாஹ் மன்னித்துவிட்டான்" என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். அறிவிப்பவர்: ஹுதைஃபா ரளியல்லாஹு அன்ஹு நூல்: முஸ்லிம்.

"உன் சகோதரன் அநியாயம் செய்பவனாக இருக்கும் நிலையிலும். அநியாயம் செய்யப்பட்டவனாக இருக்கும் நிலையிலும் உதவி செய்" என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். அப்போது ஒருவர் "அல்லாஹ்வின் தூதரே! அநியாயம் செய்யப்பட்டவனாக இருக்கும் நிலையில் நான் உதவி செய்வேன். ஆனால் அவன் அநியாயம் செய்யக்கூடியவனாக இருக்கும் போது எப்படி உதவுவது என்று எனக்குக் கூறுங்கள்" என்றார். "அநியாயம் செய்வதிலிருந்து நீ அவனைத் தடுக்கவேண்டும். அதுவே அவனுக்கு நீ செய்யும் உதவி" என நபி (ஸல்) அவர்கள் பதிலளித்தார்கள். அறிவிப்பவர்: அனஸ் (ரலி). நூல்: புகாரி.

'நம்பிக்கையாளர் கோழையாக இருக்க இயலுமா?' என்று நாங்கள் நபி அவர்களை வினவினோம். அதற்கு 'ஆம்' என்றனர். 'கஞ்சனாக இருக்க இயலுமா?' என்று வினவினோம். அதற்கு நபி அவர்கள் 'ஆம்' என்று பதிலளித்தனர். 'பொய்யனாக இருக்க இயலுமா?' என்று வினவினோம். அதற்கு அவர்கள். 'இல்லை (இருக்க இயலாது)' என்று பதிலளித்தார்கள். அறிவிப்பவர்: ஸஃப்வான் இப்னு ஸலீம். ஆதாரம்: முஅத்தா.

"ஒருவர் தம் தாய் தந்தையரை சபிப்பது பெரும் பாவங்களில் உள்ளதாகும்" என்று இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள். அப்போது "இறைத்தூதர் அவர்களே! ஒருவர் தம் தாய் தந்தையரை எவ்வாறு சபிப்பார்?" என்று கேட்கப்பட்டது. நபி (ஸல்) அவர்கள். "ஒருவர் இன்னொருவரின் தந்தையை ஏசுவார். உடனே (பதிலுக்கு) அவர் இவருடைய தந்தையையும் தாயையும் ஏசுவார் (ஆக. தம் தாய் தந்தையர் ஏசப்பட இவரே காரணமாகி றார்)" என்றார்கள். அறிவிப்பவர்: அப்துல்லாஹ் இப்னு அம்ர் (ரலி) ஆதாரம்: புகாரி

ஒருமுறை எங்கள் வீட்டிற்கு நபி அவர்கள் வருகை தந்தபோது என் தாயார் என்னை அழைத்து. 'இங்கே வா! உனக்கு ஒரு பொருள் தருகின்றேன்!' என்று கூறினார்கள். அதற்கு அண்ணலார். 'நீர் அவனுக்குத் எதனைத் தர விரும்புகின்றீர்?' என்று வினவினார்கள். அதற்கு என் தாயார். 'நான் அவனுக்கு பேரித்தம் பழம் தர விரும்புகின்றேன் என்று கூறினார்கள். அதற்கு அண்ணலார் என் தாயாரிடம். 'நீர் எதனையாவது அவனுக்குக்கொடுப்பதாக அழைத்து கொடுக்கவில்லையென்றால். உம் வினைப்பட்டியலில் இந்தப் பொய் எழுதப்பட்டுவிடும்' என்று கூறினார்கள். அறிவிப்பாளர் : அப்துல்லாஹ் பின் ஆமிர் ஆதாரம்: அபூதாவூத்.

"ஒருவர் ஒரு பாதையில் நடந்துசென்று கொண்டிருந்தபோது அவருக்குக் கடுமையானத் தாகம் ஏற்பட்டது. அவர் (வழியில்) ஒரு கிணற்றைக் கண்டார். உடனே அதில் இறங்கித் தண்ணீர் குடித்தார். பிறகு (கிணற்றைவிட்டு) அவர் வெளியே வந்தார். அப்போது நாய் ஒன்று தாகத்தால் (தவித்து) நாக்கைத் தொங்கவிட்டபடி ஈரமண்ணை நக்கிக் கொண்டிருப்பதைக்கண்டார். அந்த மனிதர் (தம் மனத்திற்குள்) 'எனக்கு ஏற்பட்டதைப்போன்ற (அ)தே (கடுமையான தாகம்) இந்த நாய்க்கும் ஏற்பட்டிருக்கிறது போலும்' என்று சொல்லிக்கொண்டார். உடனே (மீண்டும்) அக்கிணற்றில் இறங்கித் (தண்ணீரைத் தோலால் ஆன) தன்னுடைய காலுறையில் நிரப்பிக்கொண்டு அதைத்தம் வாயால் கவ்வியபடி (மேலேறி வந்து) அந்த நாய்க்குப் புகட்டினார். அல்லாஹ் இதற்கு நன்றியாக அவரை (அவரின் பாவங்களை) மன்னித்தான்" என்று இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள். (இதைச் செவியேற்ற) மக்கள். 'இறைத்தூதர் அவர்களே! மிருகங்களுக்கு உதவும் விஷயத்திலும் எங்களுக்கு (மறுமையில்) நற்பலன் கிடைக்குமா?' என்று கேட்டார்கள். அதற்கு நபி(ஸல்) அவர்கள், '(ஆம்:) உயிருடைய பிராணி ஒவ்வொன்றின் விஷயத்திலும் (அதற்கு உதவும் பட்சத்தில் மறுமையில்) அதற்கான நற்பலன் கிடைக்கும்' என்று கூறினார்கள்.

அறிவிப்பவர்: அபூ ஹுரைரா(ரலி).
ஆதாரம்: புஹாரி.

## நற்சிந்தனைகள்

தன்னை ஒருவராலும் ஏமாற்ற முடியாது எனச் செருக்கோடு இருப்பவனே கண்டிப்பாக ஏமாறிப் போகிறான். உலகம் ஒரு நாடக மேடை. ஒவ்வொருவரும் தம் பங்கை நடிக்கிறார்கள்.

செய்வதற்கு எப்போதும் வேலை இருக்கவேண்டும் அப்போதுதான் முன்னேற முடியும். அன்பையும் ஆற்றலையும் இடைவிடாது வெளிப்படுத்துகிறவர் ஆர்வத்துடன் பணி புரிவர்.

வெற்றி பெற்றபின் தன்னை அடக்கி வைத்துக்கொள்பவன். இரண்டாம் முறையும் வென்றவனாவான். தோல்வி ஏற்படுவது. "அடுத்தச் செயலைக் கவனமாகச் செய்" என்பதற்கான எச்சரிக்கை.

பிறர் நம்மைச் சமாதானப்படுத்த வேண்டும் என்று எதிர்பார்க்காமல். நாம் பிறரைச் சமாதானப்படுத்த முயல வேண்டும்.

கடினமான செயலின் சரியான பெயர்தான் சாதனை. சாதனையின் தவறான விளக்கம்தான் கடினம்.

ஒன்றைப்பற்றி நிச்சயமாக நம்ப வேண்டுமென்றால் எதையும் சந்தேகத்துடனே துவக்கவேண்டும்.

சரியானது எது என்று தெரிந்த பிறகும் அதைச் செய்யாமல் இருப்பதற்குப் பெயர்தான் கோழைத்தனம்.

ஒரு துளி பேனா மை பத்து இலட்சம் பேரைச் சிந்திக்க வைக்கிறது.

நல்லவர்களுடன் நட்பு கொள்ளுங்கள். நல்லறிவு தரும் நூல்களைப் படியுங்கள்.

பக்தி என்பது உணவுடன் தொட்டுக் கொள்ளும் ஊறுகாயாக இருக்கக்கூடாது. சத்து நிறைந்ததாக இருக்க வேண்டும்.

நாக்கைக் கட்டுப்படுத்தினால் உள்ளத்தையும். உடலையும் எளிதாக வசப்படுத்த முடியும். இஷ்ட தெய்வம் ஒன்றைத் தேர்ந்தெடுத்து. அதில் மனம் ஒன்றி தினமும் வழிபடுங்கள்.

கடமை தவறாமை. தர்மவழியில் நடத்தல் ஆகிய இரண்டையும் பின்பற்றினால் கடவுளை எளிதாக அடைய முடியும்.

துன்ப இருளில் சிக்கித் தவிக்கும் உயிர்களுக்கு உதவிக்கரம் நீட்டுங்கள். உங்களின் இதயத்தில் அருள் ஒளி பரவத் தொடங்கும்.

ஒவ்வொரு அணுவிலும் கடவுள் நிறைந்திருக்கிறார். அவரை மறந்தால் நம்மால் உயிர் வாழவே முடியாது.

இனிமையற்ற உண்மை. இனிமையான பொய் இரண்டுமே வாழ்வில் விலக்கப்பட வேண்டியவை. உண்மையை விட மதிப்பு மிக்க விஷயம் வேறில்லை. அது ஒன்றே என்றும் நிலைத்திருக்கும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அறிவியல் உலகம்



## உடலினுள் உள்ள பாகங்களைக்காட்டும் அப்ளிகேஷன் அறிமுகம்



ஸ்மார்ட் கைப்பேசிகள் அறிமுகமாகிய பின்னர் அவை பல்வேறு துறையிலும் தமது ஆக்கிரமிப்பை செலுத்திவருகின்றன. இவற்றிற்குக் கல்வித்துறையும் விதிவிலக்கு அல்ல. இதன் ஒரு அங்கமாக தற்போது Virtuali-Tee எனும் அப்ளிக்கேஷன் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த அப்ளிக்கேஷன் ஆனது ஒருவரை படம்பிடிக்கும் போது அவரை திரையில் காட்டுவதுடன் அவரின் உடல் பாகங்களையும் காட்டக்கூடியவாறு அமைக்கப்பட்டுள்ளது.

இது ஒரு மாயை(Virtual) தொழில் நுட்பத்தினை அடிப்படையாகக்கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது. மாணவர்களுக்கு பெரிதும் உதவியாக இருக்கும் இந்த அப்ளிகேஷனை iOS. Android சாதனங்களில் பயன்படுத்த முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

## கருவிலேயே ஆரம்பிக்கும் மூப்படைதல் செயன்முறை



எந்தவொரு உயிரினமும் பூமியில் ஜனித்த பின்னர் தமது இளமைப் பருவத்திலிருந்து முதுமைப்பருவத்தை அடைந்தே தீருகின்றன. மூப்படைதல் எனும் இச்செயன்முறையானது கருவில் இருக்கும்போதே ஆரம்பிப்பதாக ஆய்வு ஒன்றின்மூலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. எனினும் கருவுற்றிருக்கும் தாய்மாருக்கு மேற்கொள்ளப்படும் ஒக்ஸிஜனேற்றத்தின் (Antioxidant) மூலம் மூப்படைதல் செயன்முறையின் வேகம் குறைக்கப்படுகின்றது என பிரித்தானியாவின் கேம்பிரிஜ் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர் Beth Allison குறிப்பிட்டுள்ளார்.

ஆனால் மூப்படைதல் வேகம் இளம் வயதில் அதிகரிக்கின்றது எனவும், ஒக்ஸிஜனேற்றம் ஆனது குழந்தைகளுக்கு இருதய நோய்கள் ஏற்படுவதை குறைப்பதாகவும் ஆராய்ச்சியாளர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.


## குழந்தைகளின் குறட்டையினால் இத்தனை ஆபத்துக்களா?



குறட்டை என்பது பொதுவாக நம்மை சுற்றியிருப்பவர்களை தொந்தரவு செய்யக்கூடியது என்ற விடயம் மட்டுமே பலருக்கு தெரியும். ஆனால் இதனால் உடல் ஆரோக்கியத்திற்கு கெடுதல் ஏற்படுகின்றது என்பதை பலர் அறிந்திருக்க வாய்ப்பில்லை. சிறுவயதிலும் குழந்தைகள் குறட்டை செய்தால் பிரதானமாக அவர்களின் கற்றல் திறன் வெகுவாக பாதிப்படைகின்றது என சுவீடனின் Gothenburg பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர். 11 வயதுக்குட்பட்ட சுமார் 1.300 குழந்தைகளிடம் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சியில், அவர்கள் வாரத்திற்கு அதிகமான அளவில் குறட்டை விடுகின்றனர்.

இது தவிர தொடர்ச்சியாக குறட்டை செய்யும் குழந்தைகள் பகலில் களைப்படைந்தவர்கள் போல இருப்பதாகவும். அவதானிக்கும் திறன் குறைந்தவர்களாகவும், படுக்கையில் சிறுநீர் கழிப்பவர்களாகவும், வளர்ச்சியில் மந்த நிலை உடையவர்களாக காணப்படுவதாகவும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

## முடி நரைப்பதற்கு காரணமான ஜீன் கண்டுபிடிப்பு



நம்மில் பலருக்கு 30 வயதை அடையப்போகின்றோம் என்றால் தலை முடி நரைத்து விடுமே என்ற அச்சம்தான் முதலில் ஏற்படும். இவ்வாறு தலை முடி நரைத்தலுக்கு உள்ளானவர்கள் தமது முடியை மீண்டும் பழைய நிறத்திற்கு கொண்டுவருவதற்கு டை பயன்படுத்திவருவதுடன், இன்னும் சிலர் இயற்கை வைத்தியங்களை முயற்சி செய்து வருகின்றனர். இந்த தருணத்தில் தற்போது இவ்வாறானவர்களுக்கு சற்று நிம்மதியை தரும் செய்தி ஒன்று வெளியாகியுள்ளது. அதாவது முடி நரைத்தலுக்கு காரணமாக இருக்கும் ஜீனை லண்டனின் பல்கலைக்கழகக் கல்லூரி விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

இலத்தீன் அமெரிக்கா, ஆபிரிக்கா, ஐரோப்பிய நாடுகளைச்சேர்ந்த 6.000 பேரை அடிப்படையாக வைத்து மேற்கொண்ட ஆய்வின் மூலம் இந்த தகவல் வெளியாகியுள்ளது. குறித்த ஜீனை மாற்றம் செய்வதன் ஊடாக மீண்டும் முடியின் முன்னைய நிறத்தைப் பெற முடியும் எனவும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

## பயணிகள் ஜெட் விமானத்தை உருவாக்கும் முயற்சியில் நாசா



அமெரிக்காவைத் தளமாகக்கொண்டு செயற்பட்டுவரும் விண்வெளி ஆய்வு நிறுவனமான நாசா அதி நவீன பயணிகள் ஜெட் ஒன்றினை தயாரிக்கும் முயற்சியில் இறங்கியுள்ளது. 2020ம் ஆண்டில் பயன்பாட்டிற்கு விடப்படவுள்ள இந்த ஜெட் விமானமானது ஒலியை விடவும் 4.5 மடங்கு வேகம் உடையதாக இருப்பதுடன், தீங்கு விளைவிக்கும் இரைச்சலை முற்றாக நீக்கும் தொழில்நுட்பத்தினை உள்ளடக்கி இந்த விமானம் தயாரிக்கப்படவுள்ளது.

அதாவது மணிக்கு 1,234 கிலோமீற்றர் வேகத்தில் பயணம் செய்யக்கூடிய இந்த விமானத்தின் மூலம் லண்டனிலிருந்து நியூயோர்க்கிற்கு 3.5 மணி நேரத்தில் சென்றடைய முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

## நீங்கள் சாப்பிட வேண்டிய 6 உணவுகள்



அன்றாடம் ஆரோக்கிய உணவுகளை எடுத்துக்கொண்டால் உடலில் நோய் எதிர்ப்பு சக்தி அதிகரித்து ஆரோக்கியம் அதிகரிக்கும். எனவே, ஆரோக்கிய வாழ்க்கைக்கு நீங்கள் எடுத்துக்கொள்ள வேண்டிய உணவுகள். அப்பிளில் அன்டி-ஒக்ஸிடன்ட்ஸ், ஃபிளாவனாய்ட்கள், நார்ச்சத்து போன்றவை நீரிழிவு, நுரையீரல், பெருங்குடல், மார்பக, கல்லீரல் புற்றுநோய் ஏற்படாமல் இருக்க உதவுகிறது. மேலும், உடலில் கொலஸ்ட்ரால் அளவை குறைத்து உடல் எடை அதிகரிக்காமல் இருக்கவும் பயனளிக்கிறது.

தக்காளியில் விட்டமின் சி, ஈ, கே, ஏ சத்துக்களும், பொட்டாசியம், காப்பர், மெக்னீசியம் போன்றவை உயர்ரக அளவில் கிடைக்கிறது. தக்காளி சருமத்தை பொலிவாக வைத்துக்கொள்ள, இதய பாதிப்புகள் ஏற்படாமல் இருக்க உதவுகிறது. இதில் அதிகளவில் ஃபிளாவனொய்ட்கள் இருக்கின்றன. மேலும் மாதுளையில் இருக்கும் அண்டி-ஒக்ஸிடன்ட்ஸ் இதய நோயை எதிர்த்து போராடும் தன்மையுள்ளவை. ஆண்மை குறைபாடு உள்ளவர்கள், இரத்த அழுத்தம் உள்ளவர்கள் போன்றவர்கள் மாதுளையை உட்கொள்வதால் சிறந்த தீர்வுக் காண முடியும்.

செர்ரியில் இநதோசியனின் (anthocyanin) எனும் ஆண்டி-ஒக்ஸிடன்ட்ஸ் அதிகம் உள்ளது. இது கீல்வாதம், நீரிழிவு புற்றுநோய் போன்றவற்றை எதிர்த்து போராட நன்கு உதவுகிறது. செர்ரிகளில் பொட்டாசியம், விட்டமின் ஏ, நார்ச் சத்துக்கள் நிறைய இருக்கின்றன.

தர்பூசணி உடலில் நீர்வறட்சி ஏற்படாமல் இருக்க உதவும் சிறந்த உணவுகளில் இதுவும் ஒன்று. விட்டமின் ஏ, பி 6, சி மற்றும் அமினோ அமிலம் சத்து போன்றவை இதில் அதிகம். தர்பூசணியில் இருக்கும் லைகோபீன் எனும் அண்டி-ஒக்ஸிடன்ட்ஸ் இதய நோய்கள் மற்றும் கொலஸ்ட்ரோலை குறைக்க உதவுகிறது. சிவப்பு மிளகாயில் கேப்சாய்சின் எனும் அன்டி-ஒக்ஸிடன்ட் இருக்கிறது. இது இரத்த நாளங்களை வலுவாக வைத்துக் கொள்ள உதவுகிறது. மேலும், இது பசியைக் கட்டுப்படுத்தி உடல் எடையை குறைக்கவும் உதவுகிறது.

## புற்றுநோய் தாக்கத்தை குறைக்கும் அஸ்பிரின்



சம காலத்தில் மனிதர்களுக்கு சிம்ம சொப்பனமாக விளங்கும் நோய் புற்றுநோய் ஆகும். இந்நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மரணம் உறுதி என்ற நிலையில் இந்நோயை நெருங்கவிடாமல் முன்னெச்சரிக்கையாக இருப்பதே தப்பிக்க ஒரே வழியாகக் காணப்படுகின்றது. இவ்வாறான நிலையில் ஹவார்ட் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் மேற்கொண்ட ஆய்வு ஒன்றில் அஸ்பிரின் மாத்திரைக்கு புற்றுநோய் தாக்காமல் தடுக்கும் எதிர்ப்பு சக்தி இருப்பதாக கண்டுபிடித்துள்ளனர். 136.000 பேரைக்கொண்டு 32 வருடங்களாக மேற்கொள்ளப்பட்ட பல்வேறு ஆய்வுகளை அடிப்படையாக மேற்கொண்ட புதிய ஆய்விலேயே இந்த தகவல் வெளியாகியுள்ளது.

இதேவேளை இந்த அஸ்பிரின் மாத்திரையானது குடல் புற்றுநோய் தாக்கத்தை 19 சதவீதத்தினால் குறைப்பதாகவும். இரைப்பை புற்றுநோயை 15 சதவீதத்தினால் குறைப்பதாகவும் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். ஒட்டுமொத்தமாக 3 சதவீதத்தினால் அனைத்து வகை புற்றுநோய் தாக்கத்தை குறைக்கவல்ல இந்த மாத்திரையினை தொடர்ச்சியாக எடுத்துவருவதன் மூலமே பயன்பெற முடியும் எனவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

## சைக்கிள் சலவை இயந்திரம் கண்டுபிடிப்பு



துணி துவைக்க உதவும் சைக்கிள் சலவை இயந்திரம் ஒன்றை சீனாவை சேர்ந்த பல்கலைக்கழக மாணவர்கள் வடிவமைத்துள்ளனர். சைக்கிள் ஓட்டுவது என்பது உடலுக்கு சிறந்த உடற்பயிற்சியாக கருதப்படுகிறது. உடலின் இரத்த ஓட்டங்கள் சீரான முறையில் நடப்பதற்கு சைக்கிள் உடற்பயிற்சியினை அன்றாடம் மேற்கொள்வது நல்லது. இந்நிலையில், சீனாவின் Dalian தேசிய பல்கலைக்கழக மாணவர்கள் வடிவமைத்துள்ள சலவை இயந்திரம் சைக்கிள் வடிவில் உள்ளது.

இதில், சைக்கிளின் அடிப்புறத்தின் அடைக்கப்பட்டுள்ள ஒரு பகுதியில் அழுக்கு துணிகளை அடைத்து வைத்துக்கொண்டு, சைக்கிளின் பெடலை வேகமாக அழுத்தும்போது, உள்ளே உள்ள துணிகள் சுழலுகையில் அதில் உள்ள அழுக்கு நீங்கும். இது உடலுக்கு ஒருவித உடற்பயிற்சி மட்டுமல்லாமல் எதிர்காலத்தில் மின்சாரத்தினை சேமிப்பதற்கு ஒரு சிறந்த வழியாகும்.

கெமராவில் உள்ள Kit Lensஇல் இருந்து அடுத்த கட்டத்திற்கு [illegible] எடுத்து செல்வதற்கு எது மிகச்சிறந்த லென்ஸ் என்பது [illegible] அதற்கு பதில் தான் கானன் 50MM.

கனொான் 50MM(Canon) லென்சானது தற்போது மிகவும் விலை குறைவாக சந்தைப்படுத்தப்பட்டுள்ளதால் புகைப் படத்திறனை அடுத்த கட்டத்திற்கு எடுத்துச்செல்பவர்களுக்கு இது மிகவும் பயனுள்ளதாக இருக்கும். இது Prime lens என்பதால் இதன் Sharpness மிகவும் அதிகம். ஒளி குறைவான பகுதியிலும் சிறந்த புகைப்படத்தை எடுக்கமுடியும். இது பிரைம் லென்ஸ் என்பதால் ஸூம் செய்யும் வசதி இதில் இல்லை. இதனால் புகைப்படத்தின் தரத்தினை இது மிகவும் அதிகரிக்கச் செய்கிறது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விளையாட்டு உலகம்






## தொடர் தோல்விகளால் துவண்டு விடமாட்டோம் - மலிங்க



இலங்கை அணியின் தொடர் தோல்விகள் அணியின் செயற்பாட்டை எந்தவிதத்திலும் பாதிக்காது என்று ரி20 அணித்தலைவர் மலிங்க கூறியுள்ளார். இலங்கை ரி20 அணியின் தலைவர் மலிங்க காயத்தால் [illegible] அவதிப்பட்டு வருகிறார். இருப்பினும் ஆசியக்கிண்ணத் தொடரில் எமிரேட்ஸ் அணிக்கு எதிரான போட்டியில் களமிறங்கி சிறப்பாக செயற்பட்டார். ஆனால் அதன் பின்னர் நடந்த இந்தியா, வங்கதேச அணிகளுக்கு எதிரான போட்டியில் அவர் பங்கேற்கவில்லை. இதனால் அந்த 2 போட்டிகளிலும் தோல்வியடைந்த இலங்கை தொடரை விட்டு வெளியேறியது. இதுபற்றி இலங்கை ரி20 அணியின் தலைவர் மலிங்க கூறுகையில், இலங்கை அணியில் அனுபவமற்ற வீரர்கள் இருக்கின்றனர். இதுபோன்ற பெரிய போட்டிகளுக்கு அனுபவம் என்பது முக்கியமானது. ஆனால் அதேசமயம் எங்களிடம் திறமையான இளம் வீரர்கள் உள்ளனர். இன்னும் சில வருடங்களில் வலுவான ஒரு அணி அமையும்.

2012ம் ஆண்டு ஆசியக்கிண்ணப் போட்டியில் நாங்கள் 2-3 போட்டிகளில் தோற்று வெளியேறினோம். ஆனால் 2014ம் ஆண்டு நடந்த ரி20 உலகக்கிண்ண [illegible] இந்தக் கிண்ணம் [illegible] நடந்த சில [illegible] நடந்த நிலை [illegible] அதனால் 2-3 தோல்வி [illegible] அணியின் செயற்பாட்டை பாதிக்காது. ரி20 உலகக்கிண்ணப் போட்டிகளில் கலக்குவோம் என்று தெரிவித்துள்ளார்.

## கோடிகளில் புரளும் வீரர்கள்




பிரீமியர் லீக் போட்டிகளில் இந்திய வீரர்களை விட வெளிநாட்டு வீரர்கள் அதிக சம்பளம் பெறுவது தற்போது தெரிய வந்துள்ளது. இந்தியாவில் கடந்த 2008ம் ஆண்டு ரி20 பிரீமியர் லீக் போட்டிகள் தொடங்கப்பட்டது. இது ரசிகர்கள் மத்தியில் அமோக வரவேற்பு பெற்றது. இந்தப் போட்டியில் வெளிநாட்டு வீரர்கள் அதிக ஆதிக்கம் செலுத்துகின்றனர். இதேபோல் ஹொக்கி இந்தியா லீக், இந்தியன் சுப்பர் லீக் காற்பந்து, பிரீமியர் பேட்மின்டன், சாம்பியன்ஸ் டென்னிஸ், பிரீமியர் டென்னிஸ், புரோ கபடி, புரோ மல்யுத்தம் போன்றவை அடுத்தடுத்து ஆரம்பிக்கப்பட்டன. இவற்றில் கடந்த ஒரு ஆண்டாக வெளிநாட்டு வீரர்கள் பெற்ற சம்பள விபரம் அறிக்கையாக வெளியாகியுள்ளது.

இதன்படி, இந்த தொடர்களில் விளையாடிய 336 வெளிநாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு ரூ.527 கோடி சம்பளம் கொடுக்கப்பட்டுள்ளது. இது மொத்த தொகையில் (823 கோடி) 64 சதவீதமாகும். அதேசமயம் இந்தியா சார்பில் கலந்துகொண்ட வீரர், வீராங்கனைகளுக்கு ரூ.296 கோடி தான் சம்பளமாக கொடுக்கப்பட்டுள்ளது. இது மொத்த தொகையில் 36 சதவீதம் மட்டுமே. ரி20 பிரீமியர் லீக் போட்டிகளில் பங்கேற்கும் வீரர்கள் தான் அதிக சம்பளம் வாங்குவதாக ரசிகர்கள் நினைக்கிறார்கள். ஆனால் பிரீமியர் டென்னிஸ் வீரர்கள் தான் அதிக சம்பளம் வாங்குகின்றனர்.

அதன்படி, ஸ்பெயினின் நடால், சுவிஸின் ரோஜர் பெடரர் தான் அதிக சம்பளம் பெறுவதாக தெரியவந்துள்ளது. அவர்கள் இருவரும் தலா ரூ.25 கோடிக்கும் அதிகமாக சம்பளம் பெறுகின்றனர். மேலும், பிரீமியர் டென்னிஸ் போட்டியில் விளையாடும் 6 வீரர்கள் நிமிடத்திற்கு தலா 6 லட்சத்திற்கும் அதிகமாக சம்பளமாக பெறுகின்றனர். இதில் பிரிட்டன் டென்னிஸ் வீரர் ஆண்டி முர்ரே (நிமிடத்திற்கு ரூ.1.65 லட்சம்) முதலிடத்தில் உள்ளார். இந்திய வீரர்களில் மல்யுத்த வீரர் யோகேஷ்வர் தத் (நிமிடத்திற்கு ரூ.1.63 லட்சம்) முதலிடத்தில் இருக்கிறார். யுவராஜ் சிங் (நிமிடத்திற்கு 1.01 லட்சம்) 17வது இடத்தில் உள்ளார். மேலும் கோஹ்லி (29 இடம்), டோனி (34), ரெய்னா (48) ஆகியோர் நிமிடத்திற்கு ரூ.75 ஆயிரம் சம்பளமாக பெறுகின்றனர்.

## மீண்டு வந்து பதிலடி கொடுத்த கிரேட் காளி



இந்தியாவைச் சேர்ந்த மல்யுத்த வீரர் தலிப் சிங் ராணா என்பவர் 'தி கிரேட் காளி' WWE போன்ற போட்டிகளில் பங்கேற்று புகழ் பெற்றவர். இந்நிலையில் உத்தராகண்ட் மாநிலம் ஹால்ட்வானியில் நடைபெற்ற மல்யுத்த போட்டி ஒன்றில் அவர் கலந்துகொண்டார். அப்போது அமெரிக்காவின் மைக் நாக்ஸ், கனடாவின் புரூடி ஸ்டீல் ஆகியோர் தலிப் சிங்கை நாற்காலி மூலம் தாக்கியதில் அவர் படுகாயமடைந்தார். இதையடுத்து அருகில் உள்ள மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டு அவருக்கு தீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சையளிக்கப்பட்டது. பின்னர் மேல் சிகிச்சைக்காக டேராடூனில் உள்ள மருத்துவமனைக்கு அழைத்து செல்லப்பட்ட அவருக்கு தலையில் 7 தையல்கள் போடப்பட்டன.

இந்நிலையில் காயத்தில் இருந்து மீண்ட அவர் தன்னை தாக்கியவர்களை பழிக்குப்பழி வாங்குவேன் என்று சபதம் எடுத்தார். இதன்படி நடந்த ஒரு போட்டியில் 'தி கிரேட் காளி' அமெரிக்காவின் மைக் நாக்ஸ், அப்பல்லோ [illegible], கனடாவின் புரூடி ஸ்டீல் ஆகியோரை சந்தித்தார். மூவரும் ஆக்ரோஷத்துடன் விளையாடிய காளி, எதிராளிகளை நாற்காலியால் தாக்கி பதிலடி கொடுத்து வெற்றி பெற்றார்.


## ரூ.24 லட்சம் மதிப்புள்ள ஸ்டெம்பை சேதப்படுத்திய வங்கதேச வீரர்



பாகிஸ்தானுக்கு எதிரான போட்டியில் ஒளிரும் ஸ்டம்பை சேதப்படுத்திய வங்கதேச வீரர் சாகிப் அல் ஹசனுக்கு கடும் எச்சரிக்கை விடப்பட்டுள்ளது. தற்போது நடைபெற்றுவரும் ஆசியக்கிண்ணப் போட்டியில் ஒளிரும் ஸ்டம்ப் மற்றும் பெயில்ஸ் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இதில் ஸ்டெம்பின் மதிப்பு ரூ.24 லட்சம் ஆகும். அதேபோல் 2 பெயில்ஸின் மதிப்பு ரூ.50 ஆயிரம் ஆகும். ஆக 2 புறமும் சேர்த்து வைக்கப்பட்டுள்ள ஸ்டம்ஸ் மற்றும் பெயில்ஸின் மதிப்பு ரூ.50 லட்சம் ஆகும். வீரர்கள் இதை [illegible] தொடக்கூடாது என்று [illegible] எச்சரித்துள்ளது.

இந்நிலையில் ஆசியக்கிண்ண [illegible]ரில் வங்கதேசம்- பாகிஸ்தான் அணிகள் மோதிய போட்டி நடைபெற்றது. [illegible] பாகிஸ்தான் பந்துவீச்சாளர் [illegible] பந்தில் வங்கதேச வீரர் சாகிப் அல் [illegible] 8 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். [illegible] விரக்தியில் துடுப்பாட்ட மட்டையால் ஸ்டெம்பை தாக்கினார். இது ஐசிசி ஒழுக்க விதி லெவல் 1ன் படி குற்றம். பின்னர் சுதாகரித்துக்கொண்ட [illegible] கள நடுவர்களிடம் தனது தவறுக்கு மன்னிப்புகேட்டார். பின்னர் நடத்தப்பட்ட விசாரணையில் அவர் தனது தவறை ஒப்புக்கொண்டார். இருப்பினும் அவருக்கு போட்டிக் கட்டணத்தில் இருந்து 30 [illegible] வீதம் அபராதம் விதிக்க வாய்ப்புள்ளது.


## நிறைவேறாத ஆசையுடன் மரணமடைந்த மார்ட்டின் குரோவ்



நியூசிலாந்து கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் மார்ட்டின் குரோவ், புற்றுநோயால் பாதிக்கப்பட்டு மரணமடைந்தார். மிகச்சிறந்த கிரிக்கெட் வீரராக வலம்வந்த மார்ட்டின் குரோவின் வாழ்க்கையில் திடீரென்று விதி விளையாடியது. கடந்த 2012ம் ஆண்டு அவருக்கு புற்றுநோய் முற்றிய நிலையில் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. இதனையடுத்து கடந்த 3 ஆண்டுகளாக அவருக்கு தீவிர சிகிச்சை அளித்து வந்த நிலையில் ஒக்லாந்து மருத்துவமனையில் மரணமடைந்தார்.

கடந்த ஆண்டு நடந்த உலகக்கிண்ணப் போட்டியில் நியூசிலாந்து அணி முதல்முறையாக இறுதிப்போட்டிக்கு முன்னேறியது. அப்போது இந்தப் போட்டியை பார்க்க மார்ட்டின் குரோவ் மைதானத்திற்கு வந்திருந்தார். "நியூசிலாந்து அணி கிண்ணம் வெல்லும் என்றும், இதுதான் நான் நேரில் பார்க்கும் கடைசிப்போட்டி" என்றும் மார்ட்டின் குரோவ் அப்போது உருக்கமாகக் கூறினார். ஆனால் இறுதிப்போட்டியில் அவுஸ்திரேலியாவிடம் தோற்ற நியூசிலாந்து சாம்பியன் பட்டத்தை தவறவிட்டது. இந்நிலையில் மார்ட்டின் குரோவ் (53) தனது கடைசி ஆசை நிறைவேறாமலே மரணமடைந்துள்ளார். நியூசிலாந்து அணிக்காக 13 ஆண்டுகள் கிரிக்கெட் விளையாடிய மார்ட்டின் குரோவ் 77 டெஸ்ட் போட்டிகளில் 5,444 ஓட்டங்களையும், 143 ஒருநாள் போட்டிகளில் 4,704 ஓட்டங்களையும் எடுத்துள்ளார்.


## கிரிக்கெட் வீரர்களை விட அதிக சம்பளம் வாங்கும் நடுவர்கள்




கிரிக்கெட் போட்டிகளில் பணியாற்றும் நடுவர்களின் சம்பள பட்டியலை இந்திய கிரிக்கெட் வாரியம் வெளியிட்டுள்ளது. இதன் படி ஒரு போட்டியில் நடுவர்களுக்கு அனைத்தும் சேர்த்து கிட்டத்தட்ட ரூ.2.85 லட்சம் ஊதியமாக கிடைக்கிறது. சர்வதேச ஒருநாள் மற்றும் ரி20 போட்டிகளில் பணியாற்றும் [illegible] நடுவர் மற்றும் 3வது, 4வது நடுவர்களுக்கு ரூ.1,82,500 லட்சம் ஊதியமாக வழங்கப்படுகிறது. ஆனால் ரி20 போட்டியில் விளையாடும் வீரர்களுக்கு ரூ.1,50,000 லட்சம் தான் வழங்கப்படுகிறது.

இதன் படி ரி20 போட்டியில் நடுவர்களுக்கு அதிக சம்பளம் கிடைக்கிறது. [illegible] போட்டியிலும் ஆடுகள நடுவர்களுக்கு ரூ.1,82,500 லட்சம் ஊதியமாக கொடுக்கப்படுகிறது. அதேவேளை 3வது மற்றும் 4வது நடுவர்களுக்கு [illegible] ரூ.3லட்சம், ரூ.1 லட்சம் கிடைக்கும். உள்நாட்டு போட்டிகளில் நடுவர்கள் [illegible]வில் இடம் பெற்றுள்ள நடுவர்களுக்கு [illegible] போட்டிக்கு ரூ.20,000 மற்றவர்களுக்கு ரூ.15,000 வழங்கப்படுகிறது.

## அப்ரிடி ஒரு பைத்தியம் எனத் திட்டித்தீர்த்த நடிகை



இந்திய அணியுடனான தோல்வியைத் தொடர்ந்து பாகிஸ்தான் அணித்தலைவர் அப்ரிடியை அந்நாட்டு நடிகை ஒருவர் பைத்தியம் என்று திட்டித் தீர்த்துள்ளார். பாகிஸ்தான் தொலைக்காட்சி நடிகை தமன்னா பலூர் என்பவர் சில தினங்களுக்கு முன்பு இந்திய பிரதமர் மோடியை அவமரியாதையாகப் பேசி [illegible] பிரிட்டல் விருத்தும் வீடியோ ஒன்றை வெளியிட்டிருந்தார். இது இணையத்தில் [illegible] ஆகி பெரும் [illegible] ஏற்படுத்தியது.

இந்நிலையில் ஆசியக்கிண்ண போட்டியில் இந்தியாவுக்கு எதிரான போட்டியில் பாகிஸ்தான் தோற்றதை அடுத்து [illegible] பேசியுள்ளார். இது குறித்து அவர் கூறுகையில், நான் ஏற்கனவே [illegible] னேன். இந்த மாதிரி ஒரு பைத்தியத்தை அணியின் தலைவராக வைத்துக் [illegible] நாம் எதையும் வெல்ல முடியாது. [illegible] ரி20 உலகக்கிண்ணம் [illegible]றது. இந்த நிலையில் நமது [illegible] நிலையைப் பாருங்கள். எனக்கு [illegible]மாக இருக்கிறது என்று கூறியுள்ளார்.

ஆசியக்கிண்ணத் தொடரில் மோசமாக விளையாடிய பாகிஸ்தான் அணியை முன்னாள் வீரர்களும், ரசிகர்களும் கடுமையாக விமர்சித்து வருகின்றனர். இந்தியாவுக்கு எதிரான போட்டியில் மோசமாக விளையாடி 5 விக்கெட்டுகளால் தோற்ற பாகிஸ்தான், வங்கதேச அணிக்கு எதிராகவும் தோற்று தொடரைவிட்டு வெளியேறியது. இதனால் பாகிஸ்தானின் முன்னாள் வீரர்களும், அந்நாட்டு ரசிகர்களும் அந்த அணியை கடுமையாக விமர்சித்து வருகின்றனர். பாகிஸ்தான் அணியின் துடுப்பாட்டம் இந்தியாவுக்கு எதிராகவும் சொதப்பியிருந்த நிலையில், இப்படி அணி மொத்தமாக வீழ்ச்சியடையும் என்று நினைக்கவில்லை என்று முன்னாள் வீரர் சோயிப் அக்தர் தெரிவித்துள்ளார். பாகிஸ்தான் டெஸ்ட் அணித்தலைவர் [illegible] கூறுகையில், பந்துவீச்சாளர்கள் சிறப்பாக செயற்பட்டாலும், துடுப்பாட்ட வீரர்கள் சரியாக ஆடவில்லை என்று தெரிவித்துள்ளார். இதேபோல் ஜாவித் மியான்டட், முகமது யூசுப் போன்ற பல முன்னாள் வீரர்களும் பாகிஸ்தான் துடுப்பாட்ட வீரர்களை கடுமையாக விமர்சித்துள்ளனர். இதற்கிடையில் பாகிஸ்தான் ரசிகர்களோ வீரர்களை [illegible] டுவிட்டரில் பதிவுகளை போட்டு வருகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகச் செய்திகள்

## பட்டப்பகலில் பொலிஸ் நிலையத்தை தாக்கிய பெண் போராளிகள்



துருக்கியில் பட்டப்பகலில் பெண் போராளிகள் சிலர் பொலிஸ் நிலையத்தை துப்பாக்கியால் தாக்கிய சம்பவம் அங்கு பெரும் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. துருக்கி தலைநகர் இஸ்தான்புல் பகுதியில் அமைந்துள்ள இந்த பொலிஸ் நிலையத்தை திடீரென்று சில பெண் போராளிகள் சூழ்ந்து தாக்கியுள்ளனர். இந்த களேபரத்தின் இடையே அப்பகுதியில் கூடிய பொதுமக்கள் மீதும் அவர்கள் துப்பாக்கியால் தாக்குதல் நடத்தியதாகவும் கூறப்படுகிறது.

போராளிகளில் ஒருவர் கையெறி குண்டுகள் வீசி அந்த பொலிஸ் நிலையத்தை தாக்கியபோது, அந்த சூழலில் இருந்த இன்னொருவர் துப்பாக்கியால் சரமாரியாகச் சுட்டுள்ளார்.

போராளிகளின் இந்த தாக்குதல் நடவடிக்கையில் இதுவரை உயிர்ச்சேதம் எதுவும் ஏற்படவில்லை என அங்குள்ள ஊடகங்கள் தெரிவித்துள்ளன. இதனிடையே பொலிஸ் நிலையத்தில் இருந்த பொலிசார் இந்தத் தாக்குதலை அடுத்து சுதாரித்துக்கொண்டு எதிர் தாக்குதல் நடத்தியுள்ளனர். இதனையடுத்து அப்பகுதியில் இருந்த அந்த போராளிகள் இருவரும் திடீரென்று மாயமானதாக நேரில் பார்த்த பொதுமக்கள் தெரிவித்துள்ளனர்.

மேலும் பொலிஸ் தாக்குதலில் பெண் போரளி ஒருவருக்கு காயப்பட்டிருக்கலாம் எனவும், தப்பிய அவர்கள் வெகுதூரம் சென்றிருக்க வாய்ப்பில்லை எனவும் தெரிவித்தனர். தொடர்ந்து போராளிகளை கைது செய்யும் நோக்கில் பொலிசார் அப்பகுதி முழுவதும் தீவிர தேடுதல் வேட்டையை முடுக்கிவிட்டுள்ளனர். தாக்குதலின் காரணம் குறித்தும், எந்த குழுவினர் தாக்குதலில் ஈடுபட்டனர் என்பது குறித்தும் இதுவரை அதிகாரப்பூர்வ தகவல்கள் வெளியாகவில்லை.

## பாலியல் உறவால் ஜிகா வைரஸ் பரவுகிறதா?



நியூசிலாந்தில் இந்த வருடம் 71 பேருக்கு ஜிகா வைரஸ் பாதிப்பு ஏற்பட்டுள்ளது உறுதி செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில், ஜிகா வைரஸ் பாலியல் உறவின் வழியாக ஆணிடமிருந்து, அவரது துணைக்கு செல்வது குறித்து நியூசிலாந்து அதிகாரிகள் ஆய்வுசெய்து வருகின்றனர் என அந்நாட்டு சுகாதாரத்துறை அமைச்சகம் கூறியுள்ளது. இதுபற்றி சுகாதாரத்துறை அமைச்சக செய்தி தொடர்பு அதிகாரி டொன் மேக்கீ வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில், நியூசிலாந்தை சேர்ந்த நபர் ஒருவர் வெளிநாட்டிற்கு சென்று திரும்பியுள்ளார். அவருக்கு ஜிகா வைரஸ் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. அந்த நபருக்கு வைரஸ் பாதிப்பு கண்டறியப்பட்ட நிலையில், அவரது துணைவிக்கும் வைரஸ் தொற்று ஏற்பட்டுள்ளது கண்டறியப்பட்டு உள்ளது.

அந்த பெண்ணிற்கு பாதுகாப்பற்ற பாலியல் உறவு வழியே வைரஸ் பரவி இருக்கக்கூடும் என்ற வகையில் ஆய்வு நடத்தப்பட்டு வருகிறது. அல்லது அந்த ஆணின் துணி பையில் கொசு ஒன்று நுழைந்து அது அந்த பெண்ணை கடித்து இருக்கக்கூடும் என்ற அடிப்படையிலும் அதிகாரிகள் ஆய்வு நடத்தி வருகின்றனர் என சுகாதார அமைச்சகம் கூறியுள்ளது.

## குழந்தைகளை துருப்புச்சீட்டாக பயன்படுத்தும் அகதிகள்



ஐரோப்பிய நாட்டிற்குள் நுழைவதற்காக சிரியா, ஈராக் மற்றும் ஆப்கான் நாட்டைச் சேர்ந்த அகதிகள் தங்கள் குழந்தைகளை துருப்புச்சீட்டாக பயன்படுத்துகின்றனர். சிரியா, ஈராக் மற்றும் ஆப்கான் நாடுகளில் நடக்கும் யுத்தம் காரணமாக, அந்நாட்டைவிட்டு வெளியேறும் மக்கள், Greek, Macedonia போன்ற நாடுகளின் வழியாக ஐரோப்பிய நாடுகளுக்குள் நுழைகிறார்கள். இதனால், இருநாடுகளுக்கும் இடையேயான எல்லைப்பகுதியில் மக்கள் நுழையாதவாறு தடுப்பு வேலிகள் போடப்பட்டுள்ளன.

இந்நிலையில், Greek மற்றும் Macedonia ஆகிய இருநாடுகளுக்கு இடையேயான எல்லைப்பகுதியில் அமைந்துள்ள Idomeni முகாமில் உள்ள அகதிகள், வேலிகளுக்குள் பின்புறமாக நின்றுகொண்டு, தாங்கள் குழந்தைகளைக்காட்டி, தங்களுக்கு வழிவிடுமாறு கேட்கின்றனர். அந்த முகாமில் 2,500 குழந்தைகள் உட்பட 10,000 பேர் தங்கியுள்ளனர்.

அதுமட்டுமன்றி ஒவ்வொருநாளும் நூற்றுக்கணக்கான அகதிகள் வந்த வண்ணம் உள்ளனர். இதற்கிடையில், அங்கு தங்கியிருக்கும் பெற்றோர்கள், தங்கள் குழந்தைகளை கையில் தூக்கிவைத்துக்கொண்டு, நீங்கள் எங்களுக்கு வழிவிடாதுவிட்டாலும் பரவாயில்லை, எங்கள் குழந்தைகள் வாழவேண்டும், எனவே அவர்களுக்கு வழிவிடுங்கள் என்று கெஞ்சுகின்றனர். மேலும், 5 டிகிரி வெப்பநிலையில் இவர்கள் வசித்துவருவதால் குளிரால் உறைந்துவிடுகின்றனர். மேலும் இவர்கள் தங்கியிருக்கும் முகாமில் அமைக்கப்பட்டுள்ள கூடாரத்தில் 8பேர் வரை தங்கியிருக்கின்றனர். உணவு, தண்ணீருக்காக உதவி அமைப்புகளினை அன்றாடம் எதிர்பார்த்துக் காத்திருக்கும் இவர்கள், 3 நாட்களுக்கு ஒரு முறைதான் சாப்பிடுகின்றனர். Zineb Hosseini என்ற சிரிய தயார் கூறியதாவது, எங்கள் குடும்பம் குளிரால் உறைகிறது, சரியாக தூங்கியும், சாப்பிட்டும் பல நாட்கள் ஆகின்றன, ஒருமுறை நாங்கள் எல்லையை கடக்க முயற்சிக்கையில், எல்லை வீரர்கள் வீசிய கண்ணீர் வெடிகுண்டால் எனது 4 வயது மகள் 45 மணிநேரம் சுயநினைவற்று கிடந்தாள். இந்த பயணம் குழந்தைகளுக்கு வன்முறை நிறைந்த ஒன்றாக உள்ளது, பிரித்தானிய NGO 2,000 குழந்தைகளை பொறுப்பெடுத்துள்ளது, இருப்பினும் 1,000 குழந்தைகள் ரோட்டில் நிற்கின்றனர் என்று கூறியுள்ளார்.

## பறக்கும் விமானத்தில் உயிரிழந்த விமானி



சவுதி அரேபியாவில் பறக்கும் விமானத்தில் வைத்து விமானி ஒருவர் உயிரிழந்த சம்பவத்தால் பயணிகள் அதிர்ச்சியை வெளிப்படுத்தியுள்ளனர். சவுதி அரேபியாவின் பிஷா விமான நிலையத்தில் இருந்து 220 பயணிகளுடன் புறப்பட்டு சென்றுள்ளது இந்த விமானம். தலைநகர் ஜெகார்த்தா நோக்கி சென்றுள்ள இந்த விமானத்தின் முக்கிய விமானிக்கு திடீரென்று உடல் நலம் பாதிக்கப்பட்டதாக கூறப்படுகிறது. இதனையடுத்து திடீரென்று நிலைகுலைந்த அந்த விமானி அவரது இருக்கையிலேயே திடீரென்று உயிரிழந்ததாக கூறப்படுகிறது.

விமானி உயிரிழந்த சம்பவம் அறிந்ததும் உடனடியாக கட்டுப்பாட்டு அறைக்கு தொடர்புகொண்ட அவர் நடந்த நிகழ்வினை விபரித்துள்ளார். இதனிடையே விமானி உயிரிழந்துள்ள சம்பவம் பயணிகளுக்குத் தெரியவரவே, பயணிகள் பகுதியில் சலசலப்பு ஏற்பட்டுள்ளது. பயணிகளில் சிலர் அதிர்ச்சியில் செய்வதறியாது திகைத்து நின்றுள்ளதாகவும் கூறப்படுகிறது.

இந்த நிலையில் தொடர்ந்து கட்டுப்பாட்டு அறை அதிகாரிகளின் ஆலோசனைப்படி செயற்பட்ட துணை விமானி, ஜெகார்த்தா விமான நிலையத்தில் விமானத்தை பத்திரமாக தரையிறக்கியுள்ளார். விமான நிலையத்தில் தயார் நிலையில் நின்றிருந்த மருத்துவ குழுவினர் உயிரிழந்த விமானியின் உடலை கைப்பற்றியுள்ளனர். துணை விமானியின் துணிச்சல் மிகுந்த செயற்பாடுகள்தான் பயணிகளின் அச்சத்தைப் போக்கி விமானத்தை பத்திரமாக தரையிறக்கக் காரணம் என விமான நிலைய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## தங்கையை 140 முறை கத்தியால் குத்திக்கொன்ற அக்கா



ரஷ்யாவில் மொடலாக இருக்கும் தனது தங்கையை அவரது சகோதரி 140 முறை கத்தியால் குத்தி கொலை செய்துள்ளது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. ரஷ்யாவின் பிரபல மொடலான Stefania Dubrovina(17) இளம் வயதிலேயே, பிரபலமான இவர் மீது இவரது சகோதரியான Elizavetaக்கு பொறாமை ஏற்பட்டுள்ளது. Elizaveta தனது தங்கையின் பேஷன் ஸ்டைலைக் கடைப்பிடிக்கிறார் என்று சமீபத்தில் பத்திரிகையில் செய்தி வெளியானது. இதற்கிடையில், Stefania தங்கியிருக்கும் குடியிருப்பிற்கு அளவுக்கு அதிகமாக மது அருந்திவிட்டு சென்ற Elizaveta, ஒரு ஆணுடன் சேர்ந்து தனது தங்கையை கொடூரமான முறையில் கொலை செய்துள்ளார். கண்ணை தோண்டி எடுத்தும், காதினை அறுத்தும் என 140முறை உடல் பாகங்களில் கத்தியால் குத்தி கொலை செய்துள்ளார். இவரது உடலினை கைப்பற்றியுள்ள பொலிசார் பிரேத பரிசோதனைக்கு உட்படுத்தியுள்ளனர். ஆனால், இந்த கொலைக்கும் தனக்குமஎவ்வித தொடர்பும் இல்லை என்று Elizaveta கூறியுள்ளார்.

இதற்கிடையில், showman Stas Baretsky என்ற இசையமைப்பாளர் இதுகுறித்து கூறுகையில், Stefania இறப்பதற்கு சில மணிநேரங்களுக்கு முன்னர் அவளுடன் நான் தொடர்புகொண்டேன், அப்போது அவள் அழுதாள். நான் என்ன நடந்தது என்று கேட்டேன். அதற்கு அவள் ஒன்றுமில்லை என்று கூறினாள். என்னால் அவள் சூழ்நிலையை புரிந்துகொள்ளமுடிந்தது. ஏனெனில், அவள் ஆபாச படம் நடிப்பது, நிர்வாணமாக புகைப்படத்திற்கு போஸ் கொடுத்தது என போன்றவற்றால் பல்வேறு பிரச்சினைகளை சந்தித்தார். அவளது மரணத்திற்கு இதுவே ஒரு காரணமாகும். அவளுடைய சகோதரிக்கும், இந்த மரணத்திற்கும் எவ்வித தொடர்பும் இருக்காது எனக்கூறியுள்ளார்.

## யாஸிதி சிறுமியின் மோசமான நிலை – ஜேர்மன் மருத்துவர்



ஐஎஸ் தீவிரவாதிகளின் பலாத்கார பிடியில் இருந்து தப்பிப்பதற்காக சிறுமி ஒருவர், தன்னைத்தானே எரித்துக்கொண்டதில் அவரது முகம் மோசமாக சேதமடைந்துள்ளது என அவருக்கு சிகிச்சை அளித்துள்ள ஜேர்மன் மருத்துவர் தெரிவித்துள்ளார். யாஸிதி பிரிவினர் மீது இனவெறி தாக்குதல் நடத்தும் ஐஎஸ் தீவிரவாதிகள், அப்பெண்களை நடத்தும்விதம் மிகக்கொடூரமான ஒன்றாகும். சமீபத்தில், சிறுமி ஒருவர், ஐஎஸ் தீவிரவாதிகள் தன்னை பலாத்காரம் செய்துவிடக்கூடாது என்ற நோக்கில் தன்னைத்தானே தீவைத்து எரித்துக்கொண்டார். தற்போது, அச்சிறுமிக்கு ஜேர்மனியின் Baden-Wurttemberg மாநிலத்தில் உள்ள Jan Ilhan Kizilhan என்ற மருத்துவர் சிகிச்சை அளித்துள்ளார். இதுகுறித்து மருத்துவர் கூறியதாவது, சிகிச்சைக்காக 1,100பேர் ஜேர்மன் நாட்டிற்கு அழைத்து வரப்பட்டுள்ளனர். தீவைத்து எரித்துக்கொண்டால் தனது உடல் பாகங்கள் பார்ப்பதற்கு அருவருப்பாக இருக்கும். எனவே தீவிரவாதிகள் தன்னை பலாத்காரம் செய்யமாட்டார்கள் என்ற நோக்கில் அச்சிறுமி இவ்வாறு செய்துள்ளார்.

ஆனால், அவளது காது மற்றும் மூக்கினை அவர் இழந்துள்ளார், இன்னும் அவளுக்கு 30 தோல் சிகிச்சை மற்றும் எலும்பு அறுவை சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளன. இவ்வாறு ஐஎஸ் தீவிரவாதிகளால் சீரழிக்கப்பட்ட பெண்கள், ஒரு கட்டத்தில் அவர்களிடம் இருந்து தப்பித்து வருகையில், அவர்களது வாழ்க்கை மறுவாழ்வு பெறுவது என்பது கேள்விக்குறியே. ஏனெனில், இதுபோன்ற கொடுமைகளை அனுபவித்த பெண்கள் பாலியல் தொழிலுக்கு தங்களை உட்படுத்திக்கொள்கின்றனர் என்று மருத்துவர் கூறியுள்ளார்.

## மாயமான MH370 விமானத்தின் பாகங்கள் கண்டுபிடிப்பு

மலேசியாவின் ஏர்லைன்ஸ் நிறுவனத்துக்கு சொந்தமான MH370 விமானத்தின் பாகங்கள் ஆபிரிக்காவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். கடந்த 2014ஆம் ஆண்டு மார்ச் 8ம் திகதி 239 பயணிகளுடன் மலேசியாவிலிருந்து பீஜிங் நோக்கிச் சென்ற மலேசிய விமானம் எம்.எச்.370 ராடாரிலிருந்து திடீரென மறைந்தது. அதன் பின்னர், அந்த விமானம் இந்தியப் பெருங்கடலில் விழுந்துவிட்டது என்றும் அதில் பயணம் செய்த பயணிகள் அனைவரும் [illegible] மலேசிய பிரதமர் அதிகாரபூர்வமாக அறிவித்தார். அதன் பின்னர், அதன் பாகங்களை தேடும் பணி இன்றுவரை தீவிரமாக நடைபெற்றுவருகிறது.

இந்நிலையில், ஆபிரிக்காவின் Mozambique என்ற கடற்கரை பகுதியில் விமானத்தின் பாகங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அந்த பாகங்களை ஆராய்ச்சிக்காக மலேசியாவிற்கு அனுப்பிவைத்துள்ள அமெரிக்க அதிகாரிகள், இப்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ள பாகம் போயிங் 777 ரக விமானத்தைச் சேர்ந்தது என்பதால், இது MH370 விமானத்தின் பாகங்களாக இருக்க வாய்ப்புள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விந்தை உலகம்

## த்ரிலிங்கான பயணத்திற்கு ஜப்பான் நாட்டுக்குச் செல்லுங்கள்

பல்வேறு தொழில்நுட்பங்களை பயன்படுத்தி சாலைகளை அமைத்துள்ள ஜப்பான் நாடு. Eshima Ohashi என்ற பாலத்தின் மூலம் உலக நாடுகளை திரும்பிப்பார்க்க வைக்கிறது என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை. இந்தப் பாலம் உலகளவில் மூன்றாவது இடத்தில் உள்ளது. ஏனெனில், அந்த அளவுக்கு ஒரு த்ரிலிங்கான பயணத்தை பயணிகளின் மனதில் பதியவைக்கிறது.



## கடலுக்குள் திடீரென்று தோன்றிய நிலப்பரப்பால் வியப்பில் உறைந்து போன படகோட்டிகள்

டோங்கா தீவுகளுக்கு அருகாமையில் கடலுக்குள் திடீரென்று தோன்றிய நிலப்பரப்பினைக்கண்டு அப்பகுதியில் சென்று கொண்டிருந்த படகோட்டிகள் வியப்பில் ஆழ்ந்துள்ளனர். டோங்கா தீவுகளுக்கு அருகாமையில் அமைந்துள்ளது vava'u தீவு. இந்தத் தீவின் அருகே சில படகோட்டிகள் சென்று கொண்டிருந்ததாக கூறப்படுகிறது. அப்போது அவர்களது படகில் இருந்து தொலைவில் கடற்பரப்பில் மாற்றங்கள் நிகழ்வதை அவர்களால் காண முடிந்தது. இதில் வியப்படைந்த அந்த படகோட்டிகள், அந்த பகுதிக்கு தங்கள் படகினை செலுத்தியுள்ளனர், ஆனால் திடீரென கடலுக்கடியில் இருந்து எரிமலை ஒன்று வெடித்துள்ளது. அந்த எரிமலை யில் இருந்து வெளியான பாறைத்துகள்கள் அப்பகுதி முழுவதும் கடற்பரப்பின் மீது மிதக்கத்துவங்கியுள்ளது. மேலும் அந்த பாறைத்துகள்கள் உறைந்து நீரால் சூழ்ந்த அந்த பகுதி திடீரென்று நிலப்பரப்பாக உருமாறத் துவங்கியுள்ளதை அந்த மாலுமிகள் பார்த்துள்ளனர்.

கடலுக்கடியில் இதுபோன்ற நிகழ்வுகள் ஆண்டுக்கு பலமுறை நடைபெறுவதுண்டு, ஆனால் அந்த நிகழ்வு இதுவரை எவரும் சென்றிராத பகுதிகளில் மட்டுமே நடைபெற்று வந்தது. டோங்கா பகுதியில் உருவான நிலப்பரப்பு குறித்து கேள்வியுற்ற அறிவியல் ஆய்வாளர்கள் அந்த பகுதியை ஆய்வுசெய்ய முடிவு செய்தனர். ஆனால் அவர்களால் அந்த நிகழ்வு நடந்து 6 மாதங்கள் கடந்த பின்னரே அப்பகுதிக்கு செல்ல முடிந்துள்ளது, இதனால் அந்த நிலப்பரப்பின் பெரும்பகுதி கடலடிபட்டு கலைந்திருந்தது. நிலப்பரப்பு புதிதாய் உருவாகி 8 மாதங்கள் கடந்து 2000 மைல்கள் தொலைவில் இருக்கும் அவுஸ்திரேலியா கடற்பரப்பில் பாறைத்துகள்கள் கரை ஒதுங்கியதாகக் கூறப்படுகிறது.






## ஆவி பறக்க ஓடும் கொதிக்கும் ஆறு

குளிரான ஆறுகள்தான் வழக்கமானது. ஆனால், அமேசன் மழைக்காடுகளுக்கு மத்தியில் ஆவி பறக்க ஒரு கொதிக்கும் ஆறு பாய்கிறது. வேகமாக ஓடுகிற ஆறு. அதன் கரையில் வாழும் மரங்களும் விலங்குகளும் வேகுமாறு ஓடுகிறது. ஒரு வழக்கத்தை ஏற்படுத்துவது இயற்கைதான். அதற்கு நேர்மாறாக, ஒரு விதிவிலக்கை உண்டாக்கி வியக்கவைப்பதும் அதுவேதான். இந்த நம்பமுடியாத நதி, தென் அமெரிக்க நாடான பெருவில் Mayantuyacu என்ற பகுதியில் உள்ள ஆழமான அமேசன் மழைக்காடுகளுக்கு இதயம் போல மத்திய பகுதியில் உள்ளது.

இது சிறிய ஆறு ஆனாலும், இதற்கு, மொத்த நீர் பரப்பும் கொதிக்கும் அளவுக்கு மிகப்பெரிய மதிப்பிலான வெப்பம் பூமியிலிருந்து எப்படி கிடைக்கிறது என்பதுதான் வியப்பு. ஆனால், இந்த ஆற்றுக்கு வெகுதூரத்தில்தான் உயிரோட்டமான எரிமலைகள் உள்ளன. இந்த ஆறு Andres Ruzo என்ற பூகோள ஆய்வாளரால் முதன்முதலாக கண்டுபிடிக்கப்பட்டு உலகிற்கு தெரியப்படுத்தப்பட்டது. இந்த ஆற்றில் குதிக்கும் தவளை போன்ற சில உயிரினங்கள் குதித்த மறுகணமே வெந்துவிடுகின்றன. நீரின் தன்மை தெரியாமல் குதித்துவிட்டோமே என்ற குழப்பமான விழிகளோடு சிறிதுநேரம் தவித்து, வெள்ளை நிறத்தில் விறைத்துபோகின்றன. பிறகு, திறந்த அதன் வாய்க்குள்ளும் நீர் சென்று உள்ளுறுப்புகளும் வெந்துவிடுகிறது. எலும்பு உட்பட வேகவைத்த இறைச்சிபோல ஆகிவிடுறது. இந்த நதியின் வெந்நீர் வினைக்கு காரணம், பூமிக்கடியில் உள்ள வெப்ப ஊற்றுகள்தான் என நம்பப்படுகிறது.



## சிங்கம், புலி மற்றும் கரடி மூன்றும் நண்பர்களாக வாழ்ந்து வரும் அதிசயம்

ஒரு சிங்கம், புலி மற்றும் கரடி குட்டி 2001 ஆம் ஆண்டில் ஜோர்ஜியா அடித்தளத்தில் இருந்து மீட்கப்பட்டது. மூவரும் நோவாவின் பேழை விலங்கு தங்குமிடத்தில் ஒன்றாக வாழ்கின்றன. "சகோதர" தன்மையுடன் வாழ்ந்து வருவதால் அவற்றை பிரிக்காமல் ஒன்றாக விட்டுள்ளனர்.

















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை இலக்கம் 154A, தேக்கவத்தையில் அமைந்துள்ள தென்றல் அச்சகத்தில் அச்சிட்டு, தினப்புயல் நிறுவனத்தால் 06.03.2016 அன்று வெளியிடப்பட்டது.